


tamilmagazines.blogspot.com


INDIA'S NO.1 PU FOOTWEAR
எனது காலடிகள்
எனது பெருமை
Art No:3030
MRP. ₹ 339.00*
Art No:141
MRP. ₹ 234.00*
Art No:607
MRP. ₹ 249.00*
VKC pride
அனைத்து முன்னணி காலணி விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.
விகேசி ப்ரைடு
Venkesy Footcare (India) Pvt. Ltd., Coimbatore - 641 050. E-mail: contact@vkcgroup.com www.vkcgroup.com




எட்டுத்திக்கும் 'ஜில்லா' அதிர
ஜல்லிக்கட்டு துள்ளி விளையாட
எல்லோருக்கும் தைப் பொங்கல்
வாழ்த்துங்கண்ணா. அந்த ஆண்டவன்
உங்களுக்கு அருள் தர மனமார
வேண்டிக் கொள்கிறேங்கண்ணா.

அன்புடன்



குமுதம் வாசகர்களுக்கும் உலகெங்கிலும் உள்ள தமிழ்
ரசிகப் பெருமக்களுக்கும் என் இதயம்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்களை
பதியமிடுகிறேன்!

# பொங்கல் தின நல்வாழ்த்துக்கள்

# உழைப்பவர்களை உயர வைக்கும் தோழன்




## வியாபாரம் மற்றும் சேவை கடன்

- தகுதி : தனிநபர், கூட்டு வியாபாரம் மற்றும் தனியார் நிறுவனம்
- கடன் ரூபாய் 25 லட்சம் வரை
- குறைந்த வட்டி
- குறைந்த பட்ச விளிம்பு தொகை
- கடனை திருப்பி செலுத்த கால வரம்பு - 84 மாதங்கள்
- விரைவான பரிசீலனை

Be a step ahead of life

மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள எங்களது வங்கி கிளையை அணுகவும்

WE ARE COMMITTED TO TREAT OUR CUSTOMERS IN A FAIR, TRANSPARENT AND NON DISCRIMINATORY MANNER

இலவச தொலைபேசி எண் 180 0425 0426 | www.tmb.in

Follow us on: tmbstepahead tmbltd

tamilmagazinesblogspot.com








மாசில்லா தங்கத்தின் அடையாளம்
BIS 916 ஹால்மார்க்
Lalithaa™
சென்னை • மதுரை • திருச்சி
புதுச்சேரி • கும்பகோணம்
உற்பத்தி விலையில்
தங்க நகைகள் !
0 முதல் 7% சேதாரம் !
செய்கூலி இல்லை.
மிகச் சில நகைகளுக்கு 8% & 9% சேதாரம்.
லலிதா ஜுவல்லரி மார்ட் (பி) லிமிடெட்
123, உஸ்மான் ரோடு, பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. போன் : 044-2814 1155 / 77 / 88. Ample car parking
180-182, தெற்கு மாசி வீதி, மதுரை-01. போன் : 0452-2330 222 / 444 / 555. Valet car parking
சத்திரம் பஸ் ஸ்டாண்ட், Opp. Big water tank, திருச்சி-2. போன் : 0431-270 6555 / 3666. Valet car parking
221, ஜவஹர்லால் நேரு வீதி, புதுச்சேரி-01. போன் : 0413-2341188 / 2331177. www.lalithaajewellery.com
1/356A, டாக்டர் பெசன்ட் ரோடு (BSNL அலுவலகம் அருகில்), கும்பகோணம்-01. போன் : 0435-2402288. Valet car parking





# வெய்ட்டிங் ஃபார் கமல்ஹாசன்!

**செ**ம உற்சாகத்தில் இருக்கிறார் காஜல் அகர்வால். பின்னே ஜோடி சேரும் ஹீரோக்களின் குட் புக்கில் இடம் பிடித்து அவர்களின் அடுத்த படத்திலும் இடம் பிடித்து விடுகிறாரே!

"நேத்து தான் என் தங்கச்சி நிஷாவுக்கு மேரேஜ் முடிஞ்சுடுச்சு. மேரேஜ்னாலே எவ்ளோ

Moviezworld.com
...spot.com



www.blossomlingerie.in
பெண்மையின்
அழகு மலரட்டும்,
ஆயிரம் கண்களை
கவரட்டும்
இதை அணிந்திடுங்கள்
அதை
அணிவதற்கு
முன்பு.
ஸ்கூல் பிரா • பிகினர்ஸ் பிரா • மனேஜ் பிரா • காட்டன் பிரா • ஸ்போர்ட்ஸ் பிரா • பேடட் பிரா
• ஃபீடிங் பிரா • லைக்ரா செட் • ஸ்லிப்ஸ் • பேண்டீஸ் • டைட்ஸ் • கிட்ஸ் இன்னர்வேர்
BLOSSOM®
INNER WEAR
வாடிக்கையாளர் சேவை: +91 9446000218 வியாபார விசாரணைகள்: +91 9446453557 (நேரம்: காலை 9 - மாலை 5) ஈமெயில்: info@blossomlingerie.in
Moviezzworld.com

சந்தோஷமா இருக்கு? எனக்கும் இப்ப கல்யாண ஆசை வந்துடுச்சு. இப்ப எனக்கு கேரியர் தான் முக்கியம். நிறைய படங்கள்ல நடிக்கணும். எல்லா ஹீரோக்கள் கூடவும் நடிச்சுடணும். அதனால இப்போதைக்கு கல்யாணம் பத்தி யோசிக்க கூட முடியலை!" ஆங்கிலத்தில் நிறுத்தாமல் பேசிக்கொண்டிருந்தவரிடம் கொஞ்சம் கடலை போட்டோம்.

**விஜய் கூட இரண்டாவது படம்?**

"துப்பாக்கில நான் வந்த ரோலை விட 'ஜில்லா'வுல எனக்கு பெரிய ரோல். முதல் தடவையா ஆக்‌ஷன்லாம் பண்ணியிருக்கேன். எனக்கு ஆக்‌ஷன் காட்சிகளில் நடிக்க ரொம்ப பிடிக்கும். இதுவரைக்கும் அதுக்கான சான்ஸ் சரியா கிடைக்கலை. கிடைச்ச சான்ஸ்ல எப்படி கலக்கியிருக்கேன்னு 'ஜில்லா'ல பாருங்க. விஜய் சார் கூட வொர்க் பண்றது எப்பவுமே ஃபெண்டாஸ்டிக் அனுபவம். அவர் கூட நடிக்கும்போது செம ஜாலியா இருக்கும். என்ஜாய் பண்ணி நடிக்கலாம். ஹீ ஈஸ் வெரி



tamilmagazinesblogspot.com

# SLEEPING PEACEFULLY IS NOT AN ART. IT'S A SCIENCE.




# LUXURINO

POCKET SPRING MATTRESS WITH MEMORY FOAM PILLOW TOP

From the house of Kurlon, a high-end mattress that is the ultimate in sleep comfort and relaxation.

LUXURINO. Perfect sleep. Perfected by years of research.

**Kurl-on®**
RISHTON KA comfort zone
Mattress | Pillows | Foam | Furniture
INDIA'S LARGEST SELLING MATTRESS

- High tensile pocket spring mattress with MSI Technology
- With MSI technology the body movement on one side of the mattress is independent and doesn't disturb the movement on the other side
- Visco Elastic Foam (Memory Foam) pillow top creates a mould to support your body in any sleeping position
- Imported knitted jaquard tapestry
- Moisture regulation and air circulation for elongated freshness

**WIDE RANGE OF OTHER MATTRESSES**

Rubberised Coir Mattress : New Klassic Plus | New Klassic | Klassic Bliss | New Super Deluxe | KurloBond
Therapeutic Mattress : New SpineKare | New Ortho
Spring Mattress : Valentino | Fantasy | Angelica | Marvel | Legacy | Desire Top | Dreamsleep | Unique
Polyurethane Foam Mattress : Imagine | Mermaid | Fombed Plus | Fombed | Rejuvene | Magna | Relax

**Available at Kurlon Mattress Express and all authorised Kurlon Dealers.**
**Institutional / Franchisee enquiry solicited.**
**Toll free: 1800-425-0404 | customercare@kurlon.com | www.kurlon.com**



ஸ்வீட்
பெர்சன்.
விஜய் அமேஸிங்
டான்சர்ங்
கறதால அவர் கூட
டான்ஸ் பண்றது சூப்பர்
அனுபவமா இருக்கும்."

**ட்ரீம் ரோல் என்ன?**

"அப்படிலாம் எதுவும் ஃபிக்ஸ் பண்ணலை. காஜல்கிட்ட கொடுத்தா எந்த ரோலா இருந்தாலும் 'பண்ணுவா'ன்னு பேர் எடுக்கணும். எல்லா கேரக்டர்ஸையுமே ஒரு கை பார்க்கணும். முக்கியமா ரொமாண்டிக் காமெடி எனக்கு நல்லா வர்றதா சொல்றாங்க. ஆனா ஒரே மாதிரியான ரோல்ல நடிச்சு போரடிக்குது. நடிக்க அதிகம் ஸ்கோப் உள்ள ரோல் கிடைச்சா ரெடி. கமிட் ஆகும்போதே ஃபர்ஸ்ட் ஸ்கிரிப்ட், அடுத்தது என்னோட கேரக்டர், அதுக்கு அப்புறம் தான் மத்த விஷயம்லாம் பேசுவேன்."

**ஃபேவரிட் ஹீரோ, ஹீரோயின்?**

"ரஜினிகாந்த், ஸ்ரீதேவி. இரண்டு பேரையும் ரொம்ப பிடிக்கும். இப்ப நிறைய புதுமுகங்கள் வர்றாங்க. என் தங்கச்சியை தான் பிடிக்கும். நிஷா

Moviezzworld.com
tamilmagazines.blogspot.com



tamilmagazines.blogspot.com



கிட்ட சின்ன குழந்தைத்தனம் இருக்கும். அவ நல்ல நடிகைதான். நித்யாமேனனையும் பிடிக்கும்."

**கமல் கூட நடிக்கப்போறதா நியூஸ் வந்துச்சே?**

"நான் கமல் சாரோட பெரிய ஃபேன். அவர் கூட நடிக்க சான்ஸ் கிடைச்சா யாராவது மிஸ் பண்ணுவாங்களா? ஆனா இதுவரைக்கும் யாரும் என்கிட்ட பேசலை. துப்பாக்கி விஜய் ஸ்டைல்ல சொல்லணும்னா ஐ அம் வெய்ட்டிங்."

**சினிமால யார் க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸ்?**

"எல்லார் கூடவும் பேசுவேன். ஆனா க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸ் யாருமே சினிமாவுல கிடையாது. எனக்கு எல்லாமே மும்பை ஃப்ரெண்ட்ஸ் தான்."

**பாலிவுட்?**

"நடிச்ச ரெண்டு படமுமே ஹிட் ஆகி நல்ல பாப்புலாரிட்டி கொடுத்துச்சு. ஆனா நான் பாலிவுட்டை விட தமிழ், தெலுங்குக்கு தான் அதிக முக்கியத்துவம் தர்றேன். என்னைப் பொறுத்தவரைக்கும் ஸ்க்ரிப்ட் தான் முக்கியம். லாங்குவேஜ், பெரிய ஹீரோக்கள்லாம் அப்புறம்தான்!" ●

- க. ராஜீவ் காந்தி



கோடிக்கணக்கான பெண்கள்.
ஒவ்வொருவருக்கும் தோன்றுகிறது
தானே கோடியில் ஒருவர் என்று.
கேள்வி இதுதான், உங்களுக்கு
எப்போது தோன்றபோகிறது?
PANTENE
PANTENE
பின்
முன்
பார்ட்டிகள் எனக்கு big no-no. ட்ரெஸ், ஷூஸ், மேக்-அப் சரியா இருந்தாலும் என் மென்மையற்ற சிடுக்காகும் கூந்தல் எல்லாவற்றையும் கெடுத்து விடும். ஆனா பேன்டீனை யூஸ் செய்தபின் பார்ட்டிகள் இல்ல என் கூந்தல் சேஞ்ச் ஆயிடிச்சு. அது எப்போதும் ஸாஃப்டாவும் மேனேஜபிளாவும் இருக்கு. இப்போ எனக்கு டேமேஜ்ட் லிருந்து டேம் குட் எப்படி இருக்கும்னு நிச்சயமா தெரியும்.
-பாவிஷா ஜெயின்
பின்
முன்
எப்போதுமே என் கூந்தலை மேனேஜ் செய்வது கடினம்தான். எக்ஸ்பென்ஸிவ் ஸலோன் ட்ரீட்மெண்ட்ஸால என் அடங்காத ஃப்ரிஸ்ஸியான கூந்தலை அடக்க முடியல்ல. ஹோம் ரெமெடியாலும்தான். பிறகு என் ஃப்ரெண்ட் சொன்னதால நான் பேன்டீனை ட்ரை பண்ணினேன். ரிஸல்டை பார்த்து திகைச்சு போனேன்-என் கூந்தல் ஸில்க்கி, ஸாஃப்ட் மற்றும் ரொம்ப மேனேஜபிள். பேன்டீனுடன் டேமேஜ்டு டு டேம் குட் கூந்தல் நிஜமாவே பாஸிபிள்.
- ச்ரேயா தாஸ்
பின்
முன்
போன வருடம் என் கூந்தலை ஸ்ட்ரெயிடென் பண்ணினேன். அதனால எனக்கு நிறைய காம்ப்ளிமெண்ட்ஸ் கிடைச்சது. ஸ்ப்ளிட் எண்ட்ஸும் வந்தது. எதை ட்ரை செய்தாலும்வெறும் தற்காலிக ஸொல்யூஷன்தான் கிடைச்சது. அப்போ என் ஃப்ரெண்டுக்கு அவளோட ஸ்ப்ளிட் எண்ட்ஸை தடுக்க அது உதவியதை பார்த்தேன். அதனால உடனே நானும் அதை ட்ரை பண்ணினேன். ரிஸல்ட் ரொம்ப நல்லா இருந்தது. இப்போ என் ஸ்ட்ரெயிடெண்ட் கூந்தலுக்கு கவலைப்பட ஒன்றுமே இல்லை. Thank you Pantene. I owe you my hair.
- ரவீனா சேத்தியா
இவங்களைப் போல கோடிக்கணக்கான பெண்கள்* புதிய பேன்டீனை ட்ரை செய்தாங்க, டேமேஜிலிருந்து விடுதலை கிடைச்சதால ரொம்ப ஆனந்தமா இருக்காங்க. ட்ரை பண்ணுங்க, இங்க வரப்போற அடுத்த ஸ்டோரி உங்களோடதா இருக்கலாம்.
PANTENE PRO-V
HAIR SO HEALTHY IT SHINES
*based on third party household panel data from 2013 across Asia

அடுத்த பொங்கல் சிறப்பிதழில், போனஸாக கூடுதல் 16 பக்கங்களைத் தந்து, அதே விலையில் 160 பக்கங்களைத் தரப்போகிறீர்களா? மனம் சந்தோஷத்தில் பொங்கி வழிகிறது.

மா. பழனி, கூத்தப்பாடி.

சூப்பர் ஸ்டாரின் கோச்சடையான் எப்ப வருமோன்னு ஏங்கிக்கிட்டு இருக்கிறோம். நீ என்னடான்னா பாட்ஷா IIன்னு கொளுத்திப் போட்டு எங்க வயித்தெரிச்சலைக் கிளப்பறியேப்பா?

அ. சிவகுமார், காட்டுக்கானூர்.

'தனியாக இருப்பதற்கு பயப்படாமல், கொஞ்சம் கவனமா இருக்கணும் அவ்வளவுதான்' என்று கூறிய ஷ்ருதிஹாசனின் பேச்சில் வீரம் தெறிக்கிறது. இல்லாமல் போகுமோ விஸ்வரூபனின் பெண்ணாச்சே...!

பி. பாரதி, சைக்கிமேடு.

அடுத்த சூப்பர் ஸ்டார் யார்? என்று அறிய ஒரே ஆவலாக உள்ளது. ஓட்டுப் போட நாங்கள் தயார். இன்னும் காத்திருக்க வைத்து எல்லா ஸ்டார்களையும் பீதிக்குள்ளாக்காதீர்!

M. Stalin, Sengamoor

நரேந்திரமோடி பதில்களும், ப்ரியா கல்யாணராமனின் பக்தித் தொடரும், குமுதம் பொங்கல் சிறப்பிதழில் ஆரம்பமாகப் போவதை அறிந்து, இப்போதே எங்கள் உள்ளங்களில் 'மகிழ்ச்சிப் பொங்கல்', பொங்க ஆரம்பித்து விட்டது.

கே. கஸ்தூரிதிலீர்வேல், [illegible]

## வயித்தெரிச்சலைக் கிளப்புறியே!

தி.மு.க. மீதான விமர்சனம் தங்களையும் பாதிக்கும் என்கிற நிதர்சனத்தை நாசூக்காகவும் நாகரிகமாகவும் திருமாவளவன் பேட்டியில் வேறு வழியின்றி சகித்துக் கொள்ளும் கையறு நிலையையும் மனக் குடைச்சலையும் தெளிவாக காட்டி விட்டார்.



காஜில். கரீம்

'சோ சாதாரணமா இருக்கார்ன்னு நினைக்காதீங்க அன்னைக்கு ஹைதராபாத்தில் இவர் பண்ணுன கலாட்டா, இவர்தான் போலீஸ் கமிஷனர், இவர்தான் சீஃப் செகரெட்டரி, இவர்தான் கவர்னர்ங்கிற மாதிரி இருந்தது' என்று சந்திரபாபு நாயுடு குருமூர்த்தியிடம் சொல்லிச் சிரித்தது... சோவின் அசாத்திய துணிச்சல் கண்டு வியப்பில் ஆழ்ந்தோம்!

ப. பால்ராஜ், உறையூர்.

'நிரூபிக்க வேண்டும்!' என்ற



tamilmagazine.blogspot.com

# max

# SALE

## UP TO 50% OFF

தேர்ந்தெடுக்க 60000க்கும் அதிகமான ஸ்டைல்கள்

# எல்லோரையும் முந்திச் செல்லுங்கள்

Additional 5% Cash Back* SBI Card Make life simple

*Min transaction of ₹2500. Max Cash back of ₹500 per SBI Credit Card from 2nd Jan to 3rd Feb 2014

**ரூ. 2499க்கு தயாரிப்புகள் வாங்கி, ரூ. 200 மதிப்புள்ள வவுச்சர் பெற்றிடுங்கள்**

THE LARGEST VALUE FASHION BRAND IN INDIA AND THE MIDDLE EAST | OVER 200 STORES ACROSS 16 COUNTRIES | **WWW.MAXFASHIONINDIA.COM**

MAXFASHIONS | **சென்னை** : 1வது மெயின் ரோடு, ஜவஹர் நகர், TNSC பேங்க் எதிரில், பெரம்பூர் • 2வது அவென்யு, அண்ணாநகர் • அம்பத்தூர், ராக்கி சினிமாஸ் அருகில் • சிட்டி சென்டர் மால், ஆர்.கே. சாலை • எக்ஸ்பிரஸ் அவென்யு மால், ராயப்பேட்டை • ஃபோரம் விஜயா மால், வடபழனி • லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர் • நார்த் உஸ்மான் ரோடு, தி. நகர் • ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி | **கோயம்புத்தூர்:** புரூக்ஃபீல்ட்ஸ், புரூக்பாண்ட் ரோடு • ஃபன் ரிபப்ளிக் மால், அவினாசி ரோடு | **மதுரை** : விஷால் டி மால், கோகலே ரோடு, சொக்கிகுளம் | **புதுச்சேரி** : எம். ஜி. ரோடு | **திருச்சி** : கலெக்டர் ஆஃபீஸ் ரோடு, | **மேலும்:** பெங்களூர் • தில்லி • ஹைதராபாத் • கொல்கத்தா • மும்பை • புனே மற்றும் 27 இதர நகரங்கள்

உங்கள் அருகாமையிலுள்ள ஸ்டோரும் இருக்குமிடத்தை அறிய, 56070க்கு SMS செய்யவும்: **MF<SPACE><FIRST THREE LETTERS OF THE CITY>**. உதாரணமாக, சென்னையில் உள்ள ஒரு ஸ்டோரை அறிய, 56070க்கு SMS செய்யவும்: **MF CHE.**

நடுநிலை தலையங்கம் அருமை! மோடியே ஆனாலும், தள்ளுபடி செய்யப்பட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பு பற்றி அவர் கூறிய வார்த்தைகளின் சூழ்நிலையை, அவர் 'நிரூபித்தே' ஆக வேண்டும்! என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது!

அ. சுஹைல் ரஹ்மான் திருச்சி

**வி**க்கலைப்பற்றி இதுவரை அறியாத விஷயங்களை விவரமாகச் சொல்லி, விக்கல் என்ற சிக்கலை தீர்த்த இரா. மணிகண்டனுக்கு நன்றிகள் கோடி!

N. வளர்மதி, திருச்சி.

**ய**ப்பா! அரசு என்னா வெவரம்யா? வாலி படத்துல ஜோதிகா, "தெரியும்னு சொல்றவங்கள விட தெரியாதுன்னு சொல்ற ஆம்பளங்களைத்தான் ரொம்ப பிடிக்கும்"னு சொன்ன வசனத்த ஞாபகம் வச்சுக்கிட்டு, அந்த மூணு பேருகிட்ட நீச்சல் தெரியாதுன்னு சொல்லுவாராம், பாருங்களேன்!

– M. G. பரத், திண்டுக்கல்.

ஒவ்வொரு கடிதமும் ரூ.50 பரிசு பெறுகிறது.
அட்டையில்: காஜல் அகர்வால் (ஜில்லா)

**ரா**ஜீவ் காந்தி கொலை வழக்கில் தன் மகள் நளினியின் காதலினால் தேவையில்லாமல் சிக்கிக் கொண்டதை, அந்த வயதான தாய் உள்ளங் குமுறும் வார்த்தைகளைப் படிக்கும்போது மனம் கனக்கிறது.

ஆர்.கே.சுந்தரம், வடபழநி

**இ**றந்த பின் தெரியும் ஒருவரின் அருமையை இருக்கும் போதே தெரிந்து கொள்ள வைத்த பெருமையை பொக்கிஷம் சிறுகதையில் புரிய வைக்கிறார் தேவிபாலா.

R. வெற்றிவேல் [illegible]

**எ**ழுத்தாளர்களின் உழைப்பை திரைப்படக்காரர்கள் உறிஞ்சி உபயோகப்படுத்துவது கு. அழகிரிசாமி காலத்திலேயே நடைபெற்ற விதத்தை கி.ரா. விளக்கிய விதம் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது!

கு. சுந்தர் Neyveli



**அ**ன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, குமுதம் 8.1.2014 இதழில் 'தனி ஆவர்த்தனம்' இசை விமர்சனக் கட்டுரையில் என்னுடைய இசை நிகழ்ச்சியைப் பற்றிய செய்தி பிரசுரமாகியுள்ளது. அதில் என்னுடைய புகைப்படத்திற்குப் பதிலாக வோக்கலிஸ்ட் டாக்டர் R.கணேஷின் படம் தவறுதலாக இடம்பெற்றுள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

-மஹாராஜபுரம் S.கணேஷ் விஸ்வநாதன்



tamilmagazinesphotos.com
Moviezworld.com


ENTIRE BODY COLOUR COMPLEXION
WITH GSH TECHNOLOGY
Angels GSH Technology
மூலம் உங்கள் சரும நிறத்தை
தீர்மானித்திடுங்கள்
Angels
HAIR, SKIN & BODY CARE
❖ PIMPLES ❖ WARTS
❖ SCARS ❖ HOLES
❖ PIGMENTATION
❖ WHITE PATCHES
GET HAIR ON BALDHEAD
WITH IN 1 HOUR...
"SILICONSYSTEM®" மூலம்
1 மணி நேரத்தில் வழுக்கை
தலையில் முடி
Control Hairfall through STEMCELL THERAPY
Get Volumed hair through STEMCELL THERAPY
Regrowth of hair through STEMCELL THERAPY
New growth of hair through STEMCELL THERAPY
ஆண்/ பெண் இருபாலருக்கு சத்தியமே
UNWANTED & EXCESS HAIR REMOVAL
USA FDA ஆங்கீராகம் பெற்ற ND -Y ag Lang
Pulsed Laser மூலம் தேவையற்ற ரோமங்கள்
நீக்கிடலாம்
Ex: Upper Lip, Chin, Cheeks, Side Locks,
Eyebrows, Underarms, Chest, Abdomen,
Hands, Thighs, Legs etc..
50%
Special Offer
On Package
CHENNAI:Ph: 044-26212547, 26213468, 42176679, 9840046599
MADURAI:Ph: 0452-4395859, 2583738, 9840352499 COIMBATORE:
Ph: 0422-6547577, 2547889, 9244415899 TRICHY: Ph: 0431-4311569,
2765859, 9677127799 BANGALORE: 080-41153995, 41153996, 9845566799
E-mail : angels@angelsclinic.in / www.angelsclinic.in / Open on all days from 9am to 7pm.

## அரசு பதில்கள்

**தமன்னா, ஸ்ரேயா, அமலாபால், அனுஷ்கா, ஹை ஹீல்ஸ் யாருக்கு அழகு?**

- டி.முரளி, சேலம்.

தங்களின் நடையில் பாலியல் ஈர்ப்பைக் கொண்டு வருவதற்காகத் தான் நடிகைகள் ஹை ஹீல்ஸ் அணிவதாக ஒரு சர்வே கூறுகிறது. ஹை ஹீல்ஸ் போடா விட்டால் இவர்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை வந்துவிடுமாம். அமலா பாலின் எடுப்புக்கு முன் மற்றவர்கள் கொஞ்சம் கம்மிதான். நான் ஹை ஹீல்ஸின் உயரத்தைச் சொன்னேன்!

**டி.ராஜேந்தர் மீண்டும் தி.மு.க. விற்கு வந்துவிட்டாரே?**

- டி.முருகேசன், திருவாரூர்.

லட்சியம் இனி தேவையில்லை என்று டி.ஆர். நினைத்துவிட்டார் போலும்.

**நடிகை ரஞ்சிதா சாமியாரினி ஆகிவிட்டது பற்றி அரசுவின் கருத்து என்ன?**

- எஸ்.ராமசாமி, தயிர்பாளையம்




"My favourite metallic jewellery...
is inspired by my stylish Cera Faucets"
CERA
Reflects my style
www.cera-india.com
aakriti/cera/FW/1013

சங்கீத மாமணி விருது பெறும் ஓ.எஸ்.அருண்




சிஷ்யையாக இருந்தபோது புயல் வீசச் செய்தார். சாமியாரினி ஆன பிறகு சுனாமி அடிக்கப் போகிறது. ஆன்மிக மடங்களுக்கு ஆபத்து எப்படியெல்லாம் வரு கிறது பாருங்கள். ஒரு கிசுகிசு: தன் குரு ஆரம்பிக்கப்போகும் டிவிக்கு இவர்தான் எம்டியாமே. ஒரு துறவிக்குப் பதவியா?

## மோடியால் பா.ஜ.க.வுக்கு பெருமையா? பா.ஜ.க.வால் மோடிக்குப் பெருமையா?

**- ஜெ.சீனிவாசன், மேற்கு சைதை.**

பா.ஜ.க. மோடிக்குப் பலம். மோடி பா.ஜ.க.வுக்கு எம்பளம்.

## பெரும்பாலான குடும்பங்களில் பிரச்னைக்குக் காரணமாக அமைவது எது?

**- சி.விஜயாம்பாள், கிருஷ்ணகிரி.**

கணவன்- மனைவிக்கிடையே ஒருவர் மற்றொருவரிடம் தோல்வி யடைய விரும்பாததுதான்.

## அரசு சங்கீத சபாக்களுக்குப் போவதுண்டா?

**- என்.ராஜாங்கம், சென்னை.**

மார்கழி மாத சங்கீத சபாக்களுக்குப் போகாவிட்டால் தூக்கம் ஏது? அண்மையில் ராம பக்த ஜன சபாவில் ஓ.எஸ். அருணுக்கு ‘சங்கீத மாமணி’ விருது வழங்கி கௌரவித்ததை காணும் வாய்ப்பு கிட்டியது. இத்தகைய விருதுகளால் இசையும் வளரும் மனித மனங்களும் ஒற்றிணையும் என்பதை பார்வையாளர்களின் மனமகிழ்வில் உணர முடிந்தது. கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி, பஜன்ஸ், அடங்க், ஃப்யூஷன், வேர்ல்ட் மியூசிக், வெஸ்டர்ன் மியூசிக் என்று இசைத் துறையின்



tamilmagazines.blogspot.com

# பலன் பெற்றோர் பாராட்டுகிறார்கள்!

## பக்கவாதம் (PARALYSIS)



எனக்கு 1 ½ வருடங்களாக, கை கால், வாதம் (Paralysis) ஏற்பட்டு நடக்க முடியாமல் கை, கால், செயல்படுத்த முடியாமல் பல பெரிய மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்தும் பலன் கிடைக்கவில்லை. டி.வி. மூலம் டாக்டரின் விளம்பரத்தை பார்த்து இராயப்பேட்டையில் உள்ள ரப்பானி வைத்தியசாலாவில் சிகிச்சை பெற்று வருகிறேன் இப்போது கை, கால் தூக்க முடிகிறது. நல்ல முறையில் நடக்கிறேன். இப்போது எந்த குறையும் இல்லை.

- திருமதி. பாண்டியம்மாள், மணலி, சென்னை.

## கால் மூட்டு வலி



நான் கடந்த மூன்று ஆண்டுகளாக கால் மூட்டு வலியால் அவதிப்பட்டுக் கொண்டு இருந்தேன். பல மருத்துவ–மனைகளுக்குச் சென்று பார்த்தேன். அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றனர். புத்தகத்தின் மூலம் ரப்பானி வைத்தியசாலாவைப் பற்றி டாக்டரின் விளம்பரத்தை பார்த்தேன். நேரில் சென்று டாக்டரை சந்தித்து அவர் கொடுத்த மருந்தை சாப்பிட்டேன். இப்போது நல்ல முன்னேற்றம் கிடைத்துள்ளது. எந்த பிரச்னையும் இல்லை.

-ஸ்ரீராமுலு, அரக்கோணம்.

## நாள்பட்ட ஆஸ்துமா



நான் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆஸ்துமா (Asthma) என்ற நோயால் அவஸ்தைப்பட்டு வந்தேன். தங்களது ரப்பானி மருத்துவமனை பற்றி டி.வி.மூலம் தெரிந்து தங்களது ரப்பானி வைத்தியசாலா விலாசத்திற்கு வந்து என்னுடைய உடம்பை தாங்கள் பரிசோதித்து மருந்து கொடுத்து சுமார் 5 மாதம் தொடர்ந்து சாப்பிட்டு வந்துள்ளேன். 3 பாகம் சரியாகிவிட்டது. இப்போது எந்த தொந்தரவும் இல்லாமல் இருக்கிறேன்.

-திருமதி. கன்னியம்மாள், குன்றத்தூர், சென்னை-69.

**கை, கால் வாதம், மூளை வளர்ச்சிக்குறைவு, மூலம், நரம்புத்தளர்ச்சி, பாலினகுறைபாடு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிக்ச்சை அளிக்கப்படும்.**



**தென்னிந்தியாவின் புகழ்பெற்ற யுனானி மருத்துவர்**

**டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார் ரப்பானி வைத்யசாலா.**

**புது எண்.139, ப.எண்.65, டாக்டர் பெசன்ட்ரோடு, மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில், இராயப்பேட்டை, சென்னை-600 014. போன்: 28476969, 28470874,**

**பார்க்கும் நேரம் : காலை 9 மணி முதல் 2 மணி வரை. ஞாயிறு விடுமுறை**

JAYA Plus திங்கள் முதல் ஞாயிறு வரை - எல்லா நாட்களிலும் தினசரி இரவு 10 மணிக்கு VIJAY - திங்கள் - காலை 8 மணிக்கு செவ்வாய் - காலை 9 மணிக்கு, புதன் - காலை 9.30 மணிக்கு - திங்கள் முதல் வெள்ளி வரை - காலை 9.30 மணிக்கும், மாலை - 6 மணிக்கும், புதன் மற்றும் வியாழன் - இரவு 11.00 மணிக்கு மற்றும் சனி - மாலை 5 மணிக்கும்.

மாதந்தோறும் டாக்டர் சையத் சத்தாரின் யுனானி மருத்துவமாத இதழ் கடைகளில் கேட்டு வாங்குங்கள்.

tamilmagazinesblogspot.com

சகல தளங்களிலும் சிறப்பான முத்திரை பதித்து வருபவர் ஓ.எஸ். அருண். இசைக்கு ஏது எல்லை?

**சோனியாவை 'அட்சயப் பாத்திரம் வைத்திருக்கும் மணிமேகலை' என்று வர்ணித்த கலைஞர், இப்போது காங்கிரஸோடு கூட்டு இல்லை என்கிறாரே?**

**- சு.நாகராசன், பறக்கை.**

கலைஞர் நாடகம் முடிந்து விட்டதாகச் சொல்கிறார். சோனி





யாவோ வேஷம் மட்டும் தான் களைந்திருக்கிறது; நாடகம் முடிய வில்லை என்கிறார். மணிமேக லையோ (பொது ஜனம்) அட்சயப் பாத்திரத்தை தேடித் தரும்படி மன்றாடிக் கொண்டிருக்கிறாள்.

**காதல் இல்லாத உலகம் உண்டா?**

**- எஸ்.பி.பாபு, முள்ளக்காடு.**

ஹிட்லர் எத்தனை உயிர்களைக் கொன்று குவித்திருப்பார். அவருக்குக் கூட இவா பிரான்னு ஒரு காதல் மனைவி தேவைப்பட்டிருக்கிறாள்.

**'ராகுல் காந்திக்கு முன்னால் நரேந்திர மோடியோ, கெஜ்ரி வாலோ சமமாக நிற்க முடியாது'**





**என்கிறாரே லாலுபிரசாத் யாதவ்?**

**- வே.ந.கதிர்வேல், வேலூர்.**

காங்கிரஸைத் தோற்கடிக்க எப்படியெல்லாம் பேச வேண்டியது இருக்கிறது பாருங்கள்.

**ஆம் ஆத்மி கட்சியைக் கண்டு பயப்படுவது காங்கிரஸா? பி.ஜே.பி.யா?**

**- த.சத்யநாராயணன், அயன்புரம்.**

மாநிலக்கட்சிகள் தான். ஆம் ஆத்மி நம் ஊருக்கும் வந்தால் ஓட்டுப் பிரியுமே என்ற பயம் உள்ளுக்குள் இருக்கிறது. ●



tamilmagazinesblogspot.com

**ஒரு பக்க மருத்துவக்கதை**

# பட்டியல்



மளிகைக்கடை உரிமையாளர் ராஜேந்திரன் கணக்காக தினமும் காலை 6 மணிக்கு எழுந்து அவசர அவசரமாக தன் கடைக்குப் போய் துவரம்பருப்பு, கருப்பட்டி, கடலைப்பருப்பு, சர்க்கரை ஆகியவற்றின் விலைப்பட்டியலை சரிசெய்து வியாபாரத்தைத் தொடங்கி விடுவது அவரது வழக்கம். ''கடையே கோவில்; தொழிலே தெய்வம்'' என்று அவர் இருந்தார். மது, புகை எதுவும் கிடையாது. கடமையாக ஒவ்வொரு மணி நேரமும் தன் கடையில் உள்ள விலைப்பட்டியலை திருத்தம் செய்துவிடுவார்.

திடீரென்று ஒருநாள் வயிற்றுவலி, தலைச்சுற்றல் என்று சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள மெடிந்தியா மருத்துவமனையை அணுக, தேவையான பரிசோதனைகள் செய்யப்பட்டன.

விலைப்பட்டியலை மட்டுமே சரி செய்து கொண்டிருந்த அவருக்கு சர்க்கரை நோய், இரத்தக்கொதிப்பு, கல்லீரல் வீக்கம், பித்தப்பை கல் என தலைமை மருத்துவர் அவருடைய வியாதிகளின் பட்டியலை நீட்டியவுடன் அவர் அசந்து, சோகம் ஆனார்; மெடிந்தியா மருத்துவமனையில் தக்க சிகிச்சை எடுத்துக்கொண்டார்.

உடற்பயிற்சியின்மை, உணவில் அக்கறையின்மை, தக்க தருணத்தில் முழு உடல் பரிசோதனையை தவிர்த்தமை போன்ற குறைகளை ராஜேந்திரனிடம், தலைமை மருத்துவர் கூறியது மட்டுமின்றி, யார் இதை மேற்கொள்ள வேண்டும்? என்றும் அறிவுறுத்தினார்.

''அஜீரணக் கோளாறு, பசியின்மை, மலத்தில் இரத்தம், குடற்புண், உடற்சோர்வு, எடைகுறைதல், தொடர் வயிற்றுப்போக்கு, மலச்சிக்கல் பாதிப்பு உள்ளவர்களும், ஹெபடைட்டிஸ் B&C வியாதிகள், புற்றுநோய்களால் பாதிக்கப்பட்ட ஒருவரின் குடும்பத்தில் உள்ளவர்களும், மற்றும் 40 வயதுக்கு மேல் அனைவரும் இந்த முழு உடல் ஜீரண பரிசோதனைகளை (Master Digestive Health Check-up) செய்து கொள்வது அவசியம்'' என்று தலைமை மருத்துவர் கூறியவுடன், ராஜேந்திரன் தனது குடும்பத்தினர் அனைவருக்கும் முழு உடற்பரிசோதனை செய்து முடித்தார்.

விலைப்பட்டியலை மட்டுமே சரிசெய்து கொண்டிருந்தவர்க்கு தன் உடலில் உள்ள வியாதிப்பட்டியலை சரி செய்த தலைமை மருத்துவரையும், தகவல் தொடர்பாளரையும் (9840993131, 9840993132) பார்த்து ராஜேந்திரன் நன்றி கூறிச் சென்றார்.

www.medindiahospitals.com
advt
tamilmagazines.blogspot.com

இந்தியப் பெண்ணாகவே மாறிவிட்டார் எமிஜாக்சன். அவரது பேச்சிலும் வாழ்க்கையிலும் இந்தியப் பண்பாடு ஆதிக்கம் அநியாயத்திற்கு கலந்திருக்கிறது. வாழ வந்த பெண் 'இந்தியர்' ஆனது எப்படி? ஒரு பர்னசல் சந்திப்புக்கு சம்மதித்தார் எமி.

"எனக்கு இந்திய ஆன்மிக வாழ்க்கை மேல தீராத ஒரு ஈர்ப்பு இருந்தது. எப்படா வாய்ப்பு வரும்னு நினைச்ச காலத்துல வரம்போல வந்த ஆஃபர். வந்த வேகத்துலயே இந்தியாவை குறுக்கும் மறுக்குமா பல தடவை டிராவல் பண்ணிட்டேன்.

## கல்யாணத்துக்கு

# டிரெஸ் ரெடி... மோதிரம் ரெடி...





ஆனாலும் எனக்கு இண்டியாவுல சென்னைதான் பிடிச்ச இடம். இங்க வெயிலும் இருக்கு, சீசன் மாறும்போது லேசான குளிரும் இருக்கு. ஆனா ஹெவி 'கோல்டு' இல்ல. இந்த டெம்ப்ரேச்சர் லெவல் எனக்கு பிடிச்சிருக்கு. உண்மையா சொன்னா திரும்ப இங்கிலாந்து போகுணுமானு கூட யோசிக்குற அளவுக்கு நான் சென்னையோட கனெக்ட் ஆகிட்டேன்!" செண்டிமெண்டாக ஆரம்பித்தார் எமி!

**இந்தியாவுல உங்களுக்குப் பிடிச்ச விஷயம் என்ன?**

"ஃபேமலி அட்டாச்மெண்ட். இந்த மாதிரி குடும்பத்தோட, சாகுற வரைக்கும் ஒரே வீட்ல வாழுற கல்ச்சர் செமையா இருக்கு. ரொம்ப மதிக்கக்கூடிய கலாச்சாரம்னா இந்திய கலாச்சாரம்னு படிச்சிருக்கேன். ஆனா இப்ப நேர்ல பார்த்து அனுபவிக்கிறேன். பெரியவங்க சொன்னதுல தப்பே இல்லை. இந்திய மக்கள் ரொம்ப கொடுத்து வச்சவங்க. அவங்களோட ஆன்மிகம் எனக்கு மனசுக்கு நெருக்கமா இருக்கு. அப்புறம் நாங்க வீட்ல சமைச்சு சாப்பிடவே மாட்டோம். எந்த டிஷ் சாப்பிடணும்னாலும் ரெஸ்டாரண்ட்தான் போவோம். இங்க இருக்குற மக்கள் வீட்லயே சகல டிஷ்ஷையும் சமைச்சு குடும்பத்தோட உட்கார்ந்து சாப்பிடுவதை பார்க்கவே அதிசயமா இருக்கு. இண்டியன் ஃபேமிலி எப்பவாவதுதான் ரெஸ்டாரண்ட் போய் சாப்பிடுறாங்க. இதெல்லாம் எனக்குப் புதுசு. கொஞ்சம் கொஞ்சமா இந்த வாழ்க்கையை நான் அனுபவிக்கிறேன். இந்தியாவுலயே எனக்கு சவுத் இண்டியாதான் பிடிச்சிருக்கு. இங்க இருக்குற பசுமை, வயல்காடு, சூதுவாது இல்லாத கிராமத்து மக்கள்னு பல விஷயங்கள் பிடிக்கும்."






tamilmagazinesblogspot.com
MovieZworld.com

**இந்தியா வந்த பின்னாடி சுத்த சைவம் ஆகிட்டீங்களாமே?**

"எனக்கு இந்திய ஆன்மிகம் கத்துக்கொடுத்த நல்ல விஷயம் சைவம். உடம்புக்கு



இந்த சைவ சாப்பாடுதான் நல்லதுனு தோண ஆரம்பிச்சுவிட்டது. நாம ஹெல்த்தியா இருக்கணும்னா நான் - வெஜ்தான் சாப்பிடணும்னு தப்பா நினைச்சுக்கிட்டிருக்கோம். வெஜ் சாப்பாட்லயும் ஹெல்த்தியான சத்துக்கள் இருக்கு."

**எமிக்கு கல்யாணம் எப்போ?**

"என் கல்யாண நாளுக்காக நானும் உங்களப்போல ஆர்வமா காத்திருக்கேன். ஒரு ரகசியம் சொல்லட்டுமா? என் கல்யாணத்துக்கு உண்டான டிரெஸ்லாம் கூட இப்பவே நான் வாங்கி வச்சுட்டேன். அதோட மணமகன் கைக்குப் போட நல்ல டிசைன்ல ஒரு 'ரிங்'கூட வாங்கி வச்சாச்சு. தினமும் அதை எடுத்து எடுத்துப் பார்க்குறப்ப ஒரு சந்தோஷம் வரும் பாருங்க, அதோட சுகமே தனி!"

**நாங்க வீட்ல சமைக்கவே மாட்டோம்!**

**உங்க ஹாபி என்ன?**

"சின்ன வயசுல இருந்தே ஒரே ஹாபிதான். குதிரையேற்றம்னா கொள்ளை இஷ்டம். வீட்லயே நாங்க நாலஞ்சு ஆஸ்திரேலிய குதிரைகளை வளர்க்கிறோம். அப்புறம் ட்ராவல் நிறைய பண்ணுவேன். ட்ராவல் குளோஸ் டு மை ஹார்ட்."

**யானையை எல்லாம் தத்தெடுத்து வளர்க்குறீங்களாமே?**

"ஆஃப்ரிக்கா போனப்ப அங்க இருக்குற எலிஃபெண்ட் முகாமுக்குப் போயிருந்தேன். அங்க நிறைய எலிஃபெண்ட்ஸ்களை 'பீட்டா' அமைப்பு வளர்த்து வர்றாங்க. அவங்க வளர்க்குற யானையில சில யானைகளை நான் தத்தெடுத்திருக்கேன். டைம் கிடைக்குறப்பலாம் என் எலிஃபெண்ட் செல்லங்களை போய் பார்த்துவருவேன்."

- கடற்கரய், படங்கள்: ஆர்.சண்முகம்

tamilmagazinesblogspot.com
Moviezworld.com




tamilmagazines.blogspot.com

**கிராமத்திலிருந்து வந்து தில்லிக்கு ராஜாவாகி இருக்கிறார் அரவிந்த் கெஜ்ரிவால். இந்த சாமானியர் தான் இன்றைய இந்திய அரசியலின் 'ஹாட் கேக்'.**

அரவிந்த் கெஜ்ரிவால் ஹரியானா மாநிலத்துக்காரர். அங்குள்ள சிவானி என்கிற கிராமம்தான் அவரது பூர்வீகம். நடுத்தரக் குடும்பம்.

தந்தை அரசுப் பொறியாளர் என்பதால், குடும்பம் அவ்வப்போது வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றலாகிச் செல்ல வேண்டிய நிலை. அப்படித்தான் சோனாபேட், காஸியாபாத், ஹிசார் உள்ளிட்ட நகரங்களில் வசித்திருக்கிறார் கெஜ்ரிவால்.

கிறிஸ்தவ மிஷினரி பள்ளிப் படிப்பையும், கரக்பூர் ஐ.ஐ.டியில் பொறியியலையும் முடித்தவர். சில காலம் ஜாம்ஷெட்பூரில் உள்ள டாடா நிறுவனத்தில் வேலை செய்திருக்கிறார்.

தொடர்ந்து இந்திய வருவாய்த் துறை (ஐ.ஆர்.எஸ்). முடித்தவருக்கு வருமான வரித் துறையில் உயர்ந்த பதவியும் கிடைத்திருக்கிறது.

ஒரு முறை அன்னை தெரசாவை சந்திக்கும்



# புது தில்லி புயல்!

Moviezzworld.com

வாய்ப்பு கிடைக்க, அப்போது முதல் அரவிந்த் கெஜ்ரிவாலின் வாழ்க்கையில் மாற்றம். 'சமூக சேவை செய்ய வேண்டும்' என்று அன்னையிடம் சொல்ல, அவரது யோசனைப்படி கொல்கத்தாவிலிருக்கும் 'காலிகாட்' என்கிற இடத்தில் சில காலம் சேவை செய்திருக்கிறார்.



பின்னர், அரசுப் பணியை ராஜினாமா செய்துவிட்டு தொண்டு நிறுவனம் தொடங்க முடிவு செய்ய, குடும்பத்திலிருந்து எந்த எதிர்ப்பும் கிளம்பவில்லை.

அரவிந்தின் மூத்த சகோதரரும், தாய்மாமனும் அப்போதே ஆளுக்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுக்க, அதையே மூலதனமாக வைத்து 1999ல் 'பரிவர்த்தன்' என்கிற தொண்டு நிறுவனத்தை தொடங்கியிருக்கிறார்.

அதன் மூலம் ரேஷன் அட்டை, மின்சார 'கனெக்ஷன்' பெற உதவுவது என்று ஆரம்பித்த அவரது சேவை பக்கத்து ஊர்களுக்கும் தெரிய வர 'பரிவர்த்தனு'க்கு மக்களிடையே அமோக வரவேற்பு.

தற்போது பிரபலமாக இருக்கும் 'தகவல் அறியும் உரிமைச் சட்டம்' நடைமுறைக்கு வர மூலகாரணமாக இருந்தவர் அரவிந்த் கெஜ்ரிவால்தான். கெஜ்ரிவாலின் தொடர்ச்சியான முயற்சிகளால் ஆடிப்போன மத்திய அரசு, 2006ல் 'ஆர்.டி.ஐ' சட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

அதற்காக நாட்டின் மிக உயரிய 'ராமன் மகசேஷே விருது' அரவிந்துக்கு வழங்கப்பட்டிருப்பது அற்புதம்!

'இந்தியா கேட்' ஊழலுக்கு எதிராக ஹசாரே போராடிய போது கெஜ்ரிவால் அவருடன் இணைந்து கொள்ள அது மிகப் பெரிய போராட்டமாக உருவெடுத்தது. தனது

### முதல்வர்கள் கிராமம்

அரவிந்த் கெஜ்ரிவால் பிறந்த கிராமத்திலிருந்து பன்சிலால், பனாரசிதாஸ், மாஸ்டர் ஹூகம் சிங் என ஏற்கெனவே மூன்று பேர் முதல்வராகி இருக்கிறார்கள். தற்போது கெஜ்ரிவாலும் முதல்வராகி இருப்பதால் சிவானி என்கிற அந்த சிறிய கிராமம் கொண்டாட்டத்தில் திளைக்கிறதாம்.

tamilmagazinesblogspot.com




Moviezzworld.com
tamilmagazimes.blogspot.com

நம்பிக்கைக்குரிய தளபதிகளில் ஒருவராக கெஜ்ரிவாலை ஹசாரே சேர்த்துக்கொள்ள, 'ஜன் லோக்பாலை' வடிவமைக்கும் பொறுப்பு கெஜ்ரிவாலிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதற்காக புது தில்லியில் ஹசாரே உண்ணாவிரதம் இருக்க, உடனிருந்த கெஜ்ரிவால் வேகமாக வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்தார்.



**போராளி!**

**ஆரம்ப காலங்களில் 'ஆம் ஆத்மி' கட்சியில் தீவிர ஆதரவாளராக இருந்தவர் பிரபல நடிகர் கம் இயக்குனர் கிட்டி. அவரிடம் பேசினோம். "இந்தியா கேட் ஊழல் உள்பட ஒரு சில போராட்டங்களின் போது அவருடன் நெருக்கமாகப் பழகியிருக்கேன். அவர் மிகச் சிறந்த சமூகப் போராளி என்பதில் சந்தேகமில்லை. அரசியலுக்கு அவர் புதுசுன்னாலும் அதற்கான தகுதியை அவர் வளர்த்துக்குவார். பதவியேற்றவுடன் அவர் செய்திருக்கும் மக்கள் நல அறிவிப்புகள் நடைமுறைக்கு சாத்தியப்பட்டவைதான்'' என்கிறார் நம்பிக்கையுடன்.**

வெறும் போராட்டங்களால் மட்டும் அரசியல் உரிமைகளைப் பெற முடியாது என்று நினைத்தவர், அதிரடியாக துவக்கியதுதான் 'ஆம் ஆத்மி' (பொது ஜனம்) கட்சி.

தில்லியில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் முதல்வர் ஷீலா தீட்சித்தை 25,864 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து தில்லியின் 7வது முதல்வர் ஆகியிருக்கிறார்.

சரி. அவரது வீட்டில் எப்படி? "தன் மனதுக்கு சரி எனப் பட்டதைச் செய்வார். அப்படித்தான் வேலையை ராஜினாமா செய்துவிட்டு வந்தபோது நாங்கள் எதுவும் சொல்லவில்லை. பெரிய சம்பளத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள் வேலை தர முன்வந்த போதும் அதை ஏற்க மறுத்துவிட்டார். குறிப்பாக ஊழலில்லாத சமூகம் அமையணும், ஏழை, நடுத்தர மக்களின் வாழ்க்கைத் தரம் உயரணும்கிறதுதான் அவரோட குறிக்கோள்!" என தனது இரண்டு குழந்தைகளை அணைத்தபடி சொல்லும் கெஜ்ரிவாலின் மனைவி சுனிதா, முதல்வரான பிறகும் அதே அடுக்குமாடிக் குடியிருப்பிலேயே வசிக்க விரும்புவதாகச் சொல்லி புருவம் உயர்த்த வைத்திருக்கிறார்.

**- எஸ். அன்வர்**

tamilmagazinesblogspot.com

# ராசி

"கிரைய்... கீரைய்..." கீரைக்கார கண்ணுசாமித் தாத்தா குரல் கொடுக்கவும், அடுப்படியிலிருந்த விஜயா அவசரமாக வாசலுக்கு வந்தாள். அவளைப் போலவே எதிர்வீட்டு கண்ணம்மாவும் வெளியில் வர ஒவ்வொருவராக வரத்தொடங்கினார்கள்.

"என்ன தாத்தா... இவ்வளவு நாளா ஏன் வரலை... உடம்புக்கு முடியல்லியா... ஒரு மாதத்துக்கு மேல் ஆகிறது உங்க கீரை சாப்பிட்டு..." என்று ஆளாளுக்கு கேட்கவும், தாத்தா அழவே ஆரம்பித்து விட்டார்.

"அப்படி என்னதான் நடந்தது...?"

"இரண்டு நாள் ஜுரத்தில் என் பெண்சாதி பொசுக்குன்னு போயிடுச்சும்மா... வேளைக்கி பதினைந்து சேர் கறக்கும் சீமைப் பசு என் மகன் வாங்கிக் கட்டினான்... மாட்டுக்கு பெண்டுழந்தான் சுழியாம்... என் பெண்டாட்டியை அடிச்சுடிச்சு..." தாத்தா விளக்கவும் இதைக் கேட்டுக் கொண்டிருந்த ராஜி "பாத்தீங்களா தாத்தா... இந்த வயசுல உங்களுக்கு இப்படி இருக்கே... கீரை வாங்க வருகிற புருஷன் இல்லாத பொம்பளைங்களை கூடையில கை வைக்கக் கூடாது... ராசி இல்லாதவங்க... வியாபாரம் ஆகாதுன்னு சொல்லி அவங்களைத் தொடவிடமாட்டீங்க.... கண்ணம்மா மாமி, ராதா அக்காவெல்லாம் எங்களை கீரை வாங்கித்தரச் சொல்லுவாங்க... புருஷனை இழந்து எவ்வளவு கஷ்டப்பட்டு குழந்தைகளையும் படிக்கவைக்கிறாங்க... அவங்க வருத்தம் புரியாம அவங்களை எப்படி வேதனைப் படுத்துவீங்க..." என்று சொல்லவும் கண்ணம்மா மாமி வர, "நீ மொதல்ல கீரையை எடு..." என்றார் கண்ணுசாமித் தாத்தா! ●



■ மன்னை. ஜி. நீலா



tamilmagazinesblogspot.com



# ஜல்லிக்கட்டுக்கு ரஜினி வரமாட்டாரா?



தமிழர்களின் வீரத்தை 500 ஆண்டுகளாக பறைசாற்றிக்கொண்டிருக்கும் ஒரே நிகழ்வு, ஜல்லிக்கட்டு. மஞ்சுவிரட்டு, எருதுக்கட்டு என ஊருக்கு ஊர் ஒவ்வொரு பெயர்களில் நடத்தப்படும் விழாக்களில், அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுதான் உலக ஃபேமஸ்.

அலங்காநல்லூரில் முனியாண்டி சுவாமியின் உத்தரவுப்படி ஒவ்வொரு ஆண்டும் மாட்டுப்பொங்கலுக்கு மறுநாள் ஜன. 16-ம் தேதி சிலிர்க்க வைக்கும் ஜல்லிக்கட்டுத் திருவிழா

Moviezzworld.com
magazinesblogspot.com

தமிழர்களின் வீரத்தைப் பறைசாற்றும் அரசு விழாவாக விமரிசையாக நடத்தப்பட்டு வருகிறது.

"இந்த முனியாண்டி சுவாமி துடியான தெய்வமுங்க. ஜல்லிக்கட்டு ஆரம்பித்து சரியாக 12 மணியில் இருந்து மதியம் 1.15 மணிக்குள் ஏதாவது ரத்தப்பலி வாங்கும். அப்ப அங்க முனியாண்டி சுவாமி இருப்பார். அப்படி ரத்தப்பலி வாங்கினால்தான் ஊரின் சாபம் தீரும் என்பது ஐதீகம். இதை நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். இப்போதுதான் கடுமையான கெடுபிடிகள் மற்றும் உடனடி மருத்துவ உதவியால் உயிர்ப்பலி ஏற்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது" என்றார், முனியாண்டி கோயில் பூசாரி ஆசைத்தம்பி.

புத்தாண்டு உற்சாகம் கரைபுரளும் ஜனவரி மாதத்தை மதுரைக்கு ஒதுக்கும் கெஸ்ட்டுகளில் பெரும்பாலானோர் பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜெர்மன், டென்மார்க், இத்தாலி, இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர்வாசிகள்தான்.

இந்த வெளிநாட்டுப் பயணிகளின் வருகையால் ஜல்லிக்கட்டு உற்சாகம் அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் உள்ளிட்ட கிராமங்களில் இப்போதே கரைபுரண்டு வருகிறது. இவர்களை இன்முகத்துடன் வரவேற்கும் கிராமத்தினர் வீடுகள் தோறும் வண்ணக்கோலம், மண்சட்டிப் பொங்கல், கரும்புத் தோரணம், மஞ்சள் கிழங்குக் காப்பு

**எருமை மாட்டை நாங்க ஈட்டியால் குத்துவோம்!**





tamilmagazinesblog
Moviezzworld.com





நாங்க வாத்துகூட பிடிச்சதில்ல...

என இனிக்கும் சர்க்கரைப் பொங்கலுடன் குலவையிட்டு தமிழர்களின் பண்பாட்டு கலாச்சாரத்தையும் சேர்த்துப் பரிமாறி வருகின்றனர்.

கிடைத்த சந்தர்ப்பத்தில் நாமும் அவர்களுடன் அளவளாவினோம்...!

**இங்கிலாந்து ஜோடி கேத்தரின் - பிலிப்:** இது போன்ற உணர்ச்சிகரமான திருவிழாவை எங்களது வாழ்நாளில் காண்பதை பெரும் பாக்கியமாக கருதுகிறோம்.

**இத்தாலி ஆங்கில ஆசிரியை பிரான்சிஸ்கா:** எங்க ஊருல... இதுமாதிரி ஜல்லிக்கட்டெல்லாம் கிடையாது. ஆனா... எருமை மாட்டை ஈட்டியால குத்தி எங்க ஊரு ஆம்பிளைங்க கன்னாபின்னான்னு விளையாடுவாங்க. இங்க அதுமாதிரி எதுவும் இல்லை... மாட்டுக்கும் மரியாதை கொடுக்கிறீங்களே...! உங்களை நினைச்சா.. ரொம்பப் பெருமையா இருக்கு...!

**ஜப்பான் யுகிகட்சு நாகசாவா மனைவி டோகாகோ நாகசாவா, மகள் சிகாரோ நாகசாவா:** காளைமாடு முன்னாடி இவ்வளவு தைரியமா நின்னு அடக்குற இந்த கேம்... வாவ்...! மார்வலஸ்...! ஆமாம்... இதைப் பார்க்க சூப்பர் ஸ்டார் ரஜினி வரமாட்டாரா..?

**ஆஸ்திரேலிய வரவான மேக்சினா:** இப்ப நிக்கிறது உங்க ஊரு மண்ணு.. இந்த வீரம்செறிந்த மண்ணுல என்னை கண்ட மேனிக்கு போட்டோ...கீட்டோ எடுத்துடாதீங்க... ப்ளீஸ்...!

**டென்மார்க்கைச் சேர்ந்த லூனா, ப்ளோரியன் ஜோடி:** நெசமா நம்புங்க... நாங்க உண்மையான ஜோடி இல்லே.. இங்க வந்து தான் சேர்ந்துக்கிட்டோம். என்னோட பியான்சி வேற ஆளு...! நாங்க வாத்துகூட பிடிச்சதில்லே..! இப்படி சமத்தா... காளைகளை அடக்குறாங்களே... அந்த இளம் காளைகளுக்கு எங்களோட அன்புப் பரிசு.. இந்த ஃப்ளையிங் கிஸ்...! இந்தாங்க புடிச்சுக்கோங்க...

சொல்லிக்கொண்டே ஃப்ளையிங் கிஸ் ஒன்றை வீரர்களுக்கு இவர்கள் பறக்கவிட... ஃபயர் பத்திக்கிச்சு!

**- ஆர். பாலசரவணக்குமார்**
**படங்கள்: ராமசாமி**



tamilmagazinesblogspot.com

# பூ



எஸ். கௌரிமீனாட்சி

திருமணமாகி புகுந்த வீட்டிற்கு வந்திருந்தாள், மாலினி.

“ஹலோ அம்மா, எப்படிம்மா இருக்க? அப்பா நல்லா இருக்காரா? தங்கச்சி எப்படி இருக்கா?” என்றாள் அம்மாவிடம்.

“எல்லாம் நல்லாயிருக்கோம். என்ன விஷயம்மா. நீ நல்லா இருக்கியா?” என்றாள் அம்மா.

“நல்லா இருக்கேன்மா. ஒரு மாசமாகியும், என்னால அத்தை, மாமாவோட ஒட்ட முடியலைம்மா. அவர் என்னை நல்லாத்தான் வச்சிருக்கார். எப்பவும் உங்க ஞாபகமாவே இருக்கு” என்றாள் மாலினி.

“நாளானாப் பழகிடும் மாலினி. கொஞ்ச நாள்ல எல்லாம் சரியாயிடும். வெச்சுடவா?” போனை வைத்தாள் அம்மா.

மாலினி எழுந்து, தோட்டத்தில் உலாவ ஆரம்பித்தாள். இரண்டு நாட்களுக்கு முன் தோழி உமாவிடம் இருந்து, வாங்கி வந்த கனகாம்பரச் செடிகளைப் பார்த்தாள். அவை இந்த மண்ணிற்குப் பழகி ஃப்ரெஷ்ஷாக தோற்றமளித்தன.

மாலினியின் மூளையில் பளிச்சென மின்னல் வெட்டியது.

“இந்தச் செடிகள் கூட, தன்னிடத்தை விட்டு, வேறிடத்தில் ஊன்றினாலும், அதற்குப் பழகி விடும் போது, தன்னால் இங்கு மனம் ஒட்ட முடியாதா என்ன?”

“அத்தை, மாமா. காபி போட்டுத் தரவா?”, என்றவாறே வீட்டினுள் நுழைந்தாள் மாலினி, இணக்கத்துடன்.

tamilmagazines.blogspot.com

"அந்தம்மா டெய்லர்கிட்டே ஏன் சத்தம் போடறாங்க..?"

" 'ஜன்னல்' ஜாக்கெட் தைச்சுத் தர்றேன்னு சொல்லிவிட்டு அவர், 'வாசக் கதவு' ஜாக்கெட் தைச்சுட்டாராம்!"

- வி.சி. கிருஷ்ணரத்னம்



"என் மனைவி டீ போட்டுதான் காலையில் எழுப்புவாள்!"

"என் மனைவி 'டா' போட்டுதான் எழுப்புவாள்!"

- ஆர்.சி. முத்துக்கண்ணு





tamilmagazinespot.com



"மங்களம் பாடியும் யாரும் எழுந்து போகாமல் அப்படியே இருக்கிறார்களே. என் கச்சேரியில் மனதைப் பறிகொடுத்து விட்டார்களா?"

"நன்றாகப் பாருங்கள். எல்லாரும் நல்ல தூக்கத்தில் இருக்கிறார்கள்!"

- *என்.சி. தர்மலிங்கம்,*

"எதற்காக மன்னா அரண்மனை நாட்டியக்காரிகளை வேலையை விட்டு நிறுத்தினீர்கள்?"

"அதான் டிவியில் மானாட மயிலாட, ஜோடி நம்பர் ஒன் பார்க்கிறோமே அப்புறமென்ன?"

- *சரவணன்*





"ஜலதோஷத்துக்குப் போய் எதுக்கு டாக்டர் அட்மிட் ஆகச் சொல்றீங்க?"

"ஆஸ்பத்திரில எல்லா பெட்டும் காலியா இருந்தா பார்க்கறதுக்கு ரொம்ப கஷ்டமா இருக்குதே..."

- *வி. சாரதிடேச்சு*

Moviezworld.com
tamilmagazines.blogspot.com

நாத்தெடுத்து நடவுநட்டு
களையெடுத்து கதிரறுத்து
கட்டுச்சுமந்து களத்துமேடு போறம் - அங்கு
கதிர் மணிகள் பாடும் உழவர் வீரம்
கட்டடிச்சி நெல்லுத் தூத்தி
கட்டுக் கட்டா வைக்கோல் கட்டி
நெல்லுக் குத்தி பொங்க வைக்கப் போறம் - மீண்டும்
நெல்விதைக்கு ஏங்கும் கழனி ஈரம்

பொங்கலோ பொங்கல்
பொங்கிடும் மகிழ்ச்சி தந்திடும் பொங்கல்

வான் மழையின் நீரெடுத்து வாசல் தெளிப்போம்
வண்ண மயில் தோகையிலே வாரிக்கூட்டுவோம்
வானவில்லின் நிறமெடுத்து கோலம் தீட்டுவோம்
வழியெங்கும் நட்சத்திர தோரணங்கட்டுவோம்
கதிரவனின் நெருப்பெடுத்து அடுப்பை மூட்டுவோம்
கரும்புச்சாறின் இனிப்பெடுத்து சுவையைக் கூட்டுவோம்

பொங்கலோ பொங்கல்
பொங்கிடும் மகிழ்ச்சி தந்திடும் பொங்கல்

இயற்கையின் ஆற்றலுக்கு வாழ்த்துச் சொல்லுவோம்
இணைந்துழைத்த மாட்டுக்கும் நன்றி பகிர்வோம்
உறவுக்கார சனங்களெல்லாம் உறவை வளர்ப்போம்
உரி அடித்தல் கபடின்னு உரமேற்றுவோம்



**மகிழினி மணிமாறன்**

# பொங்கலோ பொங்கல்!



ஜல்லிக்கட்டுக் காளையெல்லாம் மோதிட அழைக்கும்
துள்ளிக்கிட்டு இளவல்களும் களத்துல குதிக்கும்

பொங்கலோ பொங்கல்
பொங்கிடும் மகிழ்ச்சி தந்திடும் பொங்கல்

வியர்வையிலே பூமித்தாயின் தாகம் தீரும்
விவசாயியை விரும்பிடும் கழனிச்சேறும்
விண்ணைக்கண்டு பயிர்களெல்லாம் விண்ணப்பம் விடுக்கும்
விண்ணும் மகிழ்ந்து அன்பளிப்பாய் மழையினைக் கொடுக்கும்
பூமியின் அகமகிழ்வே பயிர்களின் செழிப்பு
பொங்கலோ பொங்கல் கூறும் உழவரின் சிரிப்பு

பொங்கலோ பொங்கல்
பொங்கிடும் மகிழ்ச்சி தந்திடும் பொங்கல்.

tamilmagazines.blogspot.com
moviezworld.com

குமுதம் நூலகம்

# பு(து)த்தகம்

## குமுதம் ஒருபக்கக் கதைகள் : 2007

எழுத்துலகில் மிகப்பெரிய மைல்கல் குமுதம் ஒரு பக்கக் கதைகள். நடைமுறை வாழ்க்கையில் நாம் அன்றாடம் காணும் பிரச்னைகள், போராட்டங்கள், அன்பு,




காதல், பகை, போட்டி, பொறாமை இவைதான் இந்த ஒருபக்கக்கதைகளின் கருவாக அமைந்துள்ளன. பிரச்னைகளை மட்டும் பேசாமல் அதற்கான தீர்வையும் இந்த சின்னஞ்சிறு கதைகளிலேயே அதன் ஆசிரியர்கள் வைத்திருப்பது வியப்பு. இவர்கள் தொடாத பொருளே இல்லை என்கிற அளவிற்கு சிகரம் தொட்டுள்ளனர். ஒவ்வொரு கதைக்கும் நடை, உத்தி, உள்ளடக்கம் வேறுபட்டு நிற்பது, படைப்பாளிகளின் தனித்திறன். மொத்தத்தில் குமுதம் ஒருபக்கக் கதைகளைப் படித்து முடித்த எவரும் ஒரு எழுத்தாளராக மலர்வது உறுதி.

**வெளியீடு : குமுதம் பு(து)த்தகம், 306, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10. பக் : 112, விலை : ரூ.80/- இ-மெயில் :** Puduthagam@kumudam.com.

## உயிருக்கு நேர் :

**தொகுப்பாசிரியர் : முனைவர் ம.நடராசன்.**

தமிழர் வரலாற்றில் மொழியைக் காக்க நடந்த போராட்டம்தான் எழுச்சிமிக்கது; வரலாற்றுச் சிறப்பு மிக்கது. 1930களுக்குப் பிறகு இந்திமொழி ஆதிக்கத்திற்கு எதிராக தமிழர்கள் கிளர்ந்தெழுந்தது. 1940களில் அது வலுப்பெற்று, தமிழகம் முழுதும் பற்றிக் கொண்ட இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், துப்பாக்கிச் சூடுகள், உயிர்ப்பலிகள் ஆட்சியாளர்களின் அடக்குமுறைகள் என்று ஒன்றுவிடாமல் தொகுத்து பதிவாக்கியுள்ளார்.




மொழியைக் காக்க நடந்த போராட்டங்களில் உயிர் நீத்த அத்தனை மொழிப்போராளிகளும் நினைவுகூரப்பட்டுள்ளனர். மொழிக்காக தங்கள் கைக்குழந்தைகளுடன் சிறை சென்ற பெண்கள், 1965-ல் மாணவர்கள் போராட்டம், அதில் உயிர்நீத்த மாணவர்களின் மொழிப்பற்று அலசப்பட்டுள்ளன. மொழிப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள், மற்றும் தமிழறிஞர்களின் நேர்காணல்கள், போராட்டம் தொடர்பான நூல்கள் மற்றும் பத்திரிகைச் செய்திகளை ஒருசேர அறிந்துகொள்ள இந்நூல் உதவும். அடுத்த தலைமுறையினரும் தமிழ்மொழிப் போராட்டத்தை உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற நூலாசிரியரின் நோக்கம் நூலில் நிறைவேறியுள்ளது.



tamilmagazines.blogspot.com

மேலும், மொழிப்போர் பற்றிய ஆய்வுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவணம் இந்நூல்.

**வெளியீடு : தமிழ் அரசி பதிப்பகம், 189, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை-18, பக் : 528. விலை : ரூ.300/-**

## மாண்புமிகு மனிதர்கள் :

### வானொலி அண்ணா என்.சி. ஞானப்பிரகாசம்

மனித சமூகத்திற்கு முன்மாதிரியாக வாழ்ந்து வரலாறாக மாறிய மாமனிதர்களின் கதைதான் 'மாண்புமிகு மனிதர்கள்'. பெஞ்சமின் பிராங்க்ளின், சிந்தனை சிற்பி சிங்காரவேலர், எழுத்தாளர் லக்ஷ்மி, ஔவை டி.கே. சண்முகம், மகான் சங்கராச்சாரியார், கவியரசு கண்ணதாசன், கல்பனா சாவ்லா உள்ளிட்ட மனித குலத்திற்கு எடுத்துக் காட்டாய் திகழ்ந்த 12 பேரின் வாழ்வை கதைகளாக்கி சிறுவர்களை உயர்ந்தோராய் மாற்றும் பணி இது.




**வெளியீடு : கற்பக வித்யா பதிப்பகம், ஜே. 6, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை-14. பக்: 88. விலை : ரூ.80/-**

**- இரா. மணிகண்டன்**



tamilmagazines.blogspot.com

# உப்புத் திருவிழா!

தமிழர்களுக்கு தைத் திருநாள் பெருவிழாவாக நடப்பது போல் மலை மாவட்டமான நீலகிரியின் மூத்த பழங்குடியினரான தோடர்கள் தங்களது வாழ்க்கையில் பின்னிப் பிணைந்த எருமைகளுக்கு எல்லோரும் ஒன்று கூடி எடுக்கும் உப்து விழா பிரசித்தியானது. (உப்புத் திருவிழா).

இந்தத் திருநாளன்று 67 மந்துகளிலிருந்தும் (தோடர்கள் கிராமங்கள் ) வருபவர்கள் தங்கள் பாரம்பரிய உடைகளோடு தான் இருப்பார்கள். ஆண்கள் வெள்ளைப் போர்வை, வேஷ்டியுடனும், பெண்கள் போர்வையைப்





tamilmagazine



போர்த்தியபடியும் இருப்பார்கள். எருமைகளை கடவுளாக வணங்கும் தோடர்களது கோயிலிலும் எருமைத் தலைதானிருக்கும். வீடுகளில் ஒவ்வொருவரும் 500 எருமைகள் வளர்த்து வந்தார்கள்.

திருமணத்தின் போது மணப்பெண்களுக்கு சீதனமாகவும்,



எருமைகளை பெண்கள் தொடக்கூடாது

பெயர் வைக்கும் போதும் சீராக எருமையை பரிசாகத் தருபவர்கள், இறந்து விட்டால் எருமையைப் பலி தந்து சடங்கு செய்வார்கள்.

முத்தநாடு மந்துவில் இவர்களது பூர்வீகக் கோயில் உள்ளது. பஞ்ச பாண்டவர்கள் தான் இவர்கள் குலதெய்வம்.

விழா நாளில் பெரிய வட்டமாக குழிதோண்டி அதில் உப்பு கலந்த நீரை ஊற்றுவார்கள். அந்த நீரை எருமைகளைக் குடிக்க வைப்பார்கள்.

பின்பு நாள் முழுவதும் பல்வேறு பாரம்பரிய விளையாட்டு விளையாடிக் கழிப்பார்கள்.

ஒவ்வொரு எருமைக்கும் தனித் தனிப் பெயர் உண்டு. அந்த குறிப்பிட்ட பெயர் சொல்லி அழைத்தால் அந்த எருமைகள் மட்டுமே முன்னால் வருவது அதிசயமான நிகழ்வாகும். எருமைகளை பெண்கள் தொடக்கூடாதென்ற பழக்கத்தை இன்னமும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

விழா நாளன்று எருமைப் பாலிலிருந்து எடுக்கப்படும் நெய்யிலிருந்து விளக்கு ஏற்றி பின்பு குழிக்குள் உப்பு, பால் ஊற்றி விட்டு நடனமாடுவார்கள். இவர்கள் நடனத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா விரும்பிப் பார்ப்பாராம். கடந்த முறை கொடநாடு வந்த போது இவர்கள் நடனத்தை ரசித்த முதல்வர், பெண்களோடு இணைந்து தானும் நடனமாடினார். அதை தங்களுக்குக் கிடைத்த பெருமையாக நினைவுகூர்கிறார்கள்.

-வீரகேரளம் சரவணன்



tamilmagazinesblogspot.com

மூர்த்தி நடுஇரவில் திடுக்கிட்டு திடீரென்று விழித்தெழுந்தான். பக்கத்தில் மனைவி சுமதி ஏதேதோ தூக்கத்தில் உளறிக்கொண்டிருந்தாள். ஆனால் இப்பொழுதெல்லாம் சில மாதங்களாக சிறிது நேரம் சிரிப்பாள், சிறிது நேரம் அழுவாள், சிறிது நேரம் வில்லத்தனமாக சவால்கள் விடுவாள். இப்படி தூக்கத்தில் நடக்கும் விஷயங்களை அவளிடம் மறுநாள் காலை சொன்னால், எதுவும் நடக்காதது போல் மறுப்பாள். அதை விவாதிப்பதற்கும் இருவருக்கும் நேரம் இருக்காது. எப்போதும் இருவரும் வேலை வேலை என்று ஓடிக்கொண்டே இருப்பார்கள்.

இன்று எப்படியோ அவளை சம்மதிக்கவைத்து அவர்களது குடும்ப மனோதத்துவ டாக்டர் சுரேஷ் க்ளினிக்கிற்கு அழைத்து வந்தான். அவர் க்ளினிக்கில் அவர்களை உபசரித்து, விசாரித்துக்கொண்டிருக்கும்பொழுது, அங்கு வேலை செய்யும் ஆயா அஞ்சுகம் சுமதியைப் பார்த்தவுடன், "அம்மா எப்படி இருக்கீங்க? நீங்க டி.வி.யில நடித்துக்கொண்டிருக்கும், 'பெண்', 'அம்மா', 'சகோதரி', 'மனைவி', 'மாமியார்' ஆகிய எல்லா சீரியல்களையும் விடாமல் பார்த்துவிடுவேன். அப்பாடி! என்னமா நடிக்கிறீங்க! விட்டால் ஆஸ்கர் அவார்டு வாங்கிடுவீங்க போலிருக்கே!" என்று பெருமை பொங்க பேசிக்கொண்டே போனாள்.

டாக்டருக்கு சட்டென்று சுமதிக்கு என்ன பிரச்னை என்று புரிந்து போயிற்று. உடனே மருந்துச் சீட்டில் எதையோ கிறுக்கி, கவரில் வைத்து, வீட்டில் போய் பார்க்கவும் என்றும், மருந்து எதுவும் தேவை இல்லை என்றும் சொன்னார். குழப்பத்துடன் வீட்டிற்கு வந்து கவரை பிரித்துப் பார்த்துவிட்டு இருவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். சீட்டில் எழுதி இருந்தது "ஏதாவது ஒரு டி.வி. சீரியலில் மட்டும் நடிக்கவும்". மூர்த்தி நினைத்துக்கொண்டான், "பல டி.வி. சீரியல்களால் ஏற்படும் மனக்குழப்பங்கள், அதை பார்ப்பவர்களுக்கு மட்டுமா என்ன? அதில் நடிப்பவர்க்கும் இருக்கத்தானே இருக்கும்!"

தஞ்சை ராம்ஜீ

# சீரியல் குழப்பம்





tamilmagazinesblogspot.com

புனித உலா

# சுருட்டப்பள்ளி

## கணவன் - மனைவி உறவு பலம் பெற

**மகாவிஷ்ணு பள்ளி கொண்டிருக்கும் தலங்கள் சிலவற்றைச் சொல்லுங்கள் என்று உங்களிடம் நான் கூறினால் ஸ்ரீரங்கம், திருவனந்தபுரம், ஆவராணி என்று பெரிய பட்டியலே போடுவீர்கள் என்பது எனக்கே தெரியும்.**

ஆனால் பரந்தாமனைப் போல பரமேஸ்வரன், பள்ளி கொண்டிருக்கும் கோயில்களைச் சொல்லுங்கள் பார்க்கலாம்?

என்னங்க.. யோசிக்கிறீங்க?

கவலையே வேண்டாம். இனி யோசிக்காமல் யார் கேட்டாலும் பதில் சொல்வீர்கள். பிரமாண்டமான உருவில் சிவபெருமான் படுத்திருக்கும் கோலத்தில் காட்சி தரும் ஒரே ஓர் ஆலயத்திற்குத்தான் நான் இந்த வாரம் உங்களை அழைத்துச் செல்கிறேன்!

**ப்ரியா கல்யாணராமன்**



**எனக்குத் திருமணமாகி 8 வருடங்கள் ஆகிவிட்டது. ஒரு பெண் குழந்தையும் உண்டு. தினமும் என் கணவருக்கும் எனக்கும் எதற்காவது சண்டைதான். நாங்கள் ஒற்றுமையுடன் வாழ எந்தக் கோவிலுக்குச் செல்லவேண்டும்?**

-எஸ்.மீனாட்சி, சென்னை-108

gsspot.com



பள்ளி கொண்ட சிவன்!

புதிய தொடர்



# ஆதலினால் ஆலயம் செல்வீர்



moviezzworld.com

சுருட்டப்பள்ளி!

இந்த ஊரில் மட்டும் சிவபெருமான் ஏன் பள்ளி கொண்டிருக்கிறார்?

சுருட்டப்பள்ளிக்கு வந்து இந்தப் பள்ளிகொண்டீஸ்வரரை வழிபட்டால் எப்படி கணவன்-மனைவி உறவு பலப்படும்?

இந்த இரண்டு கேள்விக்கும் பதிலைத் தெரிந்து கொள்ள முதலில் அமுதம் போன்ற ஒரு கதையைப் பார்க்கலாமா?

திருப்பாற்கடலைக் கடைந்து கொண்டிருந்தார்கள் தேவர்களும் அசுரர்களும்.

மந்திர மலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பைக் கயிறாகவும் வைத்து ஏகாதசியில் துவங்கிய அந்த வேலை துவாதசியன்றும் தொடர்ந்தது.

அமுதத்தை உண்டால்தான் தான் இழந்த தேவலோகப் பதவியை தேவே..... இல்லை இந்திரன் திரும்பப் பெற முடியும் என்ற நிலை.

அத்தனை பெரிய கடலினை, இத்தனை பெரிய கூட்டம் கடைந்தால் முதலில் அமுதமா வரும்? விஷம்தான் வந்தது. பயங்கர விஷம். ஆயிரக்கணக்கான பேர் மலையில் வைத்து தேய்த்தால் வாசுகி சும்மா இருக்குமா? கொடிய விஷத்தைக் கக்கிற்று. கடலும் விஷம் கொட்டிற்று.

அவ்வளவுதான். தேவர்கள் மூச்சுத் திணறினார்கள். தவித்தார்கள்.

சிவபெருமான் சும்மா இருப்பாரா? அத்தனை விஷத்தையும் 'சுந்தரமாக' மொத்தமாய்த் திரட்டி, அப்படியே வாயில் போட்டுக் கொண்டார்.

அவர் பாட்டுக்கு அந்த பயங்கரமான ஆலகால விஷத்தை வாயில் போட்டுக் கொண்டு விழுங்க முயல,



அருகில் இருந்த பார்வதி தேவி பயந்து போய்விட்டாள். கணவருக்கு ஏதாவது ஆகிவிட்டால்? என்கிற அச்சம் அது.

அதனால், ஈசன் விழுங்கிய விஷம் வயிற்றுக்குள் செல்லாதவாறு, அவரது தொண்டையை, கண்டத்தை அப்படியே பிடித்து நிறுத்தினாள். விஷப் பந்து நீலமாக அங்கேயே அடங்கியது.

அப்புறம் என்ன? தேவர்களைக் காப்பாற்றிய நிறைவுடன் உமையம்மையுடன் கயிலைக்குக் கிளம்பினார் நஞ்சுண்டேஸ்வரர்.

ஈசனாகவே இருந்தாலும் விஷம், விஷம்தானே?

ஆலகால விஷம் சிவனையே கொஞ்சம் ஆட்டம் காட்டியது.



## எங்கு எப்படி ஏன்

### சுருட்டப்பள்ளி கோயிலுக்கு எப்படிச் செல்வது?

ரொம்ப சிம்பிள். சென்னை கோயம்பேட்டிலிருந்து புத்தூர் வழியாகச் செல்லும் எல்லா பேருந்துகளும் இந்தக் கோயில் வாசலில் நிற்கும். அல்லது ஊத்துக்கோட்டைக்குச் சென்று அங்கிருந்து ஷேர் ஆட்டோ (ரூபாய் 5) அல்லது பஸ்ஸில் செல்லலாம். தமிழக-ஆந்திர எல்லையில் அமைந்துள்ளது.

### என்ன செலவாகும்?

சென்னையிலிருந்து பஸ் டிக்கெட் 35 ரூபாய். சாப்பிட ஊத்துக்கோட்டைக்கு வர வேண்டும். கோயிலில் தினம் மதிய உணவும் உண்டு.

### ஆலய தொலைபேசி எண்?

"07382005038"

### கோயில் நேரம்?

"காலை 6 முதல் 12, மாலை 4 முதல் 8. பிரதோஷ நேரங்களில் சிறப்பு பூஜை உண்டு"

### என்ன சிறப்பு?

"குடும்ப ஒற்றுமை சிறக்கும்."



tamilmagazinesblogspot.com Moviezworld.com

இறைவனுக்குத் தலை சுற்றியது. மயக்கம் வர ஆரம்பித்தது.

தேவி பரபரத்தாள். அப்படியே தரையில் அமர்ந்தாள். கணவனின் தலையை மடியில் வைத்துக் கொண்டாள். விசிறினாள். களைப்பாற்றினாள். ஈசனும் உமையவளின் அன்பில் கட்டுண்டு அப்படியே கண்ணுறங்கினார்,

விஷத்தின் வீரியத்தில் இறைவன், தேவியின் மடியில் தலை வைத்து சுருண்டு படுத்துறங்கிய இடம்தான் சுருட்டப்பள்ளி!

பின்னர்?

களைப்பு நீங்கிப் புத்துணர்வாக எழுந்தார் ஈசன்.

மாலையும், இரவும் இணையும் சனிக்கிழமை பிரதோஷ நன்னாள் அது. சந்தோஷ உச்சத்தில் அந்த நடராஜர், நடனமாட விரும்பினார். அவரது சிவகணங்களின் தலைவனான நந்திதேவருக்கு , தன் தலைவனின் எண்ணம் புரியாதா? உடனே நந்திதேவரும் உற்சாகமாகத் தலையை ஆட்டினார். தானே தன் தலையில் தூக்கிவைத்துக் கொண்டு ஆட விரும்பினார்.

விடமுண்ட கண்டன் புன்னகைத்தார். தன் பிரியத்திற்குரிய நந்தி தேவனின் இரு கொம்புகளுக்கிடையே ஆனந்தக் கூத்தாடினார்.

ஆமாம். முதன் முதல் பிரதோஷ வழிபாடு நடந்ததும் இங்கேதான்!

சரி, இதற்கும் கணவன்-மனைவி உறவு பலப்படவும் என்ன சம்பந்தம்?

விஷயம் இருக்கிறது. இத்தனை சிறப்புகள் நடந்த இடம் இது என்றால் மற்ற தெய்வங்கள் சும்மா இருப்பார்களா? எல்லாக் கடவுளும் தம்பதி சமேதராக வந்து இறைவனையும் இறைவியையும் இங்கே வணங்கினார்கள். ஈசனின் மற்ற வடிவங்கள் கூட ஜோடியாக இங்கே வந்தார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அதனால்தான் இந்த ஆலயத்தில்



அட, பெண் நாதஸ்வர வித்வான்!

ஏகப்பட்ட ஜோடிகளைப் பார்க்க முடியும். பிரச்னை தீர வரும் பக்த ஜோடிகள் மட்டும் அல்ல, பகவான் ஜோடிகளும்!

இந்த சுருட்டப்பள்ளியில் மனைவியுடன் காட்சி தருகிறார் ஆலமர்கடவுள். அதுவும் அம்பாள் கௌரியை ஆலிங்கனம் செய்து கொள்ளும் தம்பதி சமேத தட்சிணாமூர்த்தி தரிசனம்.



வாகனங்களுடன் சப்த மாதா!

## ஏகப்பட்ட ஜோடிகள்! பக்த ஜோடிகள் மட்டுமல்ல, பகவான் ஜோடிகளும்தான்!

குபேரன் தன் மனைவியுடன் இங்கே காட்சி தருகிறான். ராமபிரான் வழிபட்ட ராமலிங்கேஸ்வரரும், பர்வதவர்த்தினியுடன் அருளாட்சி. வால்மீகீஸ்வரர், மரகதாம்பிகையுடன் காட்சி. ஐயப்பனும் மனைவிகளுடன் தரிசனம். அது மட்டுமல்ல எல்லா ஆலயமும் போல இங்கே துவார பாலகர்கள் கிடையாது. அவர்களுக்குப் பதிலாக செல்வத்துக்கு அதிபதியான மகாலக்ஷ்மியின் நவநிதிகளான சங்கநிதியும், பத்மநிதியும் இங்கே தங்கள் மனைவிகளான வசுந்தரா, வசுமதியுடன் காட்சி தருகிறார்கள்.

தம்பதியாகக் காட்சிதரும் பள்ளிகொண்ட ஈஸ்வரனைக் காண வந்த தம்பதிகள் இவர்கள். இறைவனிடம் இவர்கள் வேண்டியது என்ன தெரியுமா?

"ஈசனே, இங்கே வந்து வணங்கும் தம்பதியர் குடும்ப வாழ்வில் எல்லாப் பிரச்னைகளும் நீங்கி ஒற்றுமையுடன் சந்தோஷமாக வாழ அருள் புரியுங்கள்."

கடவுளைப் பார்த்து கடவுள்களே வேண்டிய விண்ணப்பத்தை கவனிக்காமல் போய்விடுவாரா சிவன்? அதனால்தான் குடும்பப் பிரச்னைகள் தீர்க்கும் உன்னதத் தலமாக இருக்கிறது சுருட்டப்பள்ளி.

இத்தனை மகிமை பெற்ற சுருட்டப்பள்ளி ஆலயத்தை வலம் வருவோமா?

மூன்று நிலை கொண்ட ராஜகோபுரத்திற்குள் நுழைவதற்கு முன்பாகவே எதிரில் பிரமாண்டமான பீடத்தில் ஐந்து அடி உயரத்தில் நந்தி பகவானின் தரிசனம் மெய்சிலிர்க்க வைக்கிறது. அவருக்கு முக்கியத்துவம் வாய்ந்த தலமாயிற்றே!

உள்ளே நுழைந்தால் அம்மனுக்கு இடதும் வலதுமாக காமதேனுவும், கற்பக விருட்சமும் சிலை



tamilmagazines.blogspot.com

வடிவில் நம்மை வரவேற்கின்றன. திருப்பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய செல்வங்கள் ஆயிற்றே, இங்கே இல்லாமல் இருக்குமா?

கருவறையில் நின்ற திருக் கோலத்தில் அன்னை மரகதாம்பிகை எழில் கொஞ்ச அருள்பாலிக்கிறாள்.

வழக்கமாக எல்லா ஆலயங்களிலும் இருக்கும் தெய்வங்களுடன் அரிதாக சில ஆண்டவன்களும் இந்தக் கோயிலில் இருக்கிறார்கள்.

அவர்களை முதலில் பார்ப்போம். சிவபெருமான் தானே படைக்கும்


முதல் பிரதோஷம் இங்கேதான்!

தொழில் செய்யும் பிரம்மாவாகவும், காக்கும் தொழில் செய்யும் விஷ்ணுவாகவும் மாறி பிரம்மா, விஷ்ணுவைத் தன்னகத்தே கொண்ட ஏகபாதத்ரிமூர்த்தி இங்கே காட்சி தருகிறார். அவரை வணங்கினால் மூன்று தெய்வங்களையும் வணங்கியதற்குச் சமம். 3 இன் 1!

அமுதம் கடையும் போது ஏற்பட்ட சூட்டினாலும், வாசுகியின் மூச்சுக் காற்றாலும் தேவர்கள் அனைவருக்கும் வெப்ப நோய் தாக்கியது. அந்தக் கொடும் நோயைத் தீர்ப்பதற்காக சிவபெருமான் தன் கையில் அக்னியுடன் மூன்று தலை, மூன்று கால்கள், மூன்று கைகளுடன் உடனடியாக எடுத்த அவதாரமான ஜ்வரஹரமூர்த்தியையும் இங்கே தரிசிக்கலாம். இவரை வழிபட்டால் வெப்பம் சம்பந்தமான எல்லா நோய்களும் தீர்ந்துவிடும்.

ராஜ யோகத்தைத் தரும் ராஜ மாதங்கியும், கையில் கிளியுடன் காட்சி தரும் ஞான துர்க்கையும் இங்கே காட்சி தருகிறார்கள். ராஜ மாதங்கி சிலைக்குக் கீழே ஒரு சுரங்கப் பாதை இருப்பதாகவும், அது காளஹஸ்தி கோயிலுக்குச் செல்வதாகவும் கூறுகிறார்கள். (எந்த சாமியார் கனவில் வந்து திறந்து பார்க்கப் போகிறார்களோ?!)

சப்தமாதாக்கள் இங்கே விசேஷமாகத் தங்கள் வாகனங்களுடன் எழுந்தருளியிருப்பது கொள்ளை அழகு! பிராம்மி - அன்னம், மகேஸ்வரி - நந்தி, கௌமாரி - மயில், வைஷ்ணவி - கருடன், வாராஹி - பன்றி, இந்திராணி - யானை, சாமுண்டி - எருது என்று வாகனங்களில் அமர்ந்து எழிலாகக் காட்சி தருகிறார்கள்.

இதோ இப்போது பள்ளி

கொண்டீஸ்வரர் கருவறைக்குள் எட்டிப் பார்ப்போம்.

ஏதோ ஒரு பெருமாள் கோயிலுக்குள் சென்று விட்ட உணர்வு டக்கென்று தோன்றுவதை மறுக்க முடியவில்லை. அப்படிப் பார்த்தே பழகிவிட்டோமல்லவா?

அருள் மிகு பள்ளிகொண்டீஸ்வரர் மிகப் பெரிய சன்னதியில், மிகப் பெரிய உருவில் சர்வ மங்களங்களையும் அருளும் சர்வமங்களா தேவியின் மடியில் சயனக் கோலத்தில் எழுந்தருளியுள்ளார். அந்த அற்புதக் கோலத்தை பார்க்கப் பார்க்க மெய் சிலிர்க்கிறது! ஆஹா, இவர்தான் தேவர்களைக் காப்பதற்காக நஞ்சை உண்ட ஈஸ்வரன்; ஆஹா, இவர்தான் இங்கே வரும் பக்தர்களின் குடும்பப் பிரச்னைகளைத் தீர்க்கும் பரமன் என்று பரபரக்கிறது மனசு!

பள்ளிகொண்டீஸ்வரரைச் சுற்றி பிருகு முனிவர், பிரம்மா, மகாவிஷ்ணு, மார்க்கண்டேயர், நாரதர், சந்திரன், குபேரன், சூரியன், அகத்தியர், புலஸ்தியர், கௌதமர், தும்புரர், வசிஷ்டர், விஸ்வாமித்திரர், வால்மீகி, தேவேந்திரன், விநாயகர், வள்ளி, தேவசேனாவுடன் முருகன் ஆகிய அனைவரும் வணங்கியபடி நிற்கிறார்கள்.

ஆமாம். இத்தனை பேரும் அந்தச் சன்னதியில் அருள்பாலிக்கிறார்கள். ஒரு முறை கருவறையை எட்டிப் பார்த்து வணங்கினால் இத்தனை பேரையும் வணங்கிய பலன் கட்டாயம் கிட்டிவிடும்.



மனைவியுடன் தட்சிணாமூர்த்தி

அது மட்டுமல்ல, பெருமாள் கோயில் போலவே இந்தப் பள்ளிகொண்டீஸ்வரர் சன்னதியில் பக்தர்களின் தலை மீது சடாரி சாத்துகிறார்கள். அதாவது சிவபெருமானின் பாத தரிசனம் இருப்பதால் அப்படிச் செய்கிறார்கள். அங்கே மகாவிஷ்ணுவும் இருப்பதால் தீர்த்தப் பிரசாதமும் தருகிறார்கள்.

குடும்ப ஒற்றுமை உண்டாக மட்டுமல்ல, எல்லா நலனும் நீங்கள் பெற, நிம்மதியாக நீங்கள் படுத்துறங்க இந்தப் பள்ளிகொண்டீஸ்வரரை கட்டாயம் ஒரு முறை தரிசனம் செய்து பாருங்கள். பலன்களை உடனடியாக உணர்வீர்கள். இது சத்தியம்!

**படங்கள்: சித்ராமணி**



tamilmagazines.blogspot.com

# ஜரிகை மேனை

3



மேக்கப் கலைத்து உடை மாற்றிக் கொண்டு கேரவனை விட்டு இறங்கி காமினி காருக்கு நடக்க... அவளை ஒட்ட நடையில் தொடர்ந்தான் சிகாமணி. காரில் ஏறும் முன்...

"ஒரு நிமிஷம் மேடம். இவரு ஸ்ரீதரன். தரணிட்டயும், ஜனநாதன்ட்டயும் வொர்க் பண்ணிருக்கார்."

"வணக்கம் மேடம்." என்றான் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்ரீதரன்.

"வணக்கம். தப்பா எடுத்துக்காதிங்க. நான் புது டைரக்டர்ஸுக்கு இப்ப பண்றதில்ல" என்று, கதவைத்

MoviesWorld.com
tamilmagazines.blogspot.com



பட்டுக்கோட்டை **பிரபாகர்**

திறந்து ஏறிக் கொண்டாள். முன்புறம் சிகாமணி ஏறிக் கொண்டான்.

"மேடம்... இது ஹீரோயின் ஓரியண்டட் சப்ஜெக்ட். உங்களை மனசுல வெச்சிதான்..." என்பதில் பாதி வார்த்தைகளை சட்டத்தை மீறி கறுப்பு ஃபிலிம் ஒட்டின கார் கண்ணாடிதான் கேட்டது.

ஸ்ரீதர் அருகில் கனத்த ஸ்கிரிப்ட்டுடன் ஓடி வந்து சேர்ந்து கொண்டான் ஜெகன். ஸ்ரீதர் நாளைய இயக்குனர். ஜெகன் நாளை மறுநாளைய இயக்குனர்.

"இந்த மீட்டிங்க்குதான் பதினஞ்சி நாளா மெனக்கெட்டமா?"

கார் போன திசையையே பார்த்துக் கொண்டு, "அழகா, அறிவா எதுடா பெருசு?" என்றான் ஸ்ரீதர்.

"பெருசு என்னவோ அறிவுதான். எது ஜெயிக்குதுன்னு கேள்வியை மாத்திக் கேட்டேன்னா... அழகுதான்னு சொல்வேன். சாம்ராஜ்யங்களே சரிஞ்சிருக்கே! வீரம் மண்டி போடுது! காமம் பிச்சை எடுக்குது."

"சரி... இப்ப வேற மாதிரி கேள்வி கேக்கறேன். அழகு பெருசா? ஆசிட் பெருசா? எது பவர்ஃபுல்?"

"டேய்... டேய்... வேணாம்! அப்படில்லாம் யோசிக்காதே!" ஆனால் 'அப்படியெல்லாம்' யோசித்தபடி நடந்தான் ஸ்ரீதர்.

**கா**ர் ஓடிக் கொண்டிருந்தது. மறுநாள் ஷூட் செய்யப்படப் போகிற டூயட் பாடலை காதுக்குள் கேட்டுக் கொண்டிருந்தாள் காமினி.

ஒலித்த போனில் பெயர் பார்த்து சிகாமணி, "மேம்... ப்ரொட்யூசர் தங்கமுத்து. மனுஷன் விடமாட்டான் போலிருக்கு. பேசறிங்களா?" என்றான்.

'பேசுவதாக இல்லை' என்று சைகை செய்ததும், "அண்ணே... ஜிம்முல இருக்காங்க. அவங்களே கூப்பிடறேன்னு சொன்னாங்கண்ணே" என்று சொல்லி பின் குறிப்பாக சிரித்தும் வைத்தான் சிகாமணி.

காதிலிருந்து ஹெட்போன் கழற்றிவிட்டு, "சேட்டு பேமெண்ட் வந்துடுச்சா சிகா?" என்றாள்.

"மேடம்... நீங்க நல்ல மூட்ல இருக்கறப்ப சொல்லச்

**எது ஜெயிக்குதுன்னு கேள்வியை மாத்திக் கேட்டேன்னா... அழகுதான்னு சொல்வேன்.**



tamilmagazinesblogspot.com



சொன்னாரு... நெக்ஸ்ட் வீக் பிளான் பண்ணிக்கலாம்னு சொல்லச் சொல்லி..."

"அவருக்கு போனக் குடு."

எண்கள் போட்டு, "சேட் சார்... ஏக் மினிட் ஜி!" என்று போனை சட்டையில் துடைத்து நீட்டினான்.

"சேட் சார்... அச்சாவா இருக்கீங்களா?"

"பகூத் அச்சா பேட்டிம்மா."

"சேட் சார்.. திடீர்னு வயிறு வலி. ஸ்கேன் பண்ணிப் பாத்துட்டு உள்ளே வீக்கம், நாலு நாள் கம்ப்ளீட்டா ரெஸ்ட் எடுக்கணும்னு சொல்லிட்டாரு டாக்டர். நாளைக்கு எடுக்கற சாங்கை அப்படியே நாலு நாள் கழிச்சி எடுத்துக்கலாம் சேட் ஜி!"

"அய்யோ! பேட்டிம்மா! என்ன இப்படிச் சொல்லுது? நேத்துக்கூட செட்டை வந்து பாத்திச்சில்ல.. அறுபது லட்சம் ரூபா செட்டு. பாம்பேலேர்ந்து நாப்பது பேரு.. பூரா பூரா மாடல் கர்ள்சு வந்தாச்சு. எப்படியாச்சும் அட்ஜஸ்ட் பண்ணி.."

"உடம்புக்கு பிரச்னை எஸ்.எம்.எஸ் குடுத்துட்டா வரும்? திடீர்னு இப்படி ஆயிடுச்சி. ஸாரி.. வெச்சிடுங்க" என்று கட் செய்து, "ரெண்டு நிமிஷத்துல சேட்டு உனக்கு போன் பண்ணுவாரு. நைட்டுக்குள்ள பேமெண்ட் வீட்டுக்கு வருது. என்ன பெட்?" என்றாள்.

"மேடம்... நீங்க சாணக்கியனுக்கு பெண்பால்!"

"கெஸ்ட் ஹவுஸுக்கு ஸ்டீஃபனை வரச் சொல்லிட்டேல்ல?"

வாட்ச் பார்த்துக் கொண்டு, "அவன் வந்து முப்பத்திரெண்டு நிமிஷமா உங்களுக்காக வெயிட்டிங் மேடம்" என்றான் சிகாமணி.

கார் உத்தண்டியில் கடற்கரை நோக்கி உள் சாலையில் திரும்பி

tamilmagazinesblogspot.com

தனியான அழகான கெஸ்ட் ஹவுஸை நெருங்க... ஹாரனுக்குப் பழகின வாட்ச்மேன் அவசரமாக கேட்டைத் திறந்தபடி காமினியின் திசைக்கு ஒரு சல்யூட் வைத்தான்.

தன் டிவிஎஸ் 50-ல் சாய்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த ஸ்டீஃபன் அவசரமாக அணைத்து விட்டு, மிக மிக அவசரமாக ஹால்ஸ் பிரித்துப் போட்டுக் கொண்டான். தோளில் கேமரா பேக்.

இறங்கியதும் ஓடி வந்து நின்றவனை சில விநாடிகள் அளப்பது போல பார்த்துவிட்டு, நீச்சல் குளம் நோக்கி நடந்தாள். நீளமான நாற்காலியில் சாய்ந்து, "ஃப்ளாட் வாங்கியாச்சா? உன் லட்சியம்ல அது?" என்றாள்.

"எங்க மேடம்? வரவுக்கும், செலவுக்கும் சரியா இருக்கு" என்றபடி கேமராவை வெளியே எடுத்தான்.

"உள்ள வை. உன்னை ஸ்டில் எடுக்கக் கூப்புடலை. அப்புறம்? பேங்க்ல எத்தனை லட்சம் போட்டு வெச்சிருக்கே?"

"கிண்டல் பண்ணாதிங்க மேடம்."

"ஒரு வேளை பூரா தங்கக் கட்டியா வெச்சிருக்கியா?"

"என்ன மேடம்... ஒரு மாதிரியாப் பேசறிங்க?"

"நேரா கேட்டுடட்டுமா? வலிச்சா வருத்தப்படக் கூடாது. என்ன யோக்கியதை இருக்குன்னு என் தங்கச்சியை லவ் பண்றே?"

சட்டென்று ஸ்டீஃபனுக்கு முகம் வெளிறியது.

பின்னால் அமைதியாக கைகட்டி நின்ற சிகாமணியை காமினி திரும்பிப் பார்க்க, இந்த இடத்தில் தான் ஏதோ சொல்ல வேண்டும் என்பதை உணர்ந்து சிகாமணி, "மேடம் எங்க! நீ எங்க? அவங்களுக்கு நீ சொந்தக்காரனாக ணும்னு ஆசைப்படறது சரியாடா?" என்றான்.

"மேடம்... நாங்க



எனக்கு போலீஸையும் தெரியும். பொறுக்கியையும் தெரியும்.

ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர்...”

“நிறுத்துடா! எங்கிட்டயே வசனமா? அவளுக்கு என்னடா தெரியும்? கிராமத்திலேர்ந்து வந்தவ. எல்லாமே மிரட்சி. விதவிதமா படம் எடுத்துத் தர்றேன்னு உன் கேமராவ வித்தை காட்னதும் விழுந்துட்டா. அவளை எப்படி சரி பண்றதுன்னு நான் பாத்துக்கறேன். இனிமே அவளுக்கு ஒரு மெசேஜ் அனுப்பிச்சாகூட நான் வேற மாதிரி ரியாக்ட் பண்ணுவேன். எனக்கு போலீஸையும் தெரியும். பொறுக்கியையும் தெரியும். உன்னை நம்பி உன் குடும்பம் இருக்கு. அதை மனசுல வெச்சிக்கிட்டு நடந்துக்கோ. போ!”

“இல்ல மேடம்... அது வந்து...”

“போன்னு சொல்றப்பவே போய்டு ஸ்டீஃபன்” என்றான் சிகாமணி.

அவன் ஒரு விநாடி தயங்கிவிட்டு விறுவிறுவென்று நடந்து தன் ஆத்திரத்தை வண்டியின் கிக்கரில் காட்டி சீறலாகப் புறப்பட்டுப் போனதும், “இவன் கயிறா, பாம்பா சிகாமணி?”

“கயிறும் இல்ல... பாம்பும் இல்ல... கார்ட்டூன் மேடம்! இனிமே வாலாட்ட மாட்டான். எதுக்கும் நீங்க நம்ம பாப்பாவையும் கொஞ்சம் கண்டிச்சிடுங்க...”

“அது நான் பாத்துக்கறேன். ஜின் எடுத்துட்டு வா” என்றவள் வாட்ச் மட்டும் கழற்றி வைத்து விட்டு ஜீன்ஸ், டாப்ஸ் உடையிலேயே நீச்சல் குளத்தில் குதித்து நீந்தத் துவங்கினாள்.

✦ ✦ ✦

**கே.**கே.நகரில்... அந்த ஃபிளாட்டின் வாசலில் கோணலாக இருந்த மிதியடியை காலால் சரி செய்தபடி அழைப்பு மணி பித்தானை அழுத்தினாள் இரண்டு கைகளிலும் ஷாப்பிங் செய்த பல பைகளுடன் இருந்த பர்வதம். செயின் கோர்த்த கோல்டு ஃபிரேம் கண்ணாடி, டையிங் கலரிங் என்று தனது ஐம்பதில் பத்தைத் தொலைக்க முயன்றிருந்தாள்.

கதவு திறந்த பவானியின் அழுத கண்களைப் பார்த்து பதறி, “என்ன பவானி? ஏன் அழறே?” என்றாள்.

“ஸ்டீஃபனோட சுத்தறதைப் பாத்தா கால்ல சூடு வெப்பேன்னு போன்ல சொல்றாம்மா ராட்சசி!”



tamilmagazines.blogspot.com

**இளமை, புதுமை**
**எதிலும் முதன்மை**

நிறுவிய ஆசிரியர்
**எஸ்.ஏ.பி.**

நிறுவிய பதிப்பாளர்
**பி.வி. பார்த்தசாரதி**

சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குநர்
**பா. வரதராசன்**

அச்சிட்டு வெளியிடுபவர்
**பா. வரதராசன்**

குமுத ஆசிரியர்
ச. கோசல்ராம்

ஆசிரியர்
க. ராமச்சந்திரன்
(ப்ரியா கல்யாணராமன்)

பொறுப்பாசிரியர்கள்
இரா. மணிகண்டன்
இளையரவி

துணைத் தலைமை நிருபர்
அன்வர்

உதவி ஆசிரியர்
கடற்கரய்

நிருபர் குழு
வீரகேரளம் சரவணன், சிந்துகுமார்,
அரண்மனை சுப்பு
அரவிந்த், ஜோசப்.

புகைப்படக் கலைஞர்கள்
சித்ராமணி, ஆர். சண்முகம்

**குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், பழைய எண்.151 புதிய எண்.306, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல் அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகிறது.**

கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை, கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும், கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. பிரசுரமாகும் கதை, கட்டுரை மற்றும் படைப்புகள் அனைத்திற்கும் பதிப்பாளரே உரிமையாளராவார். மறுபிரசுரம் செய்வதோ, மற்ற வேறு வகையில் படைப்புகளை பயன்படுத்தவோ நிர்வாகத்தினரின் முன் அனுமதி பெற்றே செய்ய வேண்டும்.

பிரசுரிக்கத் தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகளுக்கு பி.ஆர்.பி சட்டப்படி ஆசிரியர் குழுவே பொறுப்பு.

கதை, கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி :
தபால் பெட்டி எண் : 2592, சென்னை 600 031.
**தொலைபேசி எண் : 26422148**
**ஃபேக்ஸ் எண் : 26425041**

**இ-மெயில் : edtl@kumudam.com**


"அறிவு கெட்டவளே... நான்தான் காமினியோட மூடு பாத்துப் பேசறேன்னு சொன்னேன்ல. நீ எதுக்கு அவசரப்பட்டே?"

"நான் சொல்லலைம்மா. சிகாமணிதான் போட்டுக் குடுத்திருக்கணும். ஸ்டீஃபனைக் கூப்பிட்டு மிரட்டி அனுப்பியிருக்காம்மா. இவ உத்தரவு போட்டா அதை அப்படியே கேக்கறதுக்கு அவன் என்ன அடிமையா?"

மகளின் தலையை நாய்க்குட்டியைத் தடவுவது போல தடவிக் கொடுத்தபடி, "ரொம்பதான் ஆடறா அவ. நான் இல்லாம அவ பொறந்துட்டாளா? ஒரு வாடகை ஃபிளாட்ல குடி வெச்சிருக்கா. உன்னைப் படிக்க வைக்கிறா. வீட்டுச் செலவுக்கு மாசம் இருபதாயிரம் தர்றா. இதெல்லாம் அவ ஏதோ பிச்சை போடற மாதிரி செய்றா. அவ கடமை இல்லையா இது? இவ மட்டும் லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கலாமா?" என்றாள் பர்வதம்.

"ஸ்டீஃபன் ரொம்ப நல்லவன்ம்மா. இப்போ அசிஸ்டெண்ட் கேமரா மேனா போறான்ம்மா. ஓஹோன்னு வருவான்ம்மா. குடிப் பழக்கம் இல்லாதவன்ம்மா."

"இதெல்லாம் அவகிட்ட

tamilmagazines.blogspot.com
MoviezWorld.com



சொன்னியா?"

"சொன்னதுக்கு கெட்ட வார்த்தை சொல்லித் திட்றாம்மா. சரக்கடிச்சிருப்பா போலிருக்கு. பேச்சுலயே வாசனை அடிக்குது. இவ என்னம்மா யோக்கியம்?"

"அவளைக் கேக்கறது யாரு? முகிலையே தூக்கியெறிஞ்சி பேசறா. கொஞ்சம் பொறுமையா இரு. என்ன செய்யலாம்னு யோசிப்போம். எனக்கு அந்த ஸ்டீஃபனைப் பிடிச்சிருக்கு. நான் இருக்கேன். கவலைப்படாதே" என்ற பர்வதம் தென்மேற்குத் திசையைப் பார்த்து தீவிரமாக யோசிக்கத் துவங்கினான்.

• • •

**ஜி**ன் அருந்திக் கொண்டிருந்த காமினி கெஸ்ட் ஹவுஸ் ஹாலில் சோபாவில் புதைந்து டி.வி.யில் சேனல் சேனலாக மாற்றிக் கொண்டிருந்தாள்.

**எனக்கு அந்த ஸ்டீஃபனைப் பிடிச்சிருக்கு. நான் இருக்கேன். கவலைப்படாதே.**

"சிகா... நைட் நான் இங்க தங்கறேன். முகில் பாம்பேலேர்ந்து நாளைக்குதானே வர்றார்?"

"ஆமாம் மேடம். நாளைக்கு ஈவினிங் ஃப்ளைட்."

"சரி. நீ போ" என்றவள் அவன் விலகியதும் போனில் எண் போட்டு அழைத்து, "என்னப்பா பண்றே?" என்றாள்.

"ஒரு தெலுங்குப் படம் ரீமேக் பண்ற பிளான்ல டிவிடி குடுத்துட்டுப் போனாங்க. பார்த்துட்டிருக்கேன். எங்க இருக்கே நீ?" என்றது எதிர்முனை.

"உத்தண்டில. முகில் நாளைக்குதான் வர்றான்."

"வரட்டுமா டார்லிங்?"

"வா... நிறைய பேசணும். நிறைய முடிவெடுக்கணும்" என்றாள்.

**சரி... பரத், சுசிலா எங்கப்பா?**

**(தொடரும்)**



tamilmagazinesblogspot.com



"தலைவர்கிட்டே ரெட்டைக் குழந்தையைக் கொடுத்து பேர் வைக்கச் சொன்னது தப்பா போச்சு..."

"ஏன்?"

"முன் ஜாமீன், பின் ஜாமீன்னு பேர் வைச்சுட்டாரு!"

- வி. சாரதிடேச்சு

"ஏன் அடிக்கடி அம்மாவும் நீயும் சண்டை போட்டுக்கிட்டு என் உயிரை வாங்குறீங்க?"

"சண்டை போடலியே..? பண்டமாற்றம் தான் பண்ணிக் கிட்டோம். உங்கம்மா அகப்பையை என் மேலே தூக்கி எறிஞ்சாங்க.. நான் பூரிக்கட்டையை அவங்க மேலே பதிலுக்கு வீசினேன்!"

- எல்.வி. வாசுதேவன்





tamilmagazinesblog.com

"தலைவர் ஏன் கட்சியை கலைத்து விட்டார்?"

"நடந்து முடிந்த தேர்தலில் கட்சி போட்டியிட்ட அனைத்து இடங்களிலும் 'நோட்டா' அதிக வாக்கு பெற்றுவிட்டதாம்!"

-அ. குணசேகரன்



"மறியல் போராட்டத்துக்கு இடையில தலைவர் உன்கிட்டே வந்து காதில் என்ன சொன்னாரு?"

"சிம்பு யாரைத்தான் லவ் பண்ணுறான்னு கேட்கிறார்."

- கா. பசும்பொன்





"எலக்ஷன் வரைக்கும் தலைவர் இப்படித்தான் இருப்பாரு போலிருக்கு."

"ஏன்?"

"வீட்டுல பிச்சைக்காரன் கதவைத் தட்டினா கூட்டணிக்காக கட்சிக்காரங்க யாரோ கதவைத் தட்றாங்கன்னு சொல்லி ஓடிப் போய் கதவைத் திறக்கறாரு!"

- வி. சாரதி டேச்சு



tamilmagazimes.blogspot.com

# மச்சானுக்கு அச்சம்!

ஆர்யாவை 'ஹாய் ஹாண்ட்ஸம்'னு பொண்ணுங்க சுத்தறது ஒருபுறம்... ஆனால் மாதவன், அஜித்துல ஆரம்பிச்சு ஜெய், விஜய் சேதுபதின்னு மொத்த ஹீரோக்களும் "இவன் ரொம்ப நல்லவன்"னு நம்மகிட்டயே சுத்துறதுதான் லேட்டஸ்ட்...

'எதையும் மைண்ட்ல ஏத்திக்கமாட்டார். ஆனால் எல்லோரையும் இதயத்துல வச்சுக்குறதுதான் ஆர்யா' என கோலிவுட்டே சான்றிதழ் வழங்கும் ஒரே ஹீரோ ஆர்யாதான்... அதனால தான் 'மல்டி ஹீரோ சப்ஜெக்டா.. ஆர்யா மஸ்ட்!'னு ஒரு ஃபார்முலாவே உருவாக்கிட்டாங்க.. அந்த ஃபார்முலாவுல லேட்டஸ்ட்டா 'புறம்போக்கு'ல ஷாம் ப்ளஸ் விஜய் சேதுபதியோட கலக்கப்போகும் ஆர்யாவை 'ஒரு கலாட்டா சந்திப்புக்குத் தயாரா' என்றதும் அவரே ஷாமையும் சேதுவையும் வரவழைச்சி ரகளைக்குத் தயார் பண்ணினார்...

'சரி; கச்சேரியை ஆரம்பிங்க'ன்னதும் வழக்கம்போல தம்பி கம்பி நீட்ட ஆரம்பிச்சுட்டார்...

சார் ஷை



tamilmagazinesblogspot.com


tamilmagazines.blogspot.com

டைட்பாமாம். அதனால ஸ்டார்ட் பண்ணியது ஷாம்தான்...

"இப்ப யோசிச்சுப் பார்த்தா நேத்து நடந்தது மாதிரி இருக்கு பிரதர். நான் 'உள்ளம் கேட்குமே'வுல நடிக்கும்போதுதான் ஆர்யா 'டெபியூ' ஹீரோவா அறிமுகமானார். அன்னையில இருந்தே டச்லதான் இருக்கோம். வாரத்துக்கு டூ த்ரீ டைம்ஸாவது கால் பண்ணி பேசிக்குவோம். ஆர்யா பெரிய ஹீரோவா மட்டும் வளரல, அவருக்கு இன்னைக்கு எவ்வளவு பெண் ரசிகைகள் இருக்காங்க தெரியுமா? மச்சான் மச்சக்காரன்" என்றவர், ஆர்யாவைப் பார்த்து, "மச்சான் கொஞ்சம் என் மேட்டரையும் சொல்லிடறேனே..." என்று அடிவயிற்றில் ஆர்யாவுக்கு ஒரு குத்துவிட்டபடி விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தார்...

"ஆக்சுவலி டைரக்டர் ஜனநாதன் என் லைஃப்லயே மறக்க முடியாத டைரக்டர். நான் '12பி' நடிச்சுக்கிட்டிருக்கேன். அந்தப் படம் ஹிட்டாகுமா? ப்ளாப் ஆகுமானே தெரியல?! அந்த சமயத்துலயே ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வந்து 'இயற்கை' கதையை எங்கிட்ட சொன்னார். அதற்கு நான், 'சார் கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. இந்தப் படம் போகுறத வச்சி டிஸைட் பண்ணுவோம்'னு சொன்னேன். அதுக்கு அவர், 'இந்தப் படம் சரியா போகுதா? போகலையா?'னு எனக்குக் கவலையில்ல. ஆனா என் கதைக்கு நீங்கதான் ஹீரோ' என தெம்பா நின்னார். யார் செய்வாங்க சொல்லுங்க. ஸ்டில் ஹி ஈஸ் வித் மீ! இப்பவும் அவர் ப்ராஜெக்ட்ல திரும்ப என் ஸ்வீட் ஹீரோ ஆர்யாகூட ஒண்ணு சேருறேன்" என்று தன் டூ இன் ஒன் நன்றியைத் தெரிவித்தார்.

"இப்ப இந்த ஷூட்லயே



ஆமா யாரு உங்கள ஹீரோன்னு சொன்னா?

# சொன்னா நம்புங்கடா...!

பாருங்க எங்களுக்குள்ள ஒரு ஈகோவும் இல்ல. ஃப்ரெண்ட்லியா எப்படி இருந்தோமோ அதே போல படத்துலயும் இந்த கெமிஸ்ட்ரி ஒர்க் அவுட் ஆகும்.

மச்சி, ஷாம் சொன்ன மாதிரி நானும் அவனும் ஒண்ணாதான் இண்டஸ்ட்ரிக்குள்ள வந்தோம். மாடலிங்ல இருந்து நான் சினிமாவுக்கு போனப்ப சத்தியமா எனக்கு ஒண்ணுமே தெரியாது. அப்ப ஷாம்தான் கெயிட் பண்ணார். 'உள்ளம் கேட்குமே'படத்த ரெண்டு மூணு வருஷம் தொடர்ந்து ஷூட் பண்ணாங்க. சினிமாவைவிட்டே ஓடிடலாமான்னு ஷாம்கிட்ட சொன்னப்ப அவன் தடுத்தான். அன்னைக்கு அவன் கொடுத்த உற்சாகம்தான் இன்னைக்கு என்னை உயர்த்திருக்கு" என்று ஜாலி ஆர்யா சீரியஸ் சப்ஜெக்ட்டில் செண்டிமெண்ட் டச் கொடுக்க, என்ட்ரியானார் விஜய்சேதுபதி.

"தலைவா எங்கிட்டயும் முன்கதை இருக்கு தெரியும்ல... அதை பின்னாடி வச்சுக்கலாம்.. அதுக்கு முன்னாடி நான் என்ன சொல்றேன்னா... ரெண்டு ஹீரோ சப்ஜெக்ட், மூன்று ஹீரோ சப்ஜெக்ட்னு இண்டஸ்ட்ரி இப்ப வேற டிராக்ல ட்ராவல் ஆக ஆரம்பிச்சிருக்கு. இட் ஈஸ் ய ஹெல்த்தி டிரெண்ட் நௌவ்.

எவ்ரிதிங் இன் தி ஹாண்ட்ஸ் ஆஃப் தி டைரக்டர்... ஜானா அதுல பெஸ்ட்." என்று விஜய் கொஞ்சம் பொறுப்பாய் ஆரம்பிக்க, "மச்சி புறம்போக்கு மாதிரி கலக்குறத விட்டுட்டு, ரொம்ப நல்லவனாட்டம்... ஆமா, மூணுபேருல இப்போ யாரு உங்கள ஹீரோன்னு சொன்னா..." என்று ஆர்யாவும் ஷாமும் அட் ய டைம்ல அவர்



tamilmagazinesblogspot.com
Moviezzworld.com

கையை மடக்கி காலை வார, மூன்று பேருமே ஜிம்பாய்ஸ் ரேஞ்சுக்கு பாக்ஸிங் பண்ண ஆரம்பிச்சுட்டாங்க. அந்தக் கலாட்டா ஓயும் வரை காத்திருந்து, வளரும் ஹீரோ விஜய் சேதுபதியிடம், "நீங்க கதைகேட்க... சம்பளம் பேச பெரிய டீமையே புதுசா வேலைக்கு அமர்த்தியிருக்கீங்களாமே?" என்று ஒரு பிட்டைப் போட்டோம்...

"அப்படிப்போடுங்க அருவாளை!" என்று ஆர்யாவும் நம்ம சப்போர்ட்டுக்கு வந்தார்... "சொல்லுங்க சார்... கேட்குறாங்கள்ல... சும்மா நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்ங்கற மாதிரி திருதிருன்னு முழிச்சா எப்பூடி?" என்று ஷாமும் கலாய்க்க அவருக்கு கண்ணில் தண்ணி வராத குறைதான்... "வேண்டாம்... விட்ருங்க..." என்று வடிவேலு ரேஞ்சுக்கு வந்தவர்,

"என் ரசனைக்கு ஏத்த மாதிரி நான்தான் கதை செலக்ட் பண்றேன். என் ரசனையை இன்னொருத்தரால எப்படி புரிஞ்சுக்க முடியும். அந்த நியூஸ் எப்படி கிளம்புச்சுனே தெரியல பிரதர்.. கதை கேட்கறதையும் சம்பளம் பேசறதையும் நானேதான் பார்க்குறேன். எனக்கு வேற குழுவெல்லாம் கிடையாதுங்க நம்புங்க" என தலையில் அடிக்காத குறையாக விஜய்சேதுபதி நம்மிடம் சொல்ல... "ஹேய்... நம்பிருவாங்களா... நம்பிருவாங்களா... மச்சான் அவங்கள்லாம் இந்த ஃபீல்டுல ரொம்பநாளா இருக்காங்கடா..." என்று ஆர்யாவும், ஷாமும் அவரை பல்ப்பு வாங்க வைக்க... பாவம் சேது, சாதுவாகிட்டார்... அதுக்குமேல இருந்தா நமக்கும் ஏதாவது மொக்கை போட்டுறக் கூடாதேன்னு நாமும் அந்தப் 'புறம்போக்குக் கும்பலிடம் இருந்து புட்டுக்கிட்டோம்!



**- கடற்கரய்**
**படங்கள்: சித்ராமணி**



Moviezzworld.com
tamilmagazines.blogspot.com

குமுதம் ஜோதிடம்

# ஆங்கில புத்தாண்டில் ஓர் அதிசயம்!

தலையங்கம்

---




வேதனைகளை வேரறுக்கும்

## வேதிக்குடி வேதபுரீஸ்வரர்!

ஏ.எம்.ஆர். சிறப்புக் கட்டுரை

---

"அன்று அவர் கூறியவை அனைத்தும் இன்றைய நமக்காகக் கூறியவைதான்!"

ஸ்வாமி விவேகானந்தர் பற்றிய ஏ.எம்.ஆர். கட்டுரை

தற்போது விற்பனையில்...

tamilmagazines.blogspot.com



கி.ராஜநாராயணன்

# வேதபுரத்தார்க்கு

30

‘கல்யாணி’ படம் வெளியாகி ஒருவாரம் ஆகியிருந்தது. கு.அழகிரிசாமி போய்ப் பார்த்தான். உண்மைதான் என்று தெரிந்தது. வந்துபோனவர், சொல்லிவிட்டுப் போனது போலவே செய்யப்பட்டிருந்தது; படத்தின் பெயர் மட்டும் ‘கல்யாணி’ என்று மாற்றப்பட்டிருந்தது.

சொன்னபடியே செய்துவிட்டான் ஆசாமி. என்ன செய்கிறது என்று தெரியவில்லை.

“சும்மா விடப்படாது சார்; இவனையெல்லாம்



# நல்ல குறி சொல்லு!



tamilmagazinesblogspot.com

நடுத்தெருவில் கட்டி வச்சித் தோலை உறிக்கணும்."

"விட்டுறாதீங்க சார்; விட்டுறாதீங்க" என்றார்கள் உசுப்பேத்திகள். பெற்றவள் ஒருத்தி, பிள்ளையைக் கொண்டுபோய்க் காட்டி பணம் வசூலிக்கிறவள் ஒருத்தி என்பது போலல்லவா இருக்கிறது நடப்பு.

சென்னையிலேயே சட்டம் தெரிந்த வல்லுநர், நண்பரிடம் போனான் அழகிரிசாமி. இவன்மேல் மதிப்பும் மரியாதையும் கொண்டவர் அவர்.

ஆதியோடு அந்தமாக நடந்த எல்லா விசயங்களையும் விலாவாரியாகச் சொன்னான்.

"படம் வெளிவந்து ஒருவாரம் ஆகப் போகிறது, தமிழ்நாடு பூராவிலும் கிட்டத்தட்ட நூறு தியேட்டர்களில் நடந்துகொண்டிருக்கிறது.

முதலில் இவைகளை நிறுத்த நிறுத்தல் உத்தரவு கோர்ட் மூலம் வாங்க வேண்டும்.

ஒரு பெரிய்ய தொகையை கட்டணமாகச் செலுத்தித்தான் அதைப் பெற முடியும். அவ்வளவு பெரிய தொகை முதலில் நம்மிடம் இருக்கா?"

உதட்டைப் பிதுக்கினான் இவன். மேல் உதடு இல்லாதவன் சீங்குழல் வாசிக்க அச்சாரம் கேட்டால் கிடைக்குமா?

"சரி; பணத்தை எப்படியாவது புரட்டி கீழ்கோர்ட்டில் ஜெயித்துவிட்டோம் என்றாலும், எதிரி மேல் கோர்ட்டுக்குப் போவான்.அங்கேயும் நாமே ஜெயித்தாலும் எதிரி அதுக்கும் மேலே போவான். உங்களாலும் அப்படிப் போக முடியுமா?

போய், அப்படிக் கிடைத்தாலும் நீங்கள் செலவழித்த தொகையையும், நீங்கள் கேட்ட

**பூமணி தனது கதையை அவரே இயக்கி படம் பண்ணிக் காட்டினார்!**

தொகையையும் சேர்த்துப் பார்த்தால் எவ்வளவு வரும்? இந்தத் தொகைகளோடு மன ஆயாசமும் அலைப்பரைகளையும் இந்தக் காலங்களில் நீங்கள் படைக்க வேண்டிய பாடும் பலனையும் சேர்த்துக் கூட்டிப் பாருங்கள்.

ஒரு தூண்டிலில் ஒரு மீன் மட்டுமே விழும். புத்திசாலித்தனமாக நீங்கள் நடக்க நினைத்திருந்தால், கதை



tamilmagazines.blogspot.com

கேட்டு வந்தவனை வெளியில் தள்ளிக்கொண்டுபோய் அவனுடைய காரில் வைத்தோ அவன் தங்கியிருக்கும் இடத்திலோ வைத்துப் பேசி முடித்திருக்கவேண்டும். முகூர்த்தத்தை சபையில் வைத்துத்தான் முடிக்கணும்; சாந்தி முகூர்த்தத்தையும் அப்படி வைத்து முடிக்க நினைக்கலாமா?" என்று சிரித்தார் வக்கீல் நண்பர்.

விசயம் பின்னப்பட்டுப்



போனதுக்கு நண்பரே போல் இருந்தவர்கள் அங்கே இருந்ததுதான் வினை என்று தெரிந்துகொண்டான் கு.அ.

என்ன செய்ய; லாபம் முகத்தை மட்டும் காட்டிவிட்டுப் போய் விட்டது.

இப்போது காலம் முந்தி மாதிரி இல்லை. மாறிக் கொண்டு வருகிறது.

எழுத்தாளர் பூமணி அவரே தனது கதையை 'கருவேலம் பூக்கள்' என்ற பெயரில் இயக்கமும் செய்து படம் பண்ணியும்காட்டியிருக்கிறார்.

அம்ஷன்குமார் எனது 'கிடை' குறுநாவலை 'ஒருத்தி' என்ற பெயரில் படத்தை இயக்கி எடுத்து வெற்றி கண்டிருக்கிறார்.

ஓராண்டு, புதுவையில் நடந்த சினிமா விழாவில் 'ஒருத்தி' படத்தைத் தேர்வு செய்து சிறந்த படத்துக்கான விருதும் வழங்கினார்கள்.

"சரஸ்வதிதேவி சிரித்தாள்" என்று மொட்டையாகச் சொன்னால் யாருக்கு என்ன விளங்கும்?

ஊர்கோலம் ஒன்று புறப்பட்டு வருகிறது. சரஸ்வதிநோம்புக்கு மறுநாள். பள்ளிக்கூடத்தில் 'போட' ஒரு பிள்ளையை இப்படி அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

மேளதாள சத்தம் கேட்டு வாசலில் வந்து நின்று பார்க்கிறார்கள் பெண்கள்.

அழைத்து வரப்படும் பிள்ளையாண்டானுக்கு அய்ந்து, ஆறு வயசு இருக்கலாம்.

மயில்கழுத்து நிறத்தில் ஒரு பட்டுத்துண்டைக் கட்டி வைத்திருக்கிறார்கள். அந்த இடுப்பு இன்னும் வேட்டிக்குப் பழகவில்லை. அது சரிந்து விழாமல்



tamilmagazines.blogspot.com

இருக்க அவனுடைய அரைஞாண் கயிறே பயன்படுகிறது. நெற்றியில் தென்கலைத்திருமண். பின்குடுமி. அவன் கழுத்தில் ஒரு ஒற்றைவடச் சங்கிலி. புறப்படும் சமயத்தில் அவனுடைய உடன்பிறந்தாள் போட்டுவிட்டது. எதிர்வெயில் முகத்தைத் தாக்காமல் இருக்க ஒரு வேலையாள் தாழம்பூக்குடை பிடித்துக் கொண்டு வருகிறான்.

இதையெல்லாம் பார்த்த சரஸ்வதிதேவி சிரிக்காமல் என்ன செய்வாள்! படிப்பு என்பதே மண்டையில் ஏறாத பள்ளிக்கூடத்துக்கே ஏய்ப்புக் காட்டிவிட்டு காடாசெடியாய் அலைந்து திரியப்போகும் அந்தச் சிறுவன் வேறு யாருமில்லை; நான்தான்.

அந்தப் பள்ளிக்கூடத்தின் உறுதியான கல் கட்டிடம் போல வேற எங்கும் நான் பார்த்ததில்லை. அதுக்கு ஈடுசொல்ல வேண்டும் என்றால் கோவில்பட்டியில் உள்ள ஜெயில், மாஜிஸ்ட்ரேட் கோர்ட் கட்டிடங்களைத்தான் சொல்ல வேண்டும். இந்தப் பள்ளிக் கட்டிடம் கட்டும்போது தாலுகாபோர்டு இருந்தது. பிறகுதான் ஜில்லாபோர்டு வருகிறது. இடைசெவல் அப்போது குருவிகுளம் தாலுகா போர்டில் இருந்ததாம். குருவிகுளம் ஜமீன்தார்தான் தாலுகா போர்டுத்



தலைவர் என்று சொல்லுவார்கள். கழுகுமலை ஊர்தான் எங்களுக்கு சப்ரிஜிஸ்தர் ஆபீஸ். கோவில்பட்டி தாலுகா தலைநகர் ஆனவுடன் எல்லாம் மாறிவிட்டது. பிறகு ஜில்லா போர்டு வந்து விடுகிறது.

நான் சின்னப்பிள்ளையில் பள்ளிக்கூடத்தில் பார்த்த முதல் வாத்தியார் பெயர் முத்துகிருஷ்ணய்யர். ஊர் மக்கள் அவரை முன்குடுமி வாத்தியார் என்று சொல்லுவார்கள். அவருடைய சொந்த ஊர் பாண்டவர்மங்கலம். அந்த ஊரிலுள்ள அய்யமார் அனைவரும் முன்குடுமி வைத்த பிராமணர்கள்தானாம். இந்த வாத்தியார் நல்ல கருப்பு. மகாபாரதக் கதையில் வரும் வாத்தியாரும் நல்ல கருப்புதான்; பெயர் துரோணாச்சாரியார். அவரைச் சொல்லிவிட்டு இவரைச் சொல்லுவது தப்புதான்.



tamilmagazines.blogspot.com

**படிப்பு இவனுக்கு மண்டையில் ஏறாது என்று பார்த்த மாத்திரத்திலேயே சொல்லிவிட்டார் என் வாத்தியார்!**

இவர் மகாகெட்டிக்காரர். எப்படி என்று கேட்கிறீர்களா? என்னைப் பார்த்த கொஞ்ச நாளிலேயே சொல்லிவிட்டார் படிப்பு இவனுக்கு மண்டையில் ஏறாது என்று. அந்தக் காலத்தில் இப்படிப் படிப்புவராத பள்ளிப் பிள்ளைகளுக்கு தரைப் பலகைகளில் கொஞ்சம் சிறிய பலகையாகப் பார்த்து உக்கார வைத்துவிடுவார்கள். வகுப்பு உயர உயர பலகை உயர்ந்து பெஞ்சு ஆக உயர்ந்து 'மாப்பிளை பெஞ்ச்' ஆகிவிடும்.

வீட்டுக்குவந்த மாப்பிள்ளை - வீட்டுக்கு மேல் வந்த மாப்பிள்ளை - என்றெல்லாம் உண்டு. மாப்பிள்ளையின் மவுசே அலாதி அல்லவா! இது ஒரு வகையான அவமானப்படுத்தல் என்றெல்லாம் தெரியாது அப்பொ.

இஷ்டம் இருந்தால் பள்ளிக்கு வருவது. வந்ததும் தெரியாது. போனதும் தெரியாது (வாத்தியாருக்குத்தான்). பார்த்து எழுதுவது. அப்படிப் பார்த்து எழுத சிறு திண்டியில் (சிறுதீனி) 'கமிஷன்' உண்டு.

அவன் தன்னுடைய சிலேட்டில், போட்ட கணக்கை எழுதி முடித்துவிட்டு, இவன் சிலேட்டிலும் - இவனுக்காக எழுதி வைப்பதும் உண்டு. இந்த சிலேட்டுகளெல்லாம் மொத்தமாக வாத்தியார் மேஜைக்குப் போகும். விடையைப் பார்த்து மார்க்கு விழும்; அடியும் விழும்.

அந்தப் பள்ளிக்கூடத்தின் கிழக்குப் பகுதி பூராவும் எங்கள் குடும்பத்துக்குச் சொந்தமான நந்தவனம் உண்டு. அந்த நந்தவனத்தில் முல்லை, பிச்சி, மல்லிகை, மரிக்கொழுந்து, சாமந்தி போன்ற வாசனை வகைப் பூக்கள், அரியவகை பச்சிலைச் செடிகள் கொடிகள் என்று உண்டு. அங்கே பணி புரிந்த எனக்கு வேண்டிய ஆட்கள் மூலம் இந்த வாத்தியார்களுக்கு பூக்கள் தந்தனுப்புவேன்.

பள்ளிக்கூடத்துக்கு உதவாத நான் இவர்களுக்கு வேறு பலவகைகளிலும் உதவியாக இருப்பேன்.

**(தொடரும்)**

**படம்: ஞானமணி**



tamilmagazines.blogspot.com


Oil Pulling
very
simple.
very
effective.

அதான்... நம்ம குழந்தைங்க
நாம என்னலாம் செய்றோமோ,
அதெல்லாம் அப்படியே செய்வாங்களே...

அதனால நாம Oil pulling பண்ண
ஆரம்பிப்போம்...
நம்மள பார்த்து நம்ம குழந்தைகளும்
Oil pulling பண்ண ஆரம்பிக்கட்டும்.

## HOW TO MAKE MONEY




முதலீடு இல்லை.
முன் பணம் இல்லை.
மாதம் ரூபாய்
30,000 சம்பாதிக்கலாம்
இதயத்துடன் இணைந்து
செயல்படுங்கள்

online@idhayam.com
98415 52866

IDHAYAM | www.idhayam.com www.facebook.com/idhayamgroup

Moviezzworld.com



# பப்ளிகுட்டி!

ரம்யா நம்பீசன் பாடிய 'ஃபைஃபை' சாங் ஹிட் ஆகிவிட்டது இல்லயா? இதனால் தன் ரகசியக் குரலுக்கு திரை வடிவம் கொடுக்கலாம் என்ற முனைப்பில் இருக்கிறார் லட்சுமிமேனன். 'பாத்ரூம்' பாடகியாக இருந்தவர் அந்தப் பாடல் வெற்றிக்குப் பின்னால் தன் விருப்பத்திற்கும் யாராவது வாய்ப்புக் கொடுங்களேன் என பார்க்கும் மியூசிக் டைரக்டர்களிடம் எல்லாம் கொக்கி போட்டுக் கொண்டிருக்கிறார். (விஷால்ட்ட சொன்னாப் போச்சு!)

ஜேசுதாஸ் மிகப் பெரிய பாடகர் என்பது உலகம் அறிந்த செய்தி. ஆனால் இன்னும் வளரும் பாடகரைப் போலவே நடந்து கொள்கிறார் ஜேசுதாஸ். எந்த ஸ்டூடியோவில் இவர் பாடல் ரெக்கார்டிங் நடந்து முடிந்தாலும் உடனே தன் மனைவியை போனில் கூப்பிட்டு 'பாடியிருக்கிற பாட்டு எப்படி இருக்குனு கேளு' என போட்டுக்காட்டி கருத்துக் கேட்கிறார். (ஹரிவராசனம்!)

Moviezzworld




இந்த வருட வலை தளத்தில் டாப் லிஸ்டில் இருப்பவர் நஸ்ரியாதான். 2013ல் வலைதளங்களில் பகிரப்பட்ட படங்களில் முதல் வரிசையில் நிற்கிறார் நஸ். இதுவரை 11,18,890 'லைக்'களை அள்ளிய ஹீரோயினாக நஸ்ரியாவின் வளர்ச்சியைக் கண்டு நடுநடுங்க ஆரம்பித்திருக்கிறார்கள் பல ஹீரோயின்கள். (தொப்புள்னால வந்த புகழ்!)

அடிக்கடி லண்டன் கிளம்பி விடுகிறார் அமலாபால். அங்கே கொட்டும் குளிரில் அரங்கத்திற்குள் டென்னிஸ் ஆடுவது என்றால் கொள்ளை இஷ்டமாம். அப்புறம் அழகான குட்டி சைக்கிளை மிதித்துக் கொண்டு குட்டிகுட்டி தெருக்களில் சைக்கிளிங் பண்ணவும் ஆரம்பித்து விடுகிறார் அமுல். (குட்டி!)

## சுனிலிடம் கேளுங்கள்

**நடிகர் அர்ஜுன் எத்தனை படங்களை இயக்கியிருக்கிறார்?**

**- டி. பச்சமுத்து, கிருஷ்ணகிரி.**

சேவகன், பிரதாப், தாயின் மணிக்கொடி, ஜெய்ஹிந்த், வேதம், ஏழுமலை, ஜெய்ஹிந்த்-2 என்று ஒன்பது படங்களை இயக்கி நடித்திருக்கிறார் அர்ஜுன்.

**தவிர்க்க முடியாத காரணத்தால், 'ஷூட்டிங் கேன்சல்' ஆனால், நடிகர்-நடிகைகளின் சம்பளத்தை, தயாரிப்பாளர்கள் வெட்டுவார்களா?**

**- அ. சுஹைல் ரஹ்மான், திருச்சி.**

"தவிர்க்க முடியாத அந்தக் காரணம் என்ன? ஷூட்டிங் கேன்சலாக காரணம் இயற்கையா? மழையா? புயலா? அல்லது



அமலாபால்

MovieLworld.com
tamilmagazinesblogspot.com

ஹீரோ-ஹீரோயின் டேட் இல்லையா? தயாரிப்பாளரிடம் பணம் இல்லாததால் ஷூட்டிங் கேன்சலா? என்றெல்லாம் முதலில் பார்க்கப்படும்.

அப்படி ஷூட்டிங் கேன்சல் என்பதை முன்கூட்டியே எல்லாருக்கும் தெரிவிக்க வேண்டும். குறிப்பாக ஜூனியர் ஆர்டிஸ்ட்டுகளுக்கு காலை 4 மணிக்கே சொல்லிவிட வேண்டும். அப்படிச் சொல்லாமல் காலை 10 மணிக்குச் சொன்னால் அவர்களுக்கு காலை டிபனும் அன்றைய ஒரு நாள் சம்பளமும் கொடுத்து விட வேண்டும்.

ஹீரோ வேறொரு படப்பிடிப்பில் அல்லது வெளிநாட்டில் இருந்து அவர் சரியான தகவல் கொடுக்கவில்லை என்றால் படம் முடிந்து கடைசி நாளில் அந்த ஒரு நாள் நஷ்டத்தை ஹீரோ சம்பளத்தில் கழித்துக் கொள்வார்கள். ஆக படப்பிடிப்புத் தளத்துக்கு வந்துவிட்டால் அன்றைய சம்பளம் கொடுத்து விடவேண்டும் இல்லையேல் யூனியனில் மறுநாள் கட்டி விட வேண்டும்" என்கிறார் புரொடக்ஷன் மானேஜர் வி.கே. தங்கராஜ்.

**ஸ்டண்ட் கலைஞர்களுக்கு சம்பளம் எவ்வளவு?**

**- எஸ். ராஜேஸ்வவரி,**
**வைத்தீஸ்வரன் கோயில்**

"திரைப்படங்களில் ஹீரோக்களிடம் வம்பு செய்து அடி வாங்கும் பாத்திரங்களில் நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்களுக்கு இரண்டு நாள் கொண்ட (16 மணி நேரம்) ஒரு கால்ஷீட்டுக்கு 4300 ரூபாய் சம்பளமாக தரப்படுகிறது" என்கிறார் ஸ்டண்ட் மாஸ்டர் ஜாக்குவார் தங்கம்.

**ரஜினி, கமல் நடித்த கறுப்பு வெள்ளை திரைப்படங்கள் எத்தனை?**

**- முத்தூஸ்,**
**தொண்டி.**

ரஜினி நடிக்க வந்து 1979 வரை கறுப்பு - வெள்ளை படங்களில் நடித்திருக்கிறார். தமிழ், தெலுங்கு, கன்னடம் எல்லாம் சேர்த்து 38 படங்கள். கமல், 45 படங்கள்!

**தீ**யாக பத்திக்கொண்டு எரியும் விஷயங்களில் மூக்கை நுழைத்து கருத்து சொன்னால்தான் த்ரிஷாவுக்கு தூக்கமே வரும்போல. இந்தியா முழுக்க ஒருபால் உறவு பற்றி சர்ச்சை கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்க... த்ரிஷாவோ, 'தனிப்பட்ட மனிதர்களின் விஷயங்களில் தலையை நுழைக்க யாருக்கும் உரிமை கிடையாது' என கமெண்ட் அடித்திருக்கிறார். இதைக் கேட்ட பல அடிப்படைவாத அமைப்புகள் அவர் வீட்டுக்கு விரைவில் படையெடுக்கத் திட்டமிட்டு வருகிறார்கள். (கருத்து சொன்னா தப்பாய்யா?)


த்ரிஷா

Moviezworld.com
tamilmagazines.blogspot.com

வெள்ளை நடிகையை முழுக்க முழுக்க தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டாராம் ஒல்லி நடிகர். நம்பர் படத்திலேயே ஜோடி சேரும் வாய்ப்பு மிஸ் ஆனது. அதிலிருந்தே நடிகையின் மீது நடிகருக்கு ஒரு கண். இப்போதுதான் காலம் கனிந்துள்ளது. தனது அடுத்த படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் நடிகையை சென்னையில் ஒரு நட்சத்திர ஹோட்டலில் நிரந்தரமாக தங்க வைத்துவிட்டார். (பஞ்சாயத்து இருக்குடியோவ்!)

இந்தியாவின் ஒரே பைக் ரேஸ் வீரங்கனை என்ற புகழ் பெற்றவர் அலிஷா அப்துல்லா. இவர் சென்னையைச் சேர்ந்தவர். 2009-ம் ஆண்டு நடந்த சூப்பர் பைக் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு 3வதாக வந்து சாதனை படைத்தார். தற்போது இவரையும் சினிமா உலகம் இழுத்துவிட்டது. 'இரும்புக்குதிரை' என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார். (டாப் கியர்ல எகிறுங்க!)



தமன்னா

Moviezworld.com
tamilmagazinesblogspot

**நே**ரம் கிடைக்கும் போது எல்லாம் 'தல'யை சந்திக்க புறப்பட்டு விடுகிறார் தனுஷ். ஷூட்டிங் ஸ்பாட், ஃபிரெண்ட்ஸ் வீடு என எங்கே அவரை சந்திக்க ஏதுவாக இருக்குமோ அங்கே 'அட்டனென்ஸ்' போட்டுவிடுகிறார். கைகளைக் கட்டிக்கொண்டு அடக்க ஒடுக்கமாக 'பவ்யம்' காட்டும் தனுஷின் தன்னடக்கத்தைக் கண்டு அசந்துபோய்விட்டாராம் தல. 'நேஷனல்' அவார்ட் வாங்கின ஒரு நடிகர் இவ்வளவு யதார்த்தமா இருக்கிறாரே என பார்ப்பவர்களிடம் எல்லாம் தனுஷ் புராணம் பாடுகிறார் தல.

(சிம்பு ஜாக்கிரதை!)



**ர**ஜினியிடம் ஒரு சூப்பர் ஆக்ஷன் கதையைச் சொல்லி ஓ.கே. வாங்கி வைத்திருந்தார் கே.வி.ஆனந்த். ரஜினியின் அடுத்த படத்தை இயக்க ஷங்கருக்குதான் வாய்ப்பு அதிகம் என்று செய்திகள் வருவதால் அந்தக் கதையை அஜித்திடம் சொல்லி ஓ.கே. வாங்கிவிட்டார். கதைக்காக அஜித் சிக்ஸ்பேக் வேறு வைக்கப் போவதாக செய்தி வருகிறது. (ஆனா வெள்ளை முடிதான்!)



சமந்தா

**ச**மந்தா பெண் உரிமை, பெண்கள் பிரச்னை என்று வந்தால் பொங்கி எழுந்து 'ஓபன் டாக்' கொடுக்கிற கேரக்டர். இவரது நடிப்பில் வெளிவந்த ஒரு தெலுங்குப் படத்தில் மகேஷ்பாபுவுடன் இவர் இருக்கும் போஸ்டர் டிசைன் இப்போது சர்ச்சையைக் கிளப்பி இருக்கிறது. மகேஷ் காலடியில் ஊர்ந்து போவதைப் போல கேவலமாக சித்திரிப்புக்கு ஆளாகி இருக்கும் சமந்தா, வெடி மாதிரி வெடிக்க ஆரம்பித்திருக்கிறார். இந்த சர்ச்சையால் மகேஷ் ரசிகர்கள் இவரை ஆந்திராவை விட்டு அப்புறப் படுத்தாமல் ஓயமாட்டோம் என கர்ஜித்து வருகிறார்கள். இந்தப் பிரச்னையின் மூலம் மீண்டும் சமந்தாவுக்கு ஆதரவாக உள்ளே என்ட்ரி அடித்திருக்கிறார் சித்தார்த். (பப்ளிகுட்டி!) ●



tamilmagazines.blogspot.com



# சோவின் ஒசாமஅசா

எழுத்தும் தொகுப்பும் : மணா

**பி**ரபலமான வக்கீலான பராசரனை நான் நெருக்கமாக அறிய முடிந்தது, அவருடைய கட்சிக்காரனாக நான் ஆன பிறகுதான்.

மொரார்ஜி மந்திரிசபை கலைக்கப்பட்ட பிறகு ஜெகஜீவன்ராமுக்கு வாய்ப்புக் கொடுக்காமலேயே ஜனாதிபதியான சஞ்சீவரெட்டி, சரண்சிங்கை பிரதமராக நியமித்துவிட்டார். பிரதமராகப் பதவியேற்றுக் கொண்ட சரண்சிங்கினால் பாராளுமன்றத்தை எதிர் நோக்க முடியவில்லை. ஏனென்றால் அவருக்குப் போதிய எம்.பிக்களின் ஆதரவில்லை. அவருக்கு அந்த அளவுக்கு ஆதரவு இல்லை என்பது தெரிந்தே ஜனதாக்கட்சி வந்துவிடக்கூடாது என்பதற்காக சஞ் சீவரெட்டி செய்த சூழ்ச்சியின் பலனாகத்தான் சரண்சிங் பிரதமராகப் பதவியேற்றார்.

அவரை பிரதமராகப் பதவியேற்க அழைத்தது



Moviezzworld.com
kumudam
tamilmagazines.blogspot.com




# சோ கிட்ட இருக்கிற ட்ரிக்!

ஜனாதிபதியின் அத்துமீறல்; அவர் அரசியல் சட்டத்திற்கு விரோதமாகச் செயல்பட்டார்; ஆகையால் எந்த அதிகாரத்தின் கீழ் சரண்சிங் பிரதம மந்திரியாக இருக்கிறார்?- என்று கேட்டு ஒரு ரிட் பெட்டிஷனை சென்னை ஹைகோர்ட்டில் நான் தொடுத்தேன்.

அந்த பெட்டிஷனை சென்னை ஹைகோர்ட்டில் நான் போட்ட போது சில நீதிபதிகளே கூட என்னை அழைத்து, "இதை ஏன் இங்கு போடுகிறாய்? பிரதம மந்திரி டெல்லியில்தானே ஆட்சி புரிகிறார்? நீ எப்படி மெட்ராஸில் போடுகிறாய்? இங்கே அதற்கு என்ன அதிகாரம்?" என்று கேட்டார்கள். நாட்டின் பிரதமர் சம்பந்தப்பட்ட வழக்கை விசாரிக்க யாரும் இங்கு தயாராக இல்லை.

நான் தெளிவாக அவர்களிடம், "நான் வேறு ஒரு மாநில முதல்வரை எதிர்த்து இங்கு வழக்குத் தொடுத்தால் நீங்கள் கேட்டது சரியாக இருக்கலாம். பிரதம மந்திரியின் ஆட்சி நாடு முழுக்க நடக்கிறது. அதனால் பிரதம மந்திரியின் ஆளுகைக்கு உட்பட்ட எந்த மாநிலத்தில் வேண்டுமானாலும் இந்த வழக்கைப் போடலாம். அதனால் நான் இந்த வழக்கை வாபஸ் பெறப் போவதில்லை" என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டேன்.

பராசரன்தான் எனக்காக ஆஜரானார். அப்போது தினமும் இரவு அவருடைய வீட்டில் அந்த வழக்கிற்காகப் பல ஆதாரங்களை முந்தைய வழக்குகள், பிரிட்டிஷ் மரபுகள், உலக நாடுகளின் சட்டங்கள் எல்லாவற்றையும் தேடி எடுக்க நள்ளிரவு வரை ஆகிவிடும். அப்போதுதான் அவருடன் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்தது.

அப்படி அவர் பல ஆதாரங்களை முன்வைத்து அந்த வழக்கில் வாதாட, சென்னை ஹைகோர்ட்டின் ஃபுல் பெஞ்ச் அமர்ந்து விசாரித்தார்கள். இருந்தும் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வழக்கில் பராசரன் முன்வைத்த ஆழமான விவாதங்கள் இப்போதும் பல வழக்குகளில் 'முன் மாதிரியாகத் திகழ்கின்றன. பராசரன் மிகப் பிரபலமான வக்கீலாக இருந்தும், மிகவும் எளிமையாகப் பழகுவார். அவருடைய பண்பும், தன்னடக்க

**மற்றவர்களைக் காயப்படுத்தாமலும் இருக்க வேண்டும்; உண்மையாகவும் இருக்க வேண்டும். இதற்கு சரியான உதாரணம் பராசரன்!**

சரண்சிங்



மும் யாரும் நம்ப முடியாத விதத்தில் இருக்கும். கொஞ்சம் கூடத் தலைக்கனம் இல்லாமல் அனைத்துத் தரப்பினருடனும் பழகுவார். வருமான வரியைக் கட்டுவதில் மிகவும் நேர்மையாக இருந்தார் என்பதற்காக அவருக்கு வருமான வரி இலாகாவில் இருந்து விருது எல்லாம் கிடைத்திருக்கிறது.

எந்த அளவுக்கு அவர் பெருந்தன்மையானவர் என்பதைத் தெரிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம். அவருடைய வீட்டுக் கல்யாணம் ஒன்றிற்கு நான் போயிருந்தேன். அங்கு பல நீதிபதிகள், வக்கீல்கள் எல்லாம் வந்திருந்தார்கள். அவர்களிடம் "நான் சோ-வுக்காக இரவெல்லாம் உட்கார்ந்து ரெஃபரன்ஸ் எல்லாம் பார்த்தப்போ- அரசியல் சட்டத்தை அணுகிற விதங்கள் பற்றி சில புதிய வழிகளை நான் தெரிஞ்சுக்கிட்டேன்" என்று வெளிப்படையாகச் சொன்னார். சுற்றியிருந்தவர்கள் மத்தியில் எனக்கு ஒரு முக்கியத்துவம் கொடுப்பதற்காக 'சும்மா' சொன்ன வார்த்தை அது. சட்ட நுணுக்கங் களில் அவர் என்னிடம் தெரிந்து கொள்வதற்கு எதுவுமில்லை.

மற்றவர்களை எந்த விதத்திலும் புண்படுத்தாமல் பேசுகிற இயல்பு அவரிடம் இருந்தது. சமஸ்கிருதத் தில் 'சத்யம் ப்ரூயாத், ப்ரியம் ப்ரூ யாத், மத்ப்ரூயாத் ஸத்யம் அப்ரியம், ப்ரியம்ச ந அந்ருதம் ப்ரூயாத்' - என்றொரு ஸ்லோகம் உண்டு.

அதன் அர்த்தம் இதுதான்: "உண்மையே பேசு, ஹிதமானதைப் பேசு, ஹிதமற்ற உண்மையைப் பேச வேண்டாம், ஹிதமானதாக இருந்தாலும் பொய்யைப் பேச வேண்டாம்."

மற்றவர்களைக் காயப்படுத்தா மலும் இருக்க வேண்டும்; உண்மை யாகவும் இருக்க வேண்டும்- என்கிற சனாதன தர்மத்துக்கு உதாரணமாக ஒருவரைச் சொல்ல வேண்டும் என்றால் பராசரனை நான் சொல்வேன்.

இன்றைக்கும் பல வழக்குகளில்

அவருடைய வாதங்களின் நுணுக்கங்கள் அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காவிரிப் பிரச்னையில் தமிழ்நாட்டுக்காக பலமுறை சுப்ரீம் கோர்ட்டில் ஆஜரானார். அவர் தொடுத்த வாதங்கள் பிறகு தமிழ்நாட்டுக்கு வலுவாக அமைந்தன. அந்த அளவுக்கு சட்ட நுணுக்கம் தெரிந்தவர்.

சட்டத்தின் மீது பற்று வைத்திருக்கும் அளவுக்கு ஆழ்ந்த தெய்வபக்தியும் உள்ளவர். அது நம்பிக்கையாக மட்டுமில்லாமல், இந்துமத வேதங்கள், உபநிஷத்துகள், புராணங்கள், இதிகாசங்கள் - இவற்றைப் பற்றி விரிவான ஞானமுள்ளவர். அதன் காரணமாக இன்றைக்கு இருக்கிற சில சட்டங்களைப் பற்றி பேசுகிறபோது, அது முற்காலத்தில் எப்படியெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காண்பிப்பார்.

அவருடைய விரிந்த அறிவைப் பயன்படுத்துகிற விதத்தில் அவரிடம் வற்புறுத்தி ஒரு தொடர் எழுத வேண்டும் என்பதற்காக 'ரிக்கார்ட்' பண்ணி வைத்திருக்கிறேன். புராண, இதிகாசங்களுக்கும், இன்றைக்குள்ள சட்டங்களுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி விரிவாக அதில் சொல்லியிருக்கிறார். சுமார் நான்கைந்து வருடங்களாகவே அது என்னிடம் இருக்கிறது. அதைத் தொடராகக் கொண்டு வருவதற்கான வேளை இன்னும் வரவில்லை. தொகுப்பாசிரியர் வேலை கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது.

நானாக 'உடான்ஸ்' விட்டு விடுவது என்றால் உடனே எழுதி விடலாம். ஆனால் மற்றவர்கள் சொல்கிற உண்மையை எழுதுவதென்றால் சற்று ஜாக்கிரதையாகத்தான் பண்ணவேண்டும்.

பராசரனுக்கு 'பத்ம விபூஷண்' விருதை மத்தியஅரசு கொடுத்து கௌரவித்திருக்கிறது. நேர்மையாளர், நாணயஸ்தர், நல்லவர், பெருந்தன்மையானவர் என்று அவரை எப்படி வேண்டுமானாலும் வர்ணிக்கலாம்.

**{ பத்திரிகையாளராக மட்டுமல்ல, அமைச்சராக இருந்தபோதும் மிகச் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்! }**

## அருண்ஷோரி

இவர் அளவுக்கு உழைப்பும், ஆராய்ச்சியும், அந்த ஆராய்ச்சியின் பலனைச் சொல்வதில் தெளிவும்



Moviezworld.com

கொண்ட பத்திரிகையாளர்களைப் பார்ப்பது மிகவும் கடினம்.

ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டால் மிகவும் ஆழமாக அதைப் புரிந்துகொண்ட பிறகுதான் அதுபற்றிய கட்டுரையை அவர் எழுதுவார். மஹாராஷ்டிர முதல்வர் அந்துலேவுக்கு எதிராக அவர் எழுதிய கட்டுரைகள் பெரும் பரபரப்பை உண்டாக்கின. அவர் எழுதிய கட்டுரைகள் ஒவ்வொன்றும் உண்மையாகவே ஆராய்ந்து - ஆராய்ச்சி என்பதற்குச் சரியான அர்த்தம் தரும்படி அமைந்தவை.

நான் எதையும் மேலெழுந்தவாரியாகத் தான் பார்ப்பேன். அப்படித்தான் எழுதுவேன். என்னைப் பற்றி அருண்ஷோரி சொல்வார், "சோ சொல்றது எல்லாமே ரைட்டாவே போயிடறது. இரண்டு வருஷத்திற்கு முன்னாடியே 'இது இப்படித்தான் நடக்கும்'ன்னு முடிச்சிடறார். கவலையே படறதில்லை. கடைசியில் அதன்படியே நடந்துடறது. அதுக்கான காரணத்தை நான் கண்டுபிடிச்சுட்டேன். - சோ கிட்டே இருக்கிற டிரிக் தான். எந்த விஷயத்திலும் அது கேவலமாத்தான் முடியும்னு எழுதுறார். நம்ம நாட்டோட நிலைமை அப்படித்தான் ஆகி இவர் சொல்றது நடந்துடறது."



அருண்ஷோரி

அருண்ஷோரி பத்திரிகையாளராக மட்டுமல்ல, அமைச்சராக இருந்தபோதும் மிகச் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார். அதில் ஒரு ஊழல் குற்றச்சாட்டைக் கொண்டுவர வேண்டும் என்று காங்கிரஸ் முயற்சித்தது. 2ஜி

வழக்கு தொடர்பாக அவர் மீது குற்றச்சாட்டு வந்தபோது, அருண்ஷோரி என்னைத் தொடர்பு கொண்டு தகவல்அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுப்போட்டு சில விவரங்களைக் கேட்கச் சொன்னார். நானும் கேட்டேன். அவர் சொன்ன விவரங்களை வாங்கிக்கொடுத்தேன். அந்த வழக்கில் அருண்ஷோரிக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பது சி.பி.ஐ.மூலம் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. இந்த மாதிரி ஒரு நெருக்கம் அவருக்கும், எனக்கும் உண்டு.

தைரியசாலி அவர். எழுதுகிற விஷயத்தில் யாருக்கும் அவர் பயப்பட்டதில்லை. அவருடைய புத்தகங்கள் ஒவ்வொன்றும் மிக விரிவாக ஆராய்ந்து எழுதப்பட்டவை. 'கான்ட்ரவர்ஸி'யைக் கிளப்பும் புத்தகங்களாக அவை இருந்தாலும், அதில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களை மறுத்து யாரும் சொல்லிவிட முடியாது. பொதுவாக ஆராய்ச்சி நூல்கள் என்றால் சாதாரணமானவர்கள் படிக்க முடியாத அளவுக்குக் கடினமான நடையில் இருக்கும். ஆனால் இவரோ எளிமையாகவும், அடுத்து என்ன என்று ஆர்வத்தைத் தூண்டுகிற விதத்திலும் நூலை எழுதியிருப்பார்.

ஒருமுறை நான், ஆடிட்டர் குருமூர்த்தி, அருண்ஷோரி இன்னும் சிலரும் காஞ்சிக்கு மஹா ஸ்வாமிகளைப் பார்க்கப் போயிருந்தோம். ஸ்வாமிகள் நாங்கள் போன போது ஒரு கோயிலில் உட்கார்ந்திருந்தார்.



அருண்ஷோரியின் மகனுக்கு உடலில் ஒரு பிரச்னை உண்டு. அது அவருடைய மனதை வருத்தப்

- இரட்டைப் பெருமாள் ஒரு சேர அருளும் கோயில் எது?
- பறவைகள் வணங்கிய பரமசிவனின் பெயர் என்ன?
- எந்தக் கோயிலில் பெண்களுக்கு முதல் மரியாதை தரப்படுகிறது?
- மலைமேல் முருகனும் அடிவாரத்தில் அம்பிகையும் எங்கே இருக்கிறார்கள்?
- தேவர்கள் சார்பில் நாரதர் பூஜை செய்வது எங்கே?
- சிவ – பார்வதியின் ஊஞ்சலை ஆட்டிவிடுபவர் யார்?
- கண்மாயில் கிடைத்த மாரியம்மன் எங்கே இருக்கிறாள்?
- வேலவனை வேதாளங்கள் வழிபட்டது எந்தத் தலத்தில்?

**இன்னும் ஏராளமான கேள்விகளுக்கு விடை சொல்லும் பக்திச் செய்திகள், கோயில் தரிசனங்கள்.....**

**பொங்கல் பண்டிகையை பூரணமாகக் கொண்டாட...**
**பரமபத நாதனை வைகுண்ட ஏகாதசியில் தரிசிக்க...**
**தைப்பூச நாளில் வேலவனை வேண்டிட**



**வழிகாட்டும் கட்டுரைகள்...**

# 4in1 சிறப்பிதழ்!

மாதம் இருமுறை
குமுதம்
# பக்தி
ஜனவரி 1-15, 2014
ஸ்பெஷல்

**வாங்கிட்டீங்களா?**

Moviezzworld.com

பட வைத்திருந்தது.

மஹா ஸ்வாமிகளை நாங்கள் பார்த்துவிட்டுத் திரும்பியதும் என்னிடம் அருண்ஷோரி கேட்டார்.

"பையனோட பிரச்னை பற்றி ஸ்வாமிகள் கிட்டே கேட்கலாமா?"

"தாராளமாகக் கேட்கலாம்."

நாங்கள் இருவரும் பேசிக் கொண்டு போனதை அதற்குள் கவனித்துவிட்ட ஸ்வாமிகள் எங்களை மறுபடியும் அழைத்தார். அருண்ஷோரியிடம் மெதுவாக விசாரித்தார். அவரும் ஸ்வாமிகளிடம் மகனுடைய பிரச்னையைப் பற்றிச் சொன்னார்.

கேட்டுவிட்டு அருண்ஷோரியை தனக்குப் பக்கத்தில் உட்காரச் சொன்னார் ஸ்வாமிகள். பிரசாதம் கொடுத்தார்.

"இந்தக் கோயிலில் உட்கார்ந்து தியானம் பண்ணிக்கலாமா?" - கேட்டார் அருண்ஷோரி.

"இங்கே தியானம் பண்ண என்னுடைய அனுமதி உங்களுக்குத் தேவையில்லை. நீங்க என்னுடைய பக்கத்தில் உட்கார்ந்து தியானம் பண்ணுங்க. நானும் உங்களோடு தியானம் பண்றேன்" என்று ஸ்வாமிகள் சொல்லிவிட்டு அருண்ஷோரியுடன் தியானம் பண்ணினார்.

நாங்கள் வெளியே நின்று கொண்டிருந்தோம்.

"இந்த மாதிரியான



**எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து தியானம் செய்யுங்கள்!**

மனம் நிம்மதியா இருக்கிற அனுபவம் இதுவரை எனக்குக் கிடைச்சதில்லை." என்று நெகிழ்வுடன் என்னிடம் சொன்னார் அருண்ஷோரி.

மகா பெரியவருடன் சேர்ந்து தியானம் பண்ணுகிற மகத்தான அனுபவம் எல்லோருக்கும் லேசில் வாய்க்காது.

அருண்ஷோரிக்கு வாய்த்தது.

ஏனென்றால் அவர் அவ்வளவு நல்ல மனிதர்!

(தொடரும்)

படங்கள்: ஆர்.சண்முகம்



# விலங்கு



"சார்... உங்க நண்பர் விஜயன் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். கொலை நடந்த அன்று நீங்க அவர் வீட்டுக்குப் போயிருக்கீங்க. உண்மைதானே?" என்றார் இன்ஸ்பெக்டர் குமரன்.

''சார், நான் அவரைப் பார்க்கப் போனது செவ்வாய்க்கிழமை. அன்று அவரும் வீட்டில் இல்லை. வராண்டாவில் கிடந்த நாற்காலியில் கொஞ்சநேரம் குமுதம் படிச்சிட்டு வந்துட்டேன் சார். மறுநாள்தான் அவர் கொல்லப்பட்டிருக்கிறார். அன்று நான் ஊர்ல இல்ல..." என்றான் சதீஷ்.

"குமுதம் அங்கேயே கிடந்ததா?"

"இல்ல சார்... வர்ற வழியில் 'ஹன்சிகா சிம்பு காதலா?'ன்னு குமுதம் போஸ்டர் பார்த்தேன். அப்படியே வாங்கிட்டு வந்தேன் சார்."

"அப்ப கொலை நடந்த நேரத்துல அங்க இல்லங்கறீங்க...?"

"ஆமா சார்."

''நான் சொல்றேன், நீங்க இருந்திருக்கீங்க. ஏன்னா நம்ம ஊர்ல புதன்கிழமைதான் குமுதம் விற்பனைக்கு வருது. நீங்க புதுக் குமுதத்தை வாங்கி இருக்கீங்க. அப்ப செவ்வாய்க்கிழமைதான் வந்தேன்கறது திட்டமிட்ட பொய்!'' இன்ஸ்பெக்டர் குரலை உயர்த்தினார்.

அடுத்த நிமிடம் சதீஷின் கைகளில் விலங்கு ஏறியது!

■ வசீகரன்



தலைப் பொங்கல் கொண்டாடத் தயாராகிக் கொண்டிருக்கிறார், தமிழ்நாட்டு மருமகளாகி விட்ட 'சரவணன் – மீனாட்சி' சீசன்-2வின் நாயகி மஹாலட்சுமி. 'பிரிவோம் சந்திப்போம்' தொடரில் ஜோடியாக நடித்த தினேஷைச் சந்தித்த பொழுதில் இருவருக்குமிடையே பூத்த காதல், இவர்களைத் தம்பதிகளாக்கி இருக்கிறது. கேரளாவின் வயநாடு மலைப் பகுதியில் ஹனிமூன் முடித்துத் திரும்பி இருந்தவர்களிடம் பேசினோம்.

"நான் பிறந்தது, வளர்ந்ததெல்லாம் கர்நாடகா. ஒரிஜினல் பேரு ரச்சிதா கவுடா. வீட்டுக்கு ஒரே பொண்ணு.

Moviezworld
tamilmagazines.blogspot.com



# நாலு நாள்தான் ஹனிமூன்

## மஹாலட்சுமி கிளு... கிளு...



Moviez4world.com

பெங்களூருல எந்த சினிமா, மீடியா பேக்ரவுண்டும் இல்லாத குடும்பம் எங்களோடது. அப்பாவுக்கு மைசூர் சாண்டல் சோப்பு கம்பெனியில வேலை. படிச்சிட்டிருந்தப்பவே அங்க ஒரு லோக்கல் சேனல்ல ஆங்கரா சேர்ந்தேன். கொஞ்ச நாள்ல அதே சேனல்ல சீரியலுக்குக் கேட்டாங்க. முதல் வாய்ப்பே டைட்டில் ரோல். அது நல்லாப் போக, தொடர்ந்து பத்து சீரியலுக்கு மேல அங்க பண்ணிட்டேன். அந்த ரீச் தமிழ்நாட்டுப் பக்கம் கூட்டி வந்திடுச்சு." மூச்சு விடாமல் ஒப்பித்தவரிடம், 'ஃபேமிலி மேட்டர் ஓ.கே, லவ் மேட்டரை எடுத்து விடுங்க' என்றோம்.

"அது செம இண்ட்ரஸ்டிங். முதல் சீரியல்லயே எனக்கு ஜோடியா வந்தார் தினேஷ். ஆனா ஷூட்டிங் தாண்டிய மத்த இடங்கள்ல பேச மாட்டார். நான் 'லொடலொட' டைப்ங்கிறதால, 'ஃப்ரெண்ட்லியாவாச்சும் பேசலாமே, ஏன் இப்படி இருக்கார்'னு நினைப்பேன். ஆனா உள்ளுக்குள்ளயே என்னை லவ் பண்ணியிருக்கார். சீரியலோட கிளைமாக்ஸ் நாட்கள்லதான் எங்கிட்ட வந்து காதலைச் சொன்னார். முதல்ல எனக்கு சர்ப்ரைஸா இருந்திச்சு. ஆனா எனக்கும் ஏற்கெனவே அவரைப் பிடிச்சிருந்ததால, சந்தோஷம் தாங்க முடியலை. அதேநேரம், கூட்டுக் குடும்பமான எங்க வீட்டுல எல்லாரும் காதலை ஏத்துப்பாங்களான்னு தயக்கமாகவும் இருந்தது. ரெண்டு பேரும் அவங்கவங்க வீட்டுல நிதானமா எடுத்துச் சொல்லிப் புரிய வச்ச பிறகு, ஒருவழியா அனுமதி கிடைச்சது.



கல்யாணம் கைகூடின நேரம் 'சரவணன் மீனாட்சி'யில நான் பிஸியாக, அவர் லீட் ரோல் பண்ற 'புதுக்கவிதை'யும் தொடங்கிடுச்சு. இப்ப சினிமாவுலயும் கமிட் ஆகியிருக்கார். அதனால, ஷூட்டிங் ஷூட்டிங்னு ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்க முடியாம ஓடிட்டிருக்கோம். ஹனிமூனுக்கு மட்டும் எப்படியோ நாலு நாள் கிடைச்சது. ஜாலியா என்ஜாய் பண்ணிட்டு வந்தாச்சு. இப்ப தலைப்பொங்கலுக்கு ஸ்ரீவில்லிபுத்தூருக்கு போகப் போறோம்.



காளைகள் பாய்கிற ஜல்லிக்கட்டை நேர்ல பார்க்கணும்னு சொல்லியிருக்கேன். 'கூட்டிட்டுப் போறேன்'னு சொல்லியிருக்கார்."

**'சரவணன் மீனாட்சி'யில இர்ஃபானுடனான காதல் காட்சிகள்ல சும்மா துறுதுறுன்னு வர்றீங்களே, எப்படி?**

"சீன் நல்லா வரணும்னா, இயக்குனர் சொல்றபடி நடிக்கறதுதானே ஒரு நடிகையோட வேலை. அதுக்குத்தானே வந்திருக்கோம். ஆமா, 'எனக்கு கல்யாணம் ஆயிடுச்சு'ன்னு ஹைலைட் பண்ணிடுறீங்க இல்லையா?"

**கல்யாணத்துக்கு முன்னும் பின்னும் ஒருவருக்கொருவர் என்ன கிஃப்ட் பரிமாறிக்கிட்டீங்க?**

"நான் அதிகபட்சமா அவருக்குக் கொடுத்த பொருட்கள்னா, அப்பப்ப சாக்லேட் தந்திருக்கேன். சாப்பிட்டு அதோட கவரையெல்லாம் சேர்த்து வச்சிருக்காரான்னு தெரியலை. ஆனா அவர் எனக்குத் தந்த பரிசு மறக்க முடியாதவை. போன வருசம் என் பிறந்த நாளுக்கு சூப்பரா ஒரு நாய்க்குட்டி வாங்கித் தந்தார். இப்ப எங்க பெங்களூர் வீட்டுல அதுதான் எங்க அப்பா அம்மாவுக்கு செல்லப் பிள்ளை." ●

**ஜல்லிக்கட்டைப் பார்க்கணும்னு சொல்லி இருக்கேன்!**

- அய்யனார் ராஜன்

# தனி ஆவர்த்தனம்

பூர்ணம் நடராஜ் IPS

**பாடும் ராகத்தை வர்ணித்துப் புரிய வைத்து அந்த மெட்டுல வந்த சினிமா பாடலைப் பாடி ரசிகர்களை தன்வயப்படுத்திக் கொண்டுள்ளார் சாருலதாமணி.**

லக்ஷ்மண் சுருதியின் ஏற்பாட்டில் காமராஜ் அரங்கத்தில் சென்னையில் திருவையாறு இசை நிகழ்ச்சி துவங்கியதிலிருந்து பாப்புலராகி விட்டது. முதலில் சிறியதாக இருந்த கேண்டீன் இப்போது ஃபுட் கோர்ட்டாக வளர்ந்துவிட்டதே சாட்சி! கச்சேரிக்கு காலப்பிரமாணம் முக்கியம். இங்கு 90 நிமிட காலப் பிரமாணம் நல்ல ஃபார்மட்! மதியக் கச்சேரி என்றாலும் ஆர்வமான ரசிகர் கூட்டம். பிருந்தாவன சாரங்கா ராகத்தில் 'ஸ்ரீரங்கபுர விஹாரா' நெஞ்சுருகப் பாடினார். 'பெண்ணொன்று கண்டேன்' 'சோலைக் குயிலே' போன்ற தமிழ்ப்பாடல்களும் சில வரிகள் பாடி கைதட்டுப் பெற்றார். 'சிவ சிவ என ராதா' பந்துவராளி ராக கிருதி. அழகாகப் பாடினார். 'ஏழு ஸ்வரங்களில் எத்தனை ராகம்' 'நின்னைச் சரண் அடைந்தேன்' பாரதியார் பாடல் எல்லாம் பந்துவராளி மெட்டில் சினிமா பாடல்கள். அடுத்து ஜல நாட்டையில் 'எனக்கேதய்யா கதி'. சிவனுக்கு உகந்த ராகம் காம்போஜி 'மா ஜானகி', 'ஓ ரங்க சாயி' பாடல்கள் பிரசித்தம். சீர்காழியின் "அறுபடை வீடு கொண்ட திருமுருகா" காம்போஜி



Moviezworld.com



# சிவனுக்கு உகந்த ராகம்!

மாளவிகா சுந்தர்

ராகப் பாடல் மறக்க முடியுமா! "கல்வியா செல்வமா வீரமா" சரஸ்வதி சபதம் சினிமா பாடலும் காம்போஜி ராகம்தான். முடிவில் பேஹாக் ராக பஜன், மற்றும் 'விட்டலா அபங்கோடு' கச்சேரி நிறைவு செய்தார். 'ஓ ரங்க சாயி' பாடல் ரீங்காரம் இன்னும் ஒலிக்கிறது. 'சாரு மேரு போல் உயர்க.'

சாருலதா மணி



'யூத் ப்ரிகேடில்' இடம் பெறும் மற்றொரு பாடகி மாளவிகா சுந்தர். போன வருடம் சூப்பர் சிங்கர் போட்டியில் முதல் 10 பாடகர் வரிசையில் தேர்ச்சி பெற்றவர். அழுத்தமான குரல். அவரது மியூசிக் அகாடமி பகல் கச்சேரி கேட்டதில் சந்தோஷம். 'மாருபல்க' என்ற தியாகராஜர் க்ருதி ஸ்ரீரஞ்சனி மனோரஞ்சகமான ராகம், ருசி குறையாமல் அளித்தார். தீக்ஷிதரின் 'ஸ்ரீமாத்ருபூதம்' கன்னட ராகம் மிஸ்ர ஜாபு தாளம், அசாத்ய திறமையோடு பாடினார். அடுத்து தோடி ராக ஆலாபனை. தியாகராஜரின் 'கொலுவமரகத' கீர்த்தனை. நிரவல் கல்பனா ஸ்வரங்கள், நேரம் காரணமாக விரைவில் முடித்துக் கொண்டார். செம்மங்குடி சிஷ்யர் வி.சுப்பிரமணியம் இவரது குரு. தன்னம்பிக்கையோடு பாடுகிறார். பிரசன்னம் முகத்தில் தெரிய வேண்டும். அப்போதுதான் ரசிகர்களோடு இணைய முடியும்.

சாஸ்வதி



**லால்குடியின் சிஷ்யை என்பது ப்ளஸ்பாய்ண்ட்**

கச்சேரியில் வயலினுக்குப் பதிலாக புல்லாங்குழல் சேர்ந்திசைத்தால் எப்படியிருக்கும் என்று யோசித்ததுண்டு. கிருஷ்ண கான சபா செயலாளர் திரு பிரபுவின் மகள் சாஸ்வதியின் தபஸ் சபா ஏற்பாட்டில் தத்வலோகாவில் மாலைக் கச்சேரியில் கேட்க முடிந்தது.

தூதே, கிருஷ்ண வேணு கான மூர்த்தி, பிரோவபாரமா என்று வரிசையாக இஷ்ட தெய்வங்கள் பாடல்கள் சிருங்கேரி சங்கராச்சார்யா தத்வலோக சபைக்குப் பொருத்தமாக இருந்தது. அழுத்தமான குரல் எல்லோருக்கும் அமைவதில்லை. அது சாஸ்வதிக்கு உள்ளது. லால்குடியின் சிஷ்யை

ஸ்ரீரஞ்சனி






'நம்முள் இறையுணர்வு' என்ற தலைப்பில் ராக நுணுக்கங்களில் நுழையாது சாஹித்ய சுத்தமாகப் பாடினார். குரு லால்குடி ஜெயராமன் இயற்றிய வர்ணத்தோடு ஆரம்பித்தார். ப்ரண மாம்யகம் கௌரி சுதம், ஸ்ரீவள்ளி தேவசேனா பதே ஸ்ரீ சுப்ரமண்ய நமோஸ்

இன்னொரு ப்ளஸ் பாய்ண்ட். கலைச் சேவையே முழுமூச்சாகக் கொண்ட குடும்பப் பாரம்பரியம். இது போதாதா இவர் பிரகாசிக்க.

நல்ல வேளை சாகேத் ராமன் இசையை அனுபவித்தேன் பிரும்ம கான சபையில். ஈஸ்வரன் மிருதங்கம், கடம் காத்திக், நாகை ஸ்ரீராம் வயலின். அற்புத

காம்பினேஷன். 'என்றைக்கு சிவன் கிருபை வருமோ' முகாரி ராக விஸ்தார ராக ஆலாபனை உணர்ச்சிபூர்வ அளிப்பு. அடுத்து ஜெட் வேகத்தில் "ஏமனி பொகடுதுரா" வீரவசந்தம் ராகத்தில். சாகேத் ஜெட் என்றால் கார்த்திக் ராக்கெட் வேகத்தில் லயம். அசாத்திய வாசிப்பு. 'ஸ்ரீசத்ய நாராயண உபாஸ்மஹே' சுபபந்துவராளி ராகம். நாராயணனோடு ஒன்றி விடச் செய்தார். சாகேத் விசாகா ஹரியின் தம்பி. சங்கீத ஞானம் நிறைந்த குடும்பம். பெற்றோரின் புண்ணியம்.

ஸ்வரஸ்தானத்தை நினைத்தபடி திருப்தியாக பிடித்தால் 'ஆஹா' என்று தன்னையே தட்டிக் கொடுத்துக் கொள்வார் சந்தான கோபாலன். அவரது மகள் ஸ்ரீரஞ்சனியின், அப்பா பாணியில் சில முத்திரைகள் கலந்த பிரும்மகான சபை நிறைந்த கச்சேரி ரசிக்கும்படியாக இருந்தது. அசாத்திய தைரியத்தோடு உச்சஸ்தாயியில் சஞ்சரிப்பது, ராக ஆலாபனையில் குரலைப்



பரத் சுந்தர்

**சாரீரம், பாவம், பக்தி இணைந்தால்தான் கர்நாடக சங்கீதம்!**

பிரட்டி எடுப்பது எல்லோரையும் அசர வைத்தது. வயலினிஸ்ட் ஈடு கொடுக்க சிரமப்பட்டார்.

தியாகராஜ ஸ்வாமி கீர்த்தனங்கள் ஸாஹித்யத்தின் உட்கருத்திற்குத் தகுந்தவாறு ராகம் அமையும். 'முத்துமோமு ஏலாகு' கீர்த்தனையில் இராமனின் சுந்தரத்திருமுகம் வனவாசத்தில் எவ்வாறு பிரகாசித்ததோ என்று வியக்கிறார். இதற்குப் பொருத்தமான ராகம் சூர்யகாந்தம். உணர்ந்து பாடினார் ஸ்ரீரஞ்சனி. அழகான ராக ஆலாபனை. நர்மதாவின் எடுப்பான வயலின் சேர்ந்திசை கேட்க இனிமை. அடுத்து ஜிஎன்பி அவர்களின் கிருதி 'கமலகரனே' சுறுசுறுப்பாக அமிர்த பேஹாக் ராகத்தில் இனிமை



சா.கேத்ராமன்

ததும்பப் பாடினார். 'மீன லோசன ப்ரோவ' தன்யாசி ராக சியாமா சாஸ்திரி கீர்த்தனை திருப்தியாக அளித்தார். 'காலபயம் ஏதய்யா' என்ற சிவன் துதிப்பாடலோடு கச்சேரி நிறைவானது. இளம்பாடகி இழுத்த வாக்கில் குரல் வளைந்து கொடுக்கிறது. கடினமான குழைவுகளோடு அகார சுத்தமாக உச்சஸ்தாயியில் சஞ்சரிக்கும் போதும் பயமின்றி பயணிக்கிறார். ஒளிமயமான எதிர்காலம் நன்றாகத் தெரிகிறது.

**ப**ரத் சுந்தர் இந்த சீசனில் ஜொலிக்கிறார் என்று கேண்டீன் விமர்சனம் காதில் விழுந்தது. மிஸ்பண்ணாமல் மியூசிக் அகாடமி மதியக் கச்சேரி கேட்டேன். 'பராத்பரா பரமேஸ்வரா' வாசஸ்பதி ராகம், சிவன் பாடல் துரித நடையில் பாவம் குன்றாது பாடினார். 'முருகா முருகா என்றால் உருகாதோ மனம்' தமிழிசை முழங்கியது பரத் உபயத்தால். அடுத்து பைரவி ராக ஆலாபனை விஸ்தாரமாக செய்தார், தேர்ந்த வித்வான் போல. தியாகராஜரின் 'கொலுவைப் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் போல இராமன் சீதை சமேதம் காட்சி அளிப்பதை துதிக்கும் பாடல். நிரவலும், கல்பனா ஸ்வரங்களும் கணக்கே இல்லாமல் பின்னிப் புனைந்தார். முடிவில் 'என்ன தவம் செய்தனை யசோதா' மனம் குளிர்ந்தது. அலட்டாமல் சென்னை பாஷையில் 'அசால்டா' பாடுகிறார் பரத் சுந்தர்.

பொதிகையில் எம்.எஸ். அவர்களின் பழைய நேர்காணல் காண்பித்தார்கள். கர்நாடக சங்கீதத்திற்கு அப்பியாசம் எவ்வளவு முக்கியம் என்பதைக் கூறினார். சாரீரம் வளர்வதற்கு பிராக்டீஸ் அவசியம். சாரீரம், பாவம், பக்தி மூன்றும் இணைந்தால்தான் கர்நாடக சங்கீதம் என்பது எம்.எஸ்.ஸின் சத்தியவாக்கு.

**படங்கள்:**
**ஆர். சண்முகம்**

MBBS டாக்டர்கள் 1 வருடம் கிராமத்தில் கட்டாயம் பணி புரிய வேண்டும் - அமைச்சர் குலாம் நபி ஆசாத்.

**நை.நா:**

அமைச்சர்களும் 1 வருடம் கிராமத்தில் பணியாற்றணும்னு சட்டம் போட்டா நல்லாருக்கும்.




மந்திரி பதவி கிடைக்காததால் அரவிந்த் கெஜ்ரிவால் கட்சியில் உட்கட்சி பூசல்

**நை.நா:**

அரவிந்த் கெஜ்ரிவால் சீக்கிரம் அரவிந்த் 'நரி'வாலா மாறி தந்திரமா செயல்படுங்கள்.



tamilmagazines.blogspot.com



# நையாண்டி நாராயணன்

இந்தியர்களில் 53% பேர் ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு நிம்மதியின்றி தவித்தல்.

**நை.நா:**

இத இப்படியும் சொல்லலாம்! 53% இந்தியர்கள் கல்யாண வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு நிம்மதியின்றி தவித்தல்.



புத்துணர்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்ட யானைகள் உற்சாகம்!

**நை.நா:**

யானைகளுக்கு புத்துணர்வு தர்றாமாதிரி யானைப்பாகனுக்கு சத்துணவு தாங்களேன்... 'வீக்'கா இருக்காங்க...

2014-ம் வருட Calendar 1947 Calendar போல்.

**நை.நா:**

அப்ப 1947-ல் வெள்ளைக்காரங்க கிட்டேருந்து சுதந்திரம் கிடச்ச மாதிரி 2014-ல கொள்ளைக்காரங்க கிட்டேருந்து சுதந்திரம் கிடைக்கும்.

tamilmagazinesblogspot.com
Movieworld.com

**பிரபல இயக்குநர் ஏ.பி.நாகராஜன், நடிகர் வி.எஸ்.ராகவன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். காட்சியளிக்கும் இந்தப் புகைப்படத்தை வி.எஸ்.ராகவன் அவர்களிடம் காண்பித்தோம்...**

"ராஜா அண்ணாமலை மன்றத்தில் என்னுடைய 'இந்தியன் நேஷனல் ஆர்ட்டிஸ்ட் தியேட்டர்ஸ்' நாடகக்குழுவின் மூலம் போடப்பட்ட 'நகையே உனக்கொரு நமஸ்காரம்' என்ற நாடக விழாவில் எடுக்கப்பட்ட படம் இது!

நகைச்சுவையான நாடகம் இது. எம்.ஜி.ஆர். அவர்களை தலைமை தாங்க அழைத்தோம். திரைப்படங்களைவிட இரண்டு மடங்கு நாடகத்தின்மீது அவருக்கு ஈடுபாடு உண்டு. நாடகத்தை முழுமையாகப் பார்த்து ரசித்துவிட்டு மேடையில் எல்லா கலைஞர்களையும் பாராட்டினார். 'நகைச்சுவை நாடகம் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும். ஒரு சிலர் தற்போது நகைச்சுவை நாடகங்கள் என்ற பெயரில் பலருடைய மனங்களை புண்படுத்தும்படி காட்சிகளையும்



- வசனங்களையும் அமைத்துப் போடுகிறார்கள். அது இவர்களிடம் இல்லை. நான் நாடகங்களில் நடிக்கும் காலகட்டங்களில் இதுபோன்று முழுக்க முழுக்க நகைச்சுவை நாடகம் ஒன்றில் நடிக்க ஆசைப்பட்டேன். அந்த ஆசை

Moviezzworld
tamilnet.blogspot.com



# பணத்திற்குப் பதில் பதவி!



tamilmagazines.blogspot.com



கடைசி வரை நிறைவேறவில்லை. நாடகத்தின் மேல் உள்ள காதலால் யார் என்னை நாடகத்திற்குத் தலைமை தாங்க அழைத்தாலும் உடனே ஒப்புக்கொண்டு வந்துவிடுவேன்' என்று மனம்விட்டுப் பேசினார் எம்.ஜி.ஆர்." என்று கூறிய வி.எஸ்.ராகவன், இன்னொரு ஆச்சரியமான தகவலையும் கூறினார்.

"என்னுடைய தாயார் உடல் நலம் சரியில்லாமல் ஆஸ்பத்திரியில் அட்மிட்டாகியிருந்தார். ஒருவார சிகிச்சைக்குப்பின் வீட்டிற்கு தாயாரை அழைத்து வந்துவிட்டேன். இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர். தனது உதவியாளரிடம் பத்தாயிரம் ரூபாயை வைத்தியச் செலவிற்கு வைத்துக் கொள்ளும்படி கொடுத்து அனுப்பியிருந்தார். அதை நான் வாங்காமல் 'எம்.ஜி.ஆரிடம் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்' என்று கூறி அனுப்பிவிட்டேன். அவர் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு விடுவாரோ என்று எண்ணி உடனே அவரைச் சந்தித்து 'என் தாயாருக்கு சிகிச்சை நல்லபடியாக முடிந்து வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன். வைத்தியச் செலவிற்கு என்று தாங்கள் கொடுத்ததை நான் வேறு செலவிற்குப் பயன்படுத்த விரும்பவில்லை. ஆகவே தாங்கள் என்னைத் தவறாக எண்ணக் கூடாது, மன்னித்துவிடுங்கள்' என்றேன். என்னுடைய நேர்மையைப் பாராட்டிய எம்.ஜி.ஆர்., 'தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றத்தின் உறுப்பினர் - செயலாளர் பதவியை ஏற்று செயல்படுங்கள்' என்று அன்புக் கட்டளையிட்டார். 1985 முதல் 1988 வரை அப்பதவியில் அவருடைய பெயருக்குக் களங்கம் வராமல் நேர்மையோடு செயல்பட்டேன்" என்று கூறினார் வி.எஸ். ராகவன்.

**கடைசிவரை எம்.ஜி.ஆர். பெயருக்குக் களங்கம் வராமல் செயல்பட்டேன்!**

**- மேஜர்தாசன்**

Moviezworld.com
tamilmagazines.blogspot.com

# போட்டோ

“அம்மா பூரணி, அந்த சாஃப்ட்வேர் இன்ஜினியர் பற்றி தரகர் சொல்லியிருந்தாருல்ல? அவரு உன்னோட போட்டோவை இமெயிலுல மாப்பிள்ளைப் பையனுக்கு அனுப்பச் சொல்லியிருக்கார்” என்று ஒரு இமெயில் முகவரியை பூரணியிடம் கொடுத்தார் மகாலிங்கம்.

தந்தையை ஏறெடுத்துப் பார்த்தவள், “அப்பா, மாப்பிள்ளை வீட்டாரை நேரே வந்து பொண்ணு பார்க்கச் சொல்லுங்க!” என்றாள்.

“பூரணி, உன்னை போட்டோவுல பார்த்து புடிச்சிருந்தா அப்புறம் பொண்ணு பார்க்க கூப்பிடலாமே? தேவையில்லாம எதுக்கு ஒரு பெண் பார்க்கும் படலம்?” கேட்ட தந்தைக்கு நிதானமாக பதில் கூறினாள் பூரணி.

“அப்பா, மாப்பிள்ளை சாஃப்ட்வேர் இன்ஜினியர்! அவரை நமக்கு முன்னப்பின்ன தெரியாது! இண்டர்நெட்டுல வெளியாகிற போட்டோக்களை எப்படி வேணுமுன்னாலும் திரிச்சுப் போடலாம்! எந்தப் புற்றுல எந்த பாம்பு இருக்குமோ? ஒரு வயசுப்பொண்ணோட போட்டோ, இந்தக் காலப் பசங்க கையில கிடைக்கவே கூடாது. அதுக்காக எல்லா பசங்களும் அப்படித்தான்னு நான் சொல்ல வரலை. நல்லவங்க இருக்கிற இந்த உலகத்துல, அதே அளவுக்கு குரூர புத்தி படைச்சவங்களும் இருக்காங்க! அதனால, நாம ஏம்பா ரிஸ்க் எடுக்கணும்? நேர்ல என்னைப் பார்க்கட்டும்! புடிச்சா மேற்கொண்டு பேசுவோம்! இல்லைனா விட்டுடுவோம்! சரியாப்பா?” என்றாள் பூரணி.

‘உலகம் புரிந்தவள் தன் மகள்’ என்று மனதிற்குள் மகிழ்ந்தார் மகாலிங்கம்.



■ வி. சகிதாமுருகன்

tamilmagazines.blogspot.com

# கிராமிய கலைக்கும் இலக்கணம் இருக்கு!

## என் பாட்டையும் உற்சாகப் படுத்தினாங்க!

**கர்நாடக இசைக்கும் நாட்டுப்புற இசைக்கும் நாலாம் பொருத்தம் என்பார்கள்.** இந்த எதிரும் புதிருமாக இருக்கும் இரண்டு கலைஞர்களும் சேர்ந்து மார்கழி சீசனில் சென்னையில் பெரிய கச்சேரியே நடத்தியிருக்கிறார்கள். எப்படி சாத்தியம்? கர்நாடிக் இசைப் பாடகி சாருலதா மணியையும் கிராமிய இசைப் பாடகர் வேல்முருகனையும் சந்தித்தோம்.

“என்னைப் பொறுத்தவரைக்கும் நான் 'போல்ட்' ஆன ஆள். இசைத்துறையில் எங்க ஒரு புது விஷயம் நடந்தாலும் அங்க நான் முதல் ஆளா இருந்திருக்கேன். பண்டையக் காலத்துல இருந்தே தமிழ் இசை ரெண்டுவிதமா இருந்திருக்கிறது. கிராமிய இசை மனம் சார்ந்து வெளிப்பட்டதுனா கர்நாடிக் பக்தி சார்ந்து வெளிப்பட்டது. இந்த ரெண்டுமே முக்கியம்தான். அதுல இதான் பெருசு, அதான் பெருசுனு வித்தியாச பேதங்கள்லாம் எனக்குக் கிடையாது. இப்படி நான் பேசறதை சிலர் தப்பா புரிஞ்சுக்கலாம். அதப் பத்தி எனக்கு கவலையில்லை. எல்லாத்துக்கும் மேல கடவுள்னு ஒருத்தர் இருக்கார்.” தொடங்கும் போதே அமர்க்களமாக ஆரம்பம் கொடுக்கிறார் சாருலதா மணி.

“இந்தக் கச்சேரி பத்தி நாங்க பிளான் பண்ணும்போதே விரசமா இல்லாத அளவுக்கு நாகரிகமான பாடல்களை மட்டுமே





எடுத்துக்கிட்டோம். கிராமியம்னாலும் அதற்கு இலக்கணம் இல்லனு எடுத்துக்க முடியாது. கிராமிய இசையில் 'செஞ்சுருட்டி'னு ஒரு மெட்டு இருக்கு. அத அடிப்படையா வச்சு உருவானதுதான் ஃபோல்க் சாங்ஸ். அப்புறம் கிராமியப் பாடல்களில் ராகம்னு தனியா இனம்பிரிச்சுக் காட்ட முடியலைன்னாலும் 'இழையோடின ராகம்'னு அதிலும் ராகம் இருக்கவே செய்கிறது. கர்நாடிக் மியூசிக்குக்கு ஏத்த மாதிரி வயலின், மிருதங்கம்னு பக்க வாத்தியங்களை பயன்படுத்தினோம். கிராமியப் பாடல்கள்னு வரும்போது நாதஸ்வரம், தவில் பயன்படுத்தினோம். இந்த இன்ஸ்ட்ருமெண்ட் வித்தியாசமே ரெண்டும் வேறவேற அடையாளத்தோடு இருப்பதை ஆடியன்ஸுக்கு புரிய வச்சுடும்!" என்று சொல்லும் சாருலதா பிளேபேக் சிங்கரும்கூட.

"சாதாரண கிராமியக் கலைஞனோடு ஒரு கர்நாடிக் பாடகர் சேர்ந்து ஒண்ணா பாடுறதே பெரிய விஷயம். அப்படியெல்லாம் நினைச்சதும் சபாவில் நடத்திவிட முடியாது.



tamilmagazinesblogspot.com

பல வருஷங்களாக ஒரு வழக்கம் இருந்துக்கிட்டு வருகிறது. அதுல ஒரு புதுசு செய்யணும்னு நினைச்சோம். அதற்கு பலரும் ஹெல்ப் பண்ணாங்க. அந்த உதவியால், அவர்களின் பெருந்தன்மையால் இந்தக் கச்சேரி சக்சஸ் ஆகியிருக்கிறது.

நான் கிராமியப் பாடகராக இருந்தாலும் எனக்கு கர்நாடக இசையில் நல்ல ஞானம் இருக்கு. முறையா சென்னை மியூசிக் காலேஜில் நான் கர்நாடிக் படிச்சிருக்கேன். அப்படி அடிப்படை ஞானம் இல்லாட்டி இவங்களோடு சேர்ந்து ஒரே மேடையில் கச்சேரி பண்றது சுலபமில்ல. அவங்க ஆலாபனை, சுரம் கலந்து பாடினா நான் நம்ம மண்ணின் கலைக்கு நியாயம் சேர்க்குறதைப்போல முறையா பாடினேன். அதனாலதான் வந்த ஆடியன்ஸும் கர்நாடிக் பாட்டை உற்சாகப்படுத்திய அளவுக்கு என் பாட்டையும் உற்சாகப்படுத்தினாங்க" என்று சந்தோஷம் கொள்கிறார் வேல்முருகன். கலைக்காக நல்ல மனங்கள் ஒன்று சேர்ந்தால் நல்ல விஷயம்தானே?!

-கடற்கரய்

படங்கள்: ஆர். சண்முகம்






tamilmagazines.blogspot.com
Moviezzworld.com



# ஆர்டர் குறைந்தால் விளைச்சல் குறையும்!

**'கருத நல்லா வெளைய வெச்சு, மருத ஜில்லா ஆள வெச்சு, அறுத்துப் போடு களத்துமேட்டுல சின்னக்கண்ணு'னு பாட்டுப்பாடி கதிர் அறுக்கும் அருவாளை தமிழகத்தின் ஒவ்வொரு ஏரியாவிற்கும், ஒவ்வொரு டிசைனில் வடிவமைத்துக் கொடுக்கிறார்கள் நன்னி ஆசாரியூரில்.**




திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அருகேயுள்ள நன்னி ஆசாரியூர் கிராமத்திற்குச் சென்றோம்.

எங்கு திரும்பினாலும் டங், டங் என்ற சத்தம் இசை போல் கேட்கிறது. வீட்டிற்கு வெளியே பட்டறையைப்



tamilmagazinesblogspot.com




தஞ்சாவூர் பகுதியில
நடுப்பகுதி நல்லா வளைஞ்சு
இருக்கற மாதிரி
கேட்பாங்க





## இந்த வருஷம் ஆர்டர் குறைவுதான்!

போட்டு தனது மனைவியின் உதவியோடு அருவா செய்து கொண்டிருந்த பழனிச்சாமியிடம் பேசினோம்...

"எங்க ஊர்ல 100 வருஷத்துக்கு மேல இந்த கதிர் அறுக்கும் அருவா செய்துக்கிட்டு இருக்கோம். இப்போ இங்க 60 குடும்பம் இருக்கு. 60 வீட்டுலயும் வீட்டுக்கு வெளிய பட்டறையப் போட்டு அருவா செய்றோம். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து இங்க வந்து ஆர்டர் கொடுத்து மொத்தமா வாங்கிட்டுப் போவாங்க. ஒவ்வொரு ஏரியாவிலயும் ஒவ்வொரு டிசைனில் அருவா கேப்பாங்க. தஞ்சாவூர் பகுதியில நடுப்பகுதி நல்லா வளைஞ்சு இருக்கறமாதிரி கேப்பாங்க. நெல்லைப் பகுதியில முனை வளைஞ்சமாதிரி கேப்பாங்க. கள்ளக்குறிச்சி பகுதியில சின்ன அருவா கேப்பாங்க. கர்நாடகா, ஆந்திராவில இருந்தெல்லாம் வந்து இங்க ஆர்டர் கொடுத்து வாங்கிட்டுப் போவாங்க. இப்போ இந்த தை மாசம் அறுவடைக்கு ஆர்டர் நிறைய இருக்கு. அதுக்கு மும்முரமா அருவா செஞ்சுக்கிட்டு இருக்கோம். திண்டுக்கல் போய் இரும்பு வாங்கி வருவோம். அருவா செய்து திண்டுக்கல் மார்கெட்லயே சில்லறை வியாபாரத்திற்கும் விற்போம்.

மழை இல்லாததால இந்த வருஷம் வழக்கத்தை விட எங்களுக்கு ஆர்டர் குறைவுதான். எங்களுக்கு வரும் ஆர்டரை வைத்தே அந்த ஆண்டின் விளைச்சலை நாங்கள் கணித்து விடுவோம். விஞ்ஞான வளர்ச்சியில் கதிர் அறுக்கும் மிஷின் வந்து விட்டதாம், எத்தனை மிஷின் வந்தாலும் நெற்கதிருக்கு சேதமில்லாமல் கையால் அறுத்து களத்து மேட்டில் போட்டால்தான் மாட்டுக்கு வைக்கோல்!". ●

- அரவிந்த்



Magazinesworld.com magazinesblogspot.com

"பெட்ரோல்குண்டு கேள்விப்பட்டிருக்கிறோம்... இது என்ன டீசல் குண்டு?"

"பெட்ரோல் விலை அதிகம், வாங்கி கட்டுபடியாகல சார். அதான்... டீசல் குண்டுக்கு மாறிட்டோம்..."

- வி.எஸ். ராமு



"ஜாலியாதானப்பா இருக்கே. 'நீ இல்லாமல் கஷ்டப்படறேன்' என்று ஊருக்குப் போயிருக்குற மனைவிக்கு எதுக்கு போன் பண்ணரே?"

"ஜாலியா இருக்கேன் என்று தெரிஞ்சா உடனே புறப்பட்டு வந்துடுவா!"

- தீ. அசோகன்



Moviezworld.com
tamilmagazinesblogspot.com





tamilmagazines.blogspot

# வசீகரி

**'இது நமக்குத் தேவையா... நாம் இத்தனை தரம்தாழத்தான் வேண்டுமா...' என்றிருந்தது அவனுக்கு.**

பீச்சில் எல்லோருக்கும் அவசரம். வேகமாய் நடந்து அல்லது ஓடி, அல்லது கும்பல் கும்பலாய் அமர்ந்து மணலில் குப்பையாக்கி...

கண் குளிரவேண்டும் என்றால் நிச்சயம் பீச்சுக்கு வரக்கூடாது. வியர்வை - தொப்பை - மொந்தை - அல்லது முகம் சுருக்கம் - கொழுப்பு - சர்க்கரை அனைத்தையும் விரட்ட வந்தவர்கள் - இவர்கள்.

போதும்டா சாமி! அவள் எங்கே? நெஞ்சு முழுக்க அவள்!

அவள் எப்படியிருப்பாள்? அந்த திரிஷா...? நயன்? காஜல்... பிரியா ஆனந்த்...? பேச்சில் தேனொழுகுகிறது. ஆனால் கண்ணில் காட்டுவேனா என அலைக்கழிக்கிறாள்!

நமக்கு இந்த அலைச்சல் தேவைதானா?

ஒரு பிரபல எழுத்தாளன் தொலைக்காட்சி - சினிமா கதாசிரியர் - பொறுப்பான உயர் பதவியில் இருப்பவன்! ஒரு பெண்ணின் முன்னில் எல்லாமே கவுந்துவிட்டது.



என்.சி. மோகன்தாஸ்

tamilmagazines.blogspot.com
Moviezworld.com

சினிமா டிஸ்கஷன், இலக்கியக் கூட்டத்தை விட்டுவிட்டு... அவளுக்காக... ச்சை!

அவள் -

"எழுத்தாளர் வைஷ்ணவ் சார்...! நான் உங்க தீவிர வாசகி! எனக்காக கொஞ்ச நேரம் ஒதுக்கித் தர முடியுமா...?" என்று தொலைபேசியில் தேன் வழிய ஆரம்பித்தது - வசீகரக் குரல்.

"சார்! உங்களோட நடை, நகைச்சுவை, பளிச் வர்ணனை, சமூக அக்கறை, நய்யாண்டி எல்லாமே எனக்குப் பிடிக்கும். என் ஆசாபாசங்களை தங்களுடன் பகிர்ந்து கொள்ள சந்திக்க வேண்டும்!"

"ஓ... யெஸ். வீட்டுக்கு வாங்களேன்!"

"வீட்டுக்கா...?" என்று மௌனம். "வீடு வேணாம் சார். உங்க மனைவி தப்பா எடுத்துக்கப் போறாங்க!"

"மாட்டாங்க. எங்களுக்குள் எந்த ஒளிவு மறைவும் இல்லை. என்னைப் பார்க்க எத்தனையோ பொண்ணுங்க வருவாங்க. வந்து தம் சொந்த - சோக - சுக கதைகளைச் சொல்றாங்க. அவை பிறகு நாவல்களாய் மலர்கின்றன."

"ஐயையோ...! வேணாம் சார். என் கதையை எழுதிராதீங்க!"

"ம்... அப்புறம்?"

"உங்க மேல எனக்கு அபிமானம். அபிப்ராயம்! என் மன உணர்வுகளை ஒங்ககிட்ட பகிர்ந்துக்கணும்னு உந்துதல்' என்றாளே தவிர சாமான்யத்தில் சொல்லித் தொலைக்கவில்லை. உசுப்பேற்றிக் கொண்டிருந்தாள்.

அவ்வப்போது "சார்! நான் ஒருவிதத்தில் அதிர்ஷ்டசாலி. இன்னொருவிதத்தில் துரதிர்ஷ்டாதிபதி!"

"புரியலே"

"நீங்க எவ்ளோ... புத்திசாலிதனமா எழுதறீங்க... புரிஞ்சுட்டீங்கன்னு நினைச்சேன்!"

> **"வீடு வேணாம் சார். உங்க மனைவி தப்பா எடுத்துக்கப் போறாங்க!"**

இதுதான் - இதுதான்! ரசிகர்களிடம் பிரச்னை. 'கற்பனையில் காதலிப்பதும், க்ரைம் படைப்பதும், அண்ட சராசரங்கள் அத்தனையும் பிழிந்து தருவதும் எழுத்தில் சாத்யம். நேரிலும் அப்படி நினைத்து வந்தால் ஏமாற்றமே மிஞ்சும். எழுத்தாளனையும் சினிமா கலைஞர்களையும் அவர்களது படைப்புக்களை ரசிப்பதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். நேரில் சந்திக்க ஆசைப்படக் கூடாது.



tamilmagazinesblogspot.com

சந்தித்தால் ஏமாற்றமே மிஞ்சும்!' என்று சுஜாதா சொன்னது எத்தனை உண்மை!

எழுத்து ஒரு பம்மாத்து. எப்படி வேண்டுமானாலும் எழுதிவிட்டுப் போகலாம். அவற்றை நிஜத்தோடு சேர்த்து குழப்பிக் கொள்ளக்கூடாது.

வைஷ்ணவ்வுக்கு இது ஒன்றும் புது அனுபவமல்ல. காதல் ரசம் சொட்டச் சொட்ட எழுதுவதைப் படித்துவிட்டு பெரிய எதிர்பார்ப்போடு அதே மாதிரி தங்களையும் அவன் மகிழ்விப்பான் என கூச்சமில்லாமல் வெளிப்படுத்தும் கல்லூரிப் பெண்களையும் நேரிட்டிருக்கிறான்.

இவள் வேறு மாதிரி! புரிந்துகொள்ள முடியவில்லை.

முன்பெல்லாம், அவள் அழைத்தால் எடுக்கக்கூடாது - பேசக்கூடாது - சிந்தையை ரொம்பவே சிதறடிக்கிறாள் என்கிற வைராக்கியம் எழுந்து, செல் அலறினதுமே அது பறிபோய்விடும்.

நாளடைவில், அவள் அழைக்க மாட்டாளா. எப்போது அழைப்பாள் என ஏங்குமளவிற்கு அவனைப் பரிதாபத்திற்கு ஆக்கிவிட்டிருந்தாள்.

"சார்! நான் பொய் சொல்ல வில்லை. என்னை எல்லோரும் தேவதை என்கிறார்கள். அழகு என்கிறார்கள். அதுவே எனக்கு எதிரியாக அமைந்துவிடுகிறது. அதனால் என் பேரிலேயே எனக்கு வெறுப்பு. ஊர் உலகத்தில் எத்தனை பெண்கள் தங்களுக்கு நிறமில்லை, முடியில்லை, போதுமான அளவுக்கு அவயவங்கள் இல்லை... தெற்றுப்பல், குண்டு அல்லது ஒல்லிப் பிச்சான்... என்று கவலைப்படும்போது எனக்கு மட்டும் ஏனிந்தக் கொடுமை சார்...?"



tamilmagazines Moviezworld.com

"ஹா... ஹா...!"

"சார்... உங்களுக்கு நான் கேலியா தெரியறேன் இல்லே...?"

"அப்படியில்லை... உன் பெயர்கூட சொல்லலே நீ! சரி... வேணாம்... நானே உனக்குப் பேர் வெச்சுர்றேன். மாயாவி! மர்மக் கைபேசி மாயாவி! வந்து... இல்லாதவங்கதான் கவலைப்



படணும்... இருக்கறவுங்க ஏன்..."

"சார்...! இருக்கறதுதான் பிரச்னையே. கொஞ்சம் பழகிட்டா... உடனே லவ்வுன்னு சொல்லி ஒட்டறானுங்க. பாஸ்போர்ட் அப்ளை பண்ணப்போனா... என்னைப் பார்க்க வேண்டி இழுத்தடிக்கிறான். பஸ்ல, ரயில்ல, நடக்கும்போது, தியேட்டர்ல எங்கும் லொல்லுத் தாங்கல! அலுவலகத்துல அதிகாரிகளும் வழிந்து மிரட்டறாங்க. எனக்கு வேண்டி எதையும் செய்யத் தயார்ன்னு புத்தியை அடமானம் வைக்கிறாங்க!

சார்... உங்ககிட்ட நான் நிறைய பேசணும். ஆனா நீங்களும் மத்தவங்க மாதிரி இருக்க மாட்டீங்கன்னு மனசு நம்பச் சொல்லுது. எனது அபிமான எழுத்தாளர்- நீங்களும் என்னைப் பார்த்ததும் 'ஐ லவ் யூ'ன்னு ப்ளேட்டை மாற்றிட மாட்டீங்களே?"

**கொஞ்சம் பழகிட்டா...**
**உடனே லவ்வுன்னு சொல்லி**
**ஒட்டறானுங்க.**

அவனுக்கு மண்டையில் அடித்த மாதிரி இருந்தது. யாரிவள்? வலிய வந்து வடம் பிடிக்கிறாள். விடாமல் மின்னலடிக்கிறாள். நெஞ்சில் உரமேற்றுகிறாள். அல்லது தகர்க்கிறாள்!

மாயாவி எந்த அளவிற்கு போகும் என்கிற ஆர்வம் எழுந்தது. போகும் வரை போகட்டும். துரத்துவோம் என்று முடிவெடுத்தான்.

விஷயத்தை மனைவியிடம் சொல்லிச் சிரிக்க, அவளுக்கும் ஆர்வம் அதிகமாயிற்று.

"நானிருந்தாதானே அவளுக்குத் தயக்கம்? பெண்டாட்டி ஊருக்குப் போயிருக்கான்னு சொல்லுங்க. வந்திருவா!"



tamilmagazinesblogspot.com

அவன் சொன்னான். அப்படியும் அவள் வரவில்லை. இந்தா அந்தா என மூன்று முறை நேரம் குறித்துத் தந்துக் கடைசியில் அந்த மாயா வியை பீச்சில் சந்திப்பது என்று முடிவாகி இங்கே இப்போது தவம்.

வைஷ்ணவ்வுக்கு நம்பிக்கை விட்டுப் போயிற்று. இனியும் அவ ளுக்காக காத்திருந்து பிரயோஜன மில்லை!

பொறுமையிழந்து வீட்டுக்கு வந்தான்.

மனைவி, "அவ எதுக்கு இங்கே வரணும்? பேசாம அவ இருக்கற இடத்துக்கு நீங்களே போயிடுங்களேன்!"

"அவ அட்ரஸ்..?"

"அந்த ஏர்கூல் கம்பெனியில தான் ஒங்களுக்கு நண்பர் இருக் காரே! அவர் மூலம் அந்த நம்பரை டிரேஸ் பண்ணி..."

டிரேஸ் பண்ணினதில் அந்த மாயாவியின் இருப்பிடம் கண்டு பிடிக்கப்பட்டது. அவள் - சுமிஷா -27 முன்பு ஐடி கம்பெனி ஒன்றில் வேலை - இப்போது என்ன காரணத்தினாலோ திருச்சிக்கு ஜாகை மாற்றம்.

நண்பரும் மிக்க அன்போடு துணைக்கு வர - திருச்சிக்குப் பயணம்.

ஆண்டாள் தெரு அவள் அங்கிருந்தும் மாறாமல் இருக்க







**போன மாதம் வரை அவளுக்குப் பின்னால் நூத்துக் கணக்கில் பசங்கள்!**

வேண்டுமே என பிரார்த்தனை.

நாலு வீடு தள்ளியே வண்டியை நிறுத்தி-

அவள் ஏமாற்றிவிட்டுப் போய் விடக் கூடாதே என பதுங்கிப் பதுங்கி - நெருக்கடியான தெருவில் - சந்து, வீட்டின் நம்பரை உறுதி படுத்திக் கொண்டு - கதவைத் தட்டப்போன போது -

உள்ளேயிருந்து அதே தேன் மதுரக்குரல்! "சார்... என் அழகுதான் எனக்கு எதிரி. நான் யாருடன் பழகினாலும் என்னைக் கல்யாணத் திற்கு வற்புறுத்துகிறார்கள்.."

வைஷ்ணவ் எதுவும் புரியாமல் மலங்க மலங்க நண்பனைப் பார்க்க, அவன் இவனை விறைக்க...

ஓசையின்றி பின்பக்கம் நடந்து.. அங்கே கிணற்றடியில் அமர்ந்து செல்லில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த சுமிஷா....

அவளைப் பார்த்ததும் வைஷ்ணவ்வுக்கு வயிறு கலங்கிப் போயிற்று.. இவளா.. அது? இவளுக்காகவா இத்தனை மெனக்கெட்டோம்? அதிர்ச்சி.

அப்படியே நண்பனை அர வணைத்தபடி தெருவுக்கு வந்து-

காரில் ஏறித் திரும்பும்போது - பக்கத்து பெட்டிக்கடை நபர் அவளைப் பற்றி சொன்னது மனதில் ரீங்கரிக்க ஆரம்பித்தது.

"சார்! நிஜமாலுமே அது பேரழகிதான் சார். போன மாதம் வரை அவளுக்குப் பின்னால் நூத்துக் கணக்கில் பசங்கள்! திருமணம் நிச்சயித்து - அடுத்த மாதம் கல்யாணம். போன மாதம் லீவுக்கு ஊருக்கு வந்தப்போ - பக்கத்து பள்ளிக்கூடத்தில் தீ! அங்கே மாட்டிக்கிட்ட குழந்தைகளைக் காப்பாத்தப் போன சுமிஷா தீயில் மாட்டி முகமும், தலையும் வெந்து, கொப்பளித்து.. அதனால் திருமணமும் நின்று.. அவள் உயிர் பிழைத்ததே அதிசயம் சார். அதன்பின் அந்த மனப் பிராந்தியில் அவள் யார் யாருக்கோ போனில் இப்படித் தான்.

வைஷ்ணவ், "சுமி உன்னை யார் வேணாலும் விட்டுட்டுப் போகட்டும். ஆனால் உன் தியாக குணத்திற்காக - ஐ லவ் யூடா!" முணுமுணுக்க ஆரம்பித்தான். ●

tamilmagazinesblogspot.com
Moviezzworld.com




**விளம்பரத்தில் நடிக்கும் பிரபலங்கள் மீது கேஸ் போட முடியுமா?**

## உலகுக்கே வழிகாட்டும்

**பாரதப் பெண்மை!**

– எஸ்.குருமூர்த்தி

இந்தியப் பெண்களை தலை நிமிர வைக்கும் பெருமைமிகு தொடர்!

## இட்லி, தோசை, சப்பாத்திக்கு

## சைட்–டிஷ் வகைகள்!

32 பக்க இணைப்பு

**உங்கள் ராசிக்கான பரிகார ஸ்தலங்கள்!**

# குமுதம் சிநேகிதி

ஜனவரி 16-31

Moviezzworld.com
tamilmagazinesblogspot.com

**நம் தமிழ் மரபு விளையாட்டுகளை மறந்துவிட்டு இளைஞர்கள் கிரிக்கெட், வீடியோ கேம்ஸ் என மூழ்கிக் கிடக்க, கிராமத்துச் சிறுமிகள் சிலர் வீரதீரமாய் சிலம்பம் சுற்றுகிறார்கள்.**

அளவிலான சிலம்பப் போட்டியில் முதல் பரிசு ஜெயிச்சு கேடயம் வாங்கினது என்னால் மறக்க முடியாத பெருமை.

அடுத்ததா தூத்துக்குடியில் 2012-2013 ஆண்டில் மாநில அளவில் மூன்றாம் இடத்தையும் பிடித்தேன்." என்று கூறும் சந்தியா சேலம் மாவட்டம் எடப்பாடி



# சிலம்பரசிகள்!

"சிலம்பத்தில் என்னென்ன வகைகள் தெரியும்...?" சந்தியாவிடம் கேட்டோம்.

"போர் சிலம்பம், அலங்கார சிலம்பம், சுருள், கேடயம், கத்திச் சண்டை, கட்டைக்கால், தீப்பந்தம், பிரமிடு சிலம்பம், வேல் சிலம்பம், இதெல்லாம் கத்து வெச்சுருக்கேன். திருவண்ணாமலையில் 2011-ம் ஆண்டில் நடந்த மாநில

போடி நாயக்கனூரில் வசித்து வருகிறார். +2 முடித்துவிட்டு ஏழ்மை காரணமாக தற்போது கல்லூரி செல்ல முடியவில்லை. அடுத்த வருடம் கல்லூரியில் படிக்கலாம் என்றிருக்கிறேன் என்கிறார்.

அடுத்ததாக கார்த்திகா...

"நான் இரண்டு வருஷமாத்தான் சிலம்பம் கத்திட்டிருக்கேன்.



tamilmagazinesblogspot.com





கார்த்திகா



ஞானவேல்

தமிழகத்தில் பல பகுதிகளில் நடைபெற்ற சிலம்பப் போட்டிகளில் தனித்திறமை, குழுப்போட்டி, நேரடிப்போட்டிகளிலெல்லாம் ஜெயிச்சு மெடல், கேடயம், சர்ட்டிஃபிகேட் வாங்கியிருக்கேன்" என குதூகலிக்கிறார் கார்த்திகா. இவரும் எடப்பாடி போடிநாயக்கனூர் கிராமத்தைச் சேர்ந்தவர்தான்.

இறுதியாக VPS மணி சிலம்பாட்டக் கலைக்குழுவைச் சேர்ந்த வெள்ளாண்டி வலசு மாஸ்டர் ஞானவேலை சந்தித்துப் பேசினோம்.

"சிலம்ப ஆட்டத்தைப் பொறுத்த வரையில் யார் விளையாடுகிறார்களோ அவர்களின் நெற்றி மட்டத்திற்கு சிலம்புக் கம்பு இருக்க வேண்டும். இதுதான் விதிமுறை. சிலம்பத்தில் மூன்று வகைதான். தனித்திறமை, குழுப்போட்டி, நேரடிப்போட்டி. என்னிடம் ஆண்கள், பெண்கள் என 40 பேர் சிலம்பம் கத்துக்குறாங்க" என்கிறார்.

எது எப்படியோ தமிழ் மரபு தற்காப்புக் கலையான இந்தச் சிலம்புச் சண்டை அழிந்து விடாமல் அடுத்த தலைமுறைக்கும் சென்று சேர்ந்தால் சரிதான். ●

**- மா. மணிவண்ணன்**



tamilmagazines.blogspot.com

குமுதம்

&

Surprise FURNITURE
AN ISO 9001:2008 CERTIFIED

இணைந்து வழங்கும்

# அடுத்த சூப்பர் ஸ்டார் யார்?

## அடுத்த சூப்பர் ஸ்டார் யார்?

– இதுதான் பல ஆண்டுகளாக தமிழ்த் திரை உலகில் பற்றி எரியும் அதிமுக்கிய கேள்வி.

தமிழ் சினிமாவில் அதிக ரசிகர்களைப் பெற்றவர் ரஜினி ஒருவரே. அவரே என்றைக்கும் சூப்பர் ஸ்டார்.

சூப்பர் ஸ்டார் அந்தஸ்தை அடைய எத்தனை பாடுபடவேண்டும்? எத்தனை வெற்றிகளைத் தரவேண்டும்? அந்த வெற்றியின் பிரமாண்டம் எப்படி இருக்க வேண்டும் என்பதை சூப்பர் ஸ்டார் ரஜினியிடம் கேட்டால்தான் தெரியும்.

ஆனால், இன்றைக்கு இருக்கும் ஹீரோக்களின் படங்கள் வரும்போதெல்லாம் 'அடுத்த சூப்பர் ஸ்டார் இவர்தான்' என்கிறார்கள். தேவைக்கு அதிகமாகவே புகழ்கிறார்கள்.

இந்த நிலையில் ரஜினிக்கு அடுத்து சூப்பர் ஸ்டார் என்ற தகுதி தமிழில் யாருக்கு இருக்கிறது? என்ற கேள்வி நம்முன் எழுகிறது.

முன்பு எம்.ஜி.ஆர். – சிவாஜி, ரஜினி – கமல் என்று இயங்கினார்கள். இப்போது விஜய் – அஜித், சூர்யா – விக்ரம், சிம்பு – தனுஷ் என இன்னும் பலரும் இந்தப் பட்டியலில் இருக்கிறார்கள்.

இவர்களில் அதிகமாக ரசிகர்கள் யாருக்கு இருக்கிறார்கள்? யாருக்கு ரசிகர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் அதிகம்? என்பதைப் பொறுத்தே அவரை அடுத்த சூப்பர் ஸ்டார் என்று அழைக்க முடியும்.

இன்றைய ரசிகர் மத்தியில் அஜித் – விஜய் என்ற இரு தரப்புப் போட்டி 'தல – தளபதி'களுக்கிடையேயான போராக மாறி உள்ளது. சமூக வலைதளங்களிலும் அதிகம் ஆக்கிரமித்திருப்பது இந்தப் போர்தான்.

Travel Partner - cab4u



tamilmagazines.blogspot.com






tamilmagazines.blogspot.com



## அடுத்த சூப்பர் ஸ்டார் பற்றிய சிறப்புக் கண்ணோட்டம்

அடுத்த இதழில்!

எனவே, முன்னணி நடிகர்களிடையே யார் அந்தப் பட்டத்தை கைப்பற்றுவது என்ற போர் தொடங்கிவிட்டது. அதற்கான இலைமறைவு வேலைகளும் படு தீவிரமாக நடந்து வருகின்றன.

ஆனாலும் அதைத் தீர்மானிக்க வேண்டியது ரசிகர்களே. அடுத்த சூப்பர் ஸ்டாரைத் தேர்ந்தெடுக்க, ரசிகர்கள் மத்தியில் நடத்தப்போகும் ஒரு மெகா தேர்தல் இது. ஓட்டுப் போட நீங்களும் தயாராகுங்கள்!

### அனுப்ப வேண்டிய முகவரி

**அடுத்த சூப்பர் ஸ்டார் தேர்தல்**

**குமுதம்**

**த.பெ.எண்: 2592, சென்னை – 31.**

### தேர்தல் விதிமுறைகள்

1. இது முழுக்க ரசிகர்களுக்காக நடத்தப்படும் தேர்தல்.
2. 10 வயது நிரம்பிய யார் வேண்டுமானாலும் ஓட்டுப் போடலாம்.
3. உங்களின் ஊருக்கே வந்து உங்களின் ஓட்டுக்களைச் சேகரிக்க உள்ளோம்.
4. மற்றவர்கள் தபாலில் ஓட்டுப் போடலாம்.
5. மாவட்ட வாரியாக ஓட்டுக்கள் எண்ணப்படும்.
6. ஒவ்வொரு வாரமும் ஓட்டு நிலவரம் குமுதத்தில் வெளியிடப்படும்.
7. ஓட்டுக்களின் எண்ணிக்கை அடிப்படையில் 'அடுத்த சூப்பர் ஸ்டார் யார்?' என்பது அறிவிக்கப்படும்.
8. வாக்குச் சீட்டை நகல் எடுத்து அனுப்பக்கூடாது.
9. ஒருவர் ஒரு ஓட்டு மட்டுமே போடவேண்டும்.

தபாலில் ஓட்டுப்போட விரும்புபவர்கள் எதிரில் உள்ள வாக்குச் சீட்டில் 'சூப்பர் ஸ்டாராக' நீங்கள் தேர்வு செய்யும் நடிகருக்கு வாக்களித்து, அதாவது படத்திற்கு நேராக டிக் (✓) செய்து, அந்தப் பக்கத்தைக் கிழித்து, கீழே உள்ள முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



tamilmagazinesblogspot.com

குமுதம் & Surprise FURNITURE

AN ISO 9001:2008 CERTIFIED

இணைந்து வழங்கும்

# அடுத்த சூப்பர் ஸ்டார் தேர்தல் 2014




அஜித்


சிம்பு


ஆர்யா


சூர்யா


தனுஷ்


விஜய்


ஜீவா


விக்ரம்


கார்த்தி


விஷால்

பெயர்: .............................................................. வயது: ........................

முகவரி: ...............................................................................................

...............................................................................................

Travel Partner - cab4u



Moviezzworld.com
tamilmagazines.blogspot.com



# தம்பிரான் காளை!

திண்டுக்கல் மாவட்டம் புளியம்பட்டி அருகே உள்ள பாறைப்பட்டி கிராமத்தில் 85 ஆண்டுகளுக்குப்பின் 'வீரகெண்டி தாத்தையா சாமி மாலைக் கோவில்' விழா நடைபெற்றது.

ஊர் எல்லையிலிருந்து மாலை மரியாதையுடன் உருமி தேவராட்டத்துடன் வெளியூர்க் காளைகளை அழைத்து வந்து மாலைக்கோவில் வளாகத்தில் தங்க வைத்தனர்.

சாமி கும்பிடு விழாவில் கலந்து கொள்ளும் ஆணும் பெண்ணும் மேல்சட்டை அணியக் கூடாது. விழா ஆரம்பம் முதல் முடியும் வரை யாரும் மேல் சட்டை அணியவில்லை.

விழாவுக்கு நாள் குறித்து கெடு பிடித்த நாளிலிருந்து யாரும் காடு கரைக்குக்கூட செருப்பு மிதிக்கக் கூடாது. கட்டிலில் படுக்கக் கூடாது. கடையில் காப்பித் தண்ணி சாப்பிடக் கூடாது.

பெண்கள் பெரம்புக் கூடையில், பூ, மஞ்சள், பழம், எலுமிச்சை, காதோலை, கருகமணி வைத்து வெள்ளைத் துணி வைத்துக் கட்டி கோவிலுக்கு சுமந்து வந்தார்கள். கூடை சுமக்கும் பெண்கள் ஜாக்

Moviezworld.com
kumudam.blogspot.com





கெட் அணியாமல் பழமையான ஐதிகத்தோடு வந்தனர்.

மாலைக் கோயிலில் சாமி கும்பிடு விழாவுக்காக வரவழைக்கப்பட்ட மாடுகளை ஒன்றுகூட்டி எருதோட்டத்திற்குத் தயாராக்கினர். ‘கொத்து கொம்பு’ என்னும் இடத் திற்கு மந்தையிலிருந்து மாடு களை விரட்டுகிறார்கள். இதில் முதலில் போய் அங்கே ‘பழம்’ எடுக்கும் மாடுதான் எருதோட்ட தம்பிரான் காளை. பழம் எடுத்த காளையை மஞ் சன்பொடி தூவியும், மாலை, எலுமிச்சம் மாலையிட்டு, அழைத்து வந்தனர்.



அனைவரும் அதன் காலில் விழுந்து வணங்கி தொட்டுக் கும்பிட்டனர்.

மாடுகளுக்கு கடவுளுக்கு நிகராக மதிப்புதரும் இத்திருவிழா இன்னும் தொடர்வது சிறப்பு மட்டுமல்ல, வியப்பும்கூட!●

**- அரண்மனை சுப்பு**

புதிய பகுதி

# மண்மேல நமக்கு அக்கறை இருக்கா?



**புத்தாண்டு அன்று காலை வைகோ - பத்திரிகையாளர் சந்திப்பு. வழக்கம்போல கேஷுவலாகச் சந்தித்தவர் "சிறைக்குப் போகாத ஆண்டைத்தவிர ஒவ்வொரு புத்தாண்டு தினத்தன்றும் பத்திரிகையாளர்களைச் சந்தித்து வருகிறேன்" என்று புன்சிரிப்புடன் பேச்சை ஆரம்பித்தார்.**

ஈழப் பிரச்னையில் துவங்கி ஸ்டெர்லைட், கூடங்குளம் அணுஉலைப் பிரச்னைகளை எல்லாம் தொட்டுவிட்டு பாரதிய ஜனதா கூட்டணி குறித்துச் சொன்னார். "ஈழத்தமிழர் விஷயத்தில் துரோகம் இழைத்த காங்கிரஸ் மத்தியில் எந்தவிதத்திலும் திரும்பவும் ஆட்சிக்கு வந்து விடக்கூடாது என்பதற்காகத் தான் பா.ஜ.கவுடன் பூர்வாங்கப் பேச்சைத் துவக்கியிருக்கிறோம். இனி அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தை துவங்கும்" என்றவரிடம் ஒரு பத்திரிகையாளர் கேட்டார்.

"பா.ஜ.கவுடன் நீங்கள் கூட்டணி பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால் ஈழப்பிரச்னையில் அதற்கு எதிராகக் கடுமையாகப் பேசும் சுப்பிரமணியன்




tamilmagazines.blogspot.com



# ஊர் சுற்றி!



சுவாமிக்கு பா.ஜ.க.வில் முக்கியப் பொறுப்பு கொடுக்க இருப்பதாகச் சொல்லப்படுகிறதே?”

உடனே சூடாக வந்தது பதில் வைகோவிடமிருந்து.

“பா.ஜ.க. தலைமையிடம் தமிழர்கள் பிரச்னை குறித்த தெளிவான கருத்து இருக்கிறது. மாநில நிர்வாகிகளுக்கும் இருக்கிறது. அதனால் அதற்கு மேல் அதைப்பற்றிப் பேசக்கூடாது.”

**செ**ன்னை முழுக்க மெல்லிய பனி எங்கும் பரவியிருக்கும்



tamilmagazinesblogspot.com
moviezzworld.com

நிலையில் ஒருபக்கம் சங்கீத சீஸன். மறுபக்கம் புத்தகத் திருவிழாவுக்கு முன்னோடியாக புத்தக வெளியீட்டு விழா சீஸன்.

டிசம்பர் 29 அன்று மாலை திநகரில் ஒரு சபாவில் இசை விழா மலர் வெளியீட்டு விழா. வழக்கம்போல ஆஜராகும் நல்லி குப்புசாமி செட்டியார், வேதாந்தம் போன்றவர்கள் கலந்துகொண்டு வெளியிட்ட இசைவிழா மலரில் அந்தக்கால இசை மேதைகளின் கறுப்பு வெள்ளைப் படங்கள் ஒரு ஆச்சர்யம்!

தினமணி ஆசிரியரான வைத்தியநாதன் பேசும்போது சொன்னார்... "நாளைய தலைமுறை இன்றைய இசையில் என்ன இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளத்தான் இந்த மலர். மணி ஐயர், ஜி.என்.பி. என்று பல மேதைகளின் வரலாற்றையும், புகைப்படங்களையும் ஆவணப்படுத்த வேண்டும்!"

ஒரு கச்சேரிக்கும் இன்னொரு கச்சேரிக்கும் இடையில் ஒரு ராகம் நழுவியதைப் போல இசை விழா மலர் வெளியிடப்பட்டது பொருத்தம்தான்!

**டி**சம்பர் 29 அன்று பழ.நெடுமாறனின் சகோதரரும், பொறியாளருமான மறைந்த பழ.கோமதிநாயகம் எழுதிய "நீரின்றி அமையாது நிலவளம்" நூல் அவருடைய நினைவுநாள் அன்று தஞ்சையில் வெளியிடப்பட்டது. உலகத்தமிழர் பேரமைப்பின் தலைவரான பழ.நெடுமாறன் கலந்துகொண்ட நிகழ்ச்சியின் ஹைலைட் இயற்கை விஞ்ஞானியான நம்மாழ்வார் கடைசியாகக் கலந்துகொண்ட விழா இது என்பதுதான்.

**ம**ணப்பாறையை அடுத்துள்ள அவருடைய பண்ணையில் சில மாதங்களுக்கு முன்பு நம்மாழ்வாரைச் சந்தித்தபோது கம்பங்கூழ் கொடுத்து உபசரித்து

**எப்போ இது நமக்கு உறைக்கும்!**

இயல்பான வேகத்துடன் அவர் சொன்னது இன்னும் நினைவில் தங்கியிருக்கிறது.

"சுற்றியிருக்கிற மண் மேல நமக்கு அக்கறை இருக்கா? இதோ இந்த உடம்பு மேலேதான் அக்கறை இருக்கா? இருந்தா எல்லாத்திலேயும் ரசாயனத்தைக்



tamilmagazines.blogspot.com

கலந்து குட்டிச்சுவராக்கி, அது பத்தின சுரணை உணர்வு கூட இல்லாம இருப்போமா? மண்ணை மட்டுமில்லாம, நம்ம உடம்பையும் சக்கை மாதிரி ஆக்கி, கண்ட கண்ட வியாதிகளை வரவழைச்சுக்கிட்டுக் கிடப்போமா? எப்போ இது நமக்கு உறைக்கும்?"

நம்ம வீட்டு முதியவரைப் போன்ற கரிசனத்துடனும், மக்களுக்கான இயல்பான மொழியுடனும் ஏதோ ஒருவிதத்தில் தொடர்ந்து நம்முடன் உரையாடிக் கொண்டிருந்த அவருடைய குரல் தான் விரும்பிய இயற்கையுடன் கலந்து மௌனமாகி விட்டது!




எழுபது ஆண்டுகளுக்கு மேல் தமிழிசைக்காகப் பாடுபட்டுவரும் தமிழிசைச் சங்கத்தில், வழக்கம்போல கச்சேரிகள் இந்த ஆண்டும். குறிப்பிட்ட சில பிரபல பாடகர்களின் கச்சேரிகளைத் தவிர மற்றவர்களின் கச்சேரிகளுக்கு வந்தவர்கள் குறைவு. முக்கியமாக சீர்காழி சிவ சிதம்பரத்தின் கச்சேரிக்கு அனுமதி இலவசம் என்றாலும் வந்திருந்த கூட்டம் குறைவு.

அதே மாதிரி தமிழ்வழிக் கல்வியின் முக்கியத்துவத்தை மென்மையாகச் சொன்ன பாலுமகேந்திரா நீண்ட இடைவெளிக்குப் பிறகு இயக்கி நடித்த 'தலைமுறைகள்' படத்தைப் பார்க்கப் போனபோது அறுநூறு இருக்கைகள் வரை இருந்த தியேட்டரில் மொத்தம் இருந்தவர்களே 12 பேர் தான்!

மெல்லத் தமிழுக்கும் நமக்குமான இடைவெளி கூடிவிட்டதா?

**படங்கள் : ம. செந்தில்நாதன், ஆர். சண்முகம்**

tamilmagazines.blogspot.com



# என் காதலை அந்த நடிகை ஏற்கவில்லை!





"இந்த பத்து வருஷத்துல நடிகனா எனக்கு 'பாண்டியநாடு' தான் அதிக நம்பிக்கை கொடுத்துச்சு. இனி விஷால் படத்துல கதைதான் பிரதானமா இருக்கும். சினிமாவுக்கு வந்து பத்து வருஷம் ஆயிடுச்சு. நான் இன்னமும் நிறைய விஷயங்கள் கத்துகிட்டே தான் இருக்கேன்!" உற்சாகத்துடன் விஷால் பேச பேட்டி துவங்கியது.

**ஃப்ரெண்ட்ஸ்கூட மட்டும்தான் படம் பண்ணுவீங்களா?**

"திரு தமிழ் சினிமாவோட பெஸ்ட் கிரியேட்டர். திருவோட உழைப்புக்கான உண்மையான பலனை 'நான் சிகப்பு மனிதன்' தான் கொடுக்கும். திரு என்னோட நண்பன்கறதுக்காக இந்தப் படம் பண்ணலை. நண்பனுக்காக காரோ, வீடோ வாங்கிக் கொடுக்கலாம். ஆனா படம்லாம் பண்ணிக்கொடுக்க முடியாது. நட்புக்காக கேரியரை விட்டுக்கொடுக்க முடியாது. ஏன் திரும்பவும்



tamilmagazinesblogspot.com

திரு கூட பண்றேன்கறது படம் ரிலீஸுக்குப் பிறகு தான் எல்லோருக்கும் புரியும்".

**லட்சுமி மேனன் கூட கிசுகிசுக்கள் கிளம்புதே?**

"அச்சச்சோ.. அப்படிலாம் ஒண்ணும் இல்லைங்க. இந்த கேரக்டருக்கு அவங்கதான் பொருத்தமா இருந்தாங்க. படமே அந்தப் பொண்ணை நம்பித் தான் போகுது. 'பாண்டியநாடு' கொடுத்த செண்டிமென்ட்னு கூட சொல்லலாம். மத்தபடி காதல், கீதல்லாம் இல்லைங்க.."



**ஏதோ ஒரு ஹீரோயினை லவ் பண்றதா சொன்னீங்களே.. அது என்ன ஆச்சு?**

"அது அப்பவே முடிஞ்சு போச்சு. எப்ப லவ்வை சொன்னேனோ அப்பவே அது ஃபெயிலியர் ஆச்சு. ப்ரபோஸ் பண்ணப்பவே அக்செப்ட் ஆகலை. என்னை ரிஜெக்ட் பண்ணிட்டாங்கனு சொல்ல முடியாது. அது நடக்க சாத்தியமே இல்லைங்கறது தான் காரணம். அந்த ஹீரோயின் யாருங்கறதுலாம் இப்ப வேணாம். அது ரகசியமாவே இருக்கட்டும்."

**ஆம் ஆத்மி கட்சில சேரப்போறதா நியூஸ் வந்துச்சே?**

(சிரிக்கிறார்) "எனக்கே நியூஸ் படிச்சு தான் இந்த விஷயம் தெரியும். ஒரு குடிமகனா சொல்லணும்னா ஆம் ஆத்மி ஒரு பெரிய சமூக அரசியல் மாற்றத்தை உருவாக்கியிருக்கு. இத்தனை நாளா இளைஞர்கள் அரசியலுக்கு வரணும்னு சொல்லிகிட்டேதான் இருந்தோம். ஆனா முதல்ல 'இளைஞர்கள் ஓட்டுப் போடணும். அவர்கள் நல்லவர்களை தேர்ந்தெடுக்கணும்.' இந்த மாற்றத்தையே ஆம் ஆத்மி தான் தந்துருக்கு. ஆம் ஆத்மி ஜெயிச்சது ரொம்ப நல்ல விஷயம். நான் நடிகன் ஆவேன்னே நினைச்சு கூட பார்க்கலை. டைரக்டர் ஆகணும்னு வந்தேன், ஹீரோ



tamilmagazinesblogspot.com



ஆனேன். தயாரிப்பாளர் ஆனதும் அப்படித்தான். ஒரு கோபத்துல தான் விஷால் ஃபிலிம் ஃபேக்டரி ஆரம்பிச்சேன். அரசியலுக்கு வரணும்னு இதுவரைக்கும் எந்த பிளானும் இல்லை. ஆனா நான் அரசியலுக்கு வர்றதில் எந்த தப்பும் இல்லையே...?"

**வரலட்சுமி, ஐஸ்வர்யா, இப்ப ஸ்ருதி! வாரிசு நடிகைகள்லாம் வரிசையா உங்க ஹீரோயின் ஆகுறாங்க?**

"இதையெல்லாமா கனெக்ட் பண்ணுவீங்க? ஹரி சார் படத்துல ஸ்ருதிதான் ஹீரோயின். ஆனா நான் இந்த ஹீரோயின் விஷயத்துலலாம் தலையிடறதே இல்லைங்க. எல்லாம் டைரக்டர்ஸோட முடிவு. என் வாழ்நாள்ல நான் சிபாரிசு பண்ணினது விக்ராந்துக்கு மட்டும் தான். அதுவும் அவனையே ஸ்கிரீன் டெஸ்ட் வெச்சு தான் செலக்ட் பண்ணினாங்க."

**என்ன ஆச்சு நடிகர் சங்க விவகாரம்?**

"இந்தக் கேள்வியெல்லாம் கேக்கணும்னு பிளான் பண்ணி கேக்கலை. இதுலாம் கேட்காம விட்டா தப்புனு தோணிச்சு. கேட்டேன். அந்தக் கேள்விகளுக்கே இன்னும் பதில் மட்டும்தான் வந்துருக்கு. தீர்வுகள் வரலை. நடிகர் சங்கம் இன்னும் சரியா செயல்படலைங்கறது வருத்தமாதான் இருக்கு."

**விஜயகாந்த் ஆலோசனைப்படி தான் நீங்க செயல்படறதா சொல்றாங்களே?**

"நான் 'மதகஜராஜா' பிரச்னையில கொஞ்சம் துவண்டு போயிருந்தப்ப அண்ணனே போன் பண்ணி ஆறுதல் சொன்னாங்க. அப்ப அவங்க சொன்ன சில வார்த்தைகள் எனக்கு பெரிய ஊக்கத்தைக் கொடுத்துச்சு. முடங்கிக் கிடக்கும் போது சில டானிக் நம்மளை உடனே எழுந்திருச்சுப் போய் வேலை பார்க்க வைக்கும்ல, அது மாதிரியான டானிக் அண்ணனோட வார்த்தைகள். என் மேல அவர் வெச்சிருக்கற அக்கறைக்கு நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கேன்."●

- க. ராஜீவ் காந்தி



tamilmagazinesblogspot.com







விளையாட்டுத் துறையில் சென்னையை உலக வரைபடத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டுவது இரண்டு விஷயங்கள்தான். ஒன்று, உலக கிரிக்கெட்டை இயக்கும் அதிகார மையமாக சென்னை இருப்பது; இரண்டாவது, வருடம் தவறாமல் சென்னையில் நடக்கும் டென்னிஸ் திருவிழா!

டென்னிஸைப் பொறுத்தவரை



# சென்னை ஓபன் 2014

**ஏமாற்றிய சீனியர்கள் எகிறி அடித்த இளைய தலைமுறை!**

ஆசியாவின் மிகப்பெரிய போட்டியாகத் திகழும் 'ஏர் செல் சென்னை ஓபன் 2014' கடுமையான குளிரிலும் சூடாக அரங்கேறியது. ஆரம்பித்த வேகத்தில் சென்னை எக்ஸ்பிரஸ் போல் இறுதியை நெருங்கிவிட்டது சென்னை ஓபன் 2014. ஸ்விட்சர்லாந்தின் வாவ்ரிங்கா, 300 போட்டிகளில் பங்கேற்ற சாதனையை சென்னையில் அரங்கேற்றினார்.

ஒற்றையர், இரட்டையர் இரண்டிலுமே இந்தியர்கள்






யாரும் இறுதிப்போட்டியில் இல்லாத நிலையில் முடிவுகளைக் கடந்து இந்த சென்னை ஓபன் பத்தொன்பதாவது எடிஷனில் பல அதிரடிகள்... சில எதிர்பாரத பின்னடைவுகள்...

இந்திய வீரர்களில் இளைய தலை முறையைச் சேர்ந்த யூகி பாம்ப்ரி தன்னைவிட உயர்நிலை வீரர்கள் பலரை வென்று கால் இறுதிவரை வந்து கலக்கியது சூப்பர்ப்! இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - ஸ்ரீராம் பாலாஜி ஜோடி கால் இறுதிவரை முன்னேறியதும் பாராட்டுக்குரியது. வைல்ட்கார்ட் பிரிவில் ஒற்றையர் ஆட்டத்தில் ஏக தடபுடலாக என்ட்ரியான சோம்தேவ்வர்மன் சோபிக்காதது, போபன்னா - குரோஷி, பயஸ் - ஃபாக்னினி என எதிர்பார்த்த எந்தக் கூட்டணியும் வெற்றிபெறாதது ஏமாற்றம்!



“பதினெட்டு ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில் இன்றும் கால் இறுதி நிலையிலேயே இந்திய வீரர்களின் பங்களிப்பு இருப்பது கொஞ்சம் கவலையளிப்பதாகத்தான் இருக்கிறது” என இந்திய டென்னிஸ் பிளேயர்கள் அஸோசியேஷன் செயலாளர் கார்த்தி சிதம்பரம் தன் கவலையை வெளிப்படுத்தியதோடு, இதற்கு ஒரு தீர்வாக ITPA வின் எதிர்காலத் திட்டங்களை வெளியிட்டது டென்னிஸ் ரசிகர்களுக்கு ஒரு சின்ன ஆறுதல்...









முதல் முறையாக மாநகராட்சிப் பள்ளி மாணவ - மாணவியர்களுக்கு இலவச அனுமதி வழங்கி டென்னிஸின் டெம்போவை அவர்களிடமும் உருவாக்கியது பாராட்டுக்குரியது. இது தவிர கொஞ்சம் கிக்காக வழக்கம்போல நட்சத்திர ஓட்டல் பார்ட்டியில் இந்திய உணவுகளையும், சூழலையும் தங்கள் காதலிகளுடன் வெளிநாட்டு வீரர்கள் ரகளையாக ஆடிப்பாடி அனுபவித்தது செம ஹாட்!

உலகளவில் அடுத்தடுத்து நடக்க இருக்கும் கிராண்ட் ஸ்லாம் போட்டிகளுக்கு ஒரு நல்ல துவக்கமாக சென்னை ஓபன் பதினெட்டு வருடங்களாக இருந்து வருவதுபோல் இம்முறையும் தடபுடலாக அரங்கேறியது சென்னைக்குக் கிடைத்த வரம்! ●

- இளையரவி

படங்கள்: ஆர்.சண்முகம், ம.செந்தில்நாதன்



tamilmagazine.blogspot.com

'நடப்பது நடக்கட்டும்னு இனியும் சும்மா இருக்க முடியாது!' - இளைஞர்களின் இந்த மனநிலை இந்திய அரசியலில் மட்டுமல்ல இப்பொழுது இலக்கியத்திலும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கி விட்டது.

அதிகாலைப் பனியில் காலை ஆறுமணிக்கு மெரீனாவில் நம்மால் அந்த வெப்பத்தை உணர முடிந்தது... 'படிப்பதை பரவலாக்க, இலக்கியத்துக்குக் குரல் கொடுக்க இத்தனை பெண்களா?' என்று எண்ணும் அளவிற்கு அணிவகுத்து நின்றனர் கல்லூரிப் பெண்கள்.

'மெகா வால்கத்தான்' என கையில் பேனர்கள், குரலில் உற்சாகம், கம்பீர நடை என அவர்கள்



# எழுத்து நடை!

tamilmagazines

இந்தப் பயணத்தை நம்பிக்கைப் பயணமாக்கியது நமக்கே மெய்சிலிர்த்தது...

எல்லாம் எதற்காக... சென்னை இலக்கியத் திருவிழா 2014-கிற்காகத் தான்.

வெகுஜன மக்களிடையே தரமான நவீன இலக்கியத்துக்கான அறிமுகமும் விழிப்புணர்வும் மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. இதைக் கருத்தில் கொண்டு, வருடந்தோறும் ஜெய்ப்பூரில் இலக்கிய விழா நடக்கிறது. உலகளவிலான எழுத்தாளர்களை இந்தியாவிற்கு அழைத்து அறிமுகப் படுத்துவதும், இந்தியளவிலான இலக்கிய எழுத்தாளர்களின் கருத்துகளைப் பேச களம் அமைத்துக் கொடுப்பதுமாக அந்த நிகழ்வுகள் நடக்கின்றன. அதில் சர்ச்சைகளுக்கு பஞ்சமிருக்காது.

சர்ச்சைகளையும் தாண்டி தரமான இலக்கியம் வெகுஜன மக்களிடம் போய்ச் சேருவதற்கான வேலைகளை இதுபோன்ற இலக்கிய விழாக்கள் முன்னெடுத்து நடத்துகின்றன. இது மிகவும்

**சென்னை இலக்கியத் திருவிழா 2014**



பாராட்டப்பட வேண்டிய செயல்.

இதுபோல வடநாடுகளில் நடக்கும் இலக்கியம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளுக்கு தமிழ்மொழியின் எழுத்தாளர்களை அழைப்பதில்லை என்றும் தமிழ்மொழிக்கு முக்கியத் துவம் தருவதில்லை என்றும் பெருவாரியான விமர்சனங்கள் எழுந்து கொண்டேயிருக்கின்றன.

இதுபோன்ற சூழலில் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத் திற்கும் முக்கியத்துவம் தரும் நோக்கில் 'சென்னை லிட்ரரி ஃபெஸ்டிவல் 2014' என்ற இலக்கியக் கலைவிழா நடைபெற உள்ளது. தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம், சென்னை லிட்ரரி அசோஸியேஷன் ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த விழாவை நடத்த இருக்கின்றன. பிரின்ட் பார்ட்னராக குமுதம் குழுமம் ஆதரவு கொடுத்திருக்கிறது.

> **9 ஜனவரி முதல் 11 வரை மூன்று நாட்கள் நடைபெற உள்ளது.**

இந்த விழா குறித்தும், தரமான இலக்கியங்களை பொது வெளியில் அறிமுகப்படுத்த வேண்டியும், புத்தக வாசிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சென்னை மெரீனா கடற்கரையில் 'நடைப்பயணம்' ஜனவரி-4 சனிக்கிழமையன்று நடைபெற்றது. சென்னை மற்றும் புறநகரங்களில் உள்ள கல்லூரி மாணவ-மாணவியர் இதில் பங்கேற்று புத்தக வாசிப்பின் அவசி யத்தை வலியுறுத்தும் வகையில் 'நடைப்பயணம்' நிகழ்த்தினர்.

இந்த இலக்கிய விழா ஜனவரி



tamilmagazinesblogspot.com




9 முதல் 11-ம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெற உள்ளது.

இதில், நாடக இலக்கியம், விமர்சன இலக்கியம், கதை சொல்லும் பாங்கு, வசனம் எழுதும் முறை, சமூக இணையதளம், பழங்குடியினரின் இலக்கியம், செம்மொழி இலக்கியம், வீதி நாடகம், இணைவழி உயர்கல்வி, வேலை வாய்ப்புத் திறன், எனப் பலதரப்பட்ட தலைப்புகளில் பயிலரங்குகள் நடத்தப்படும்.

இந்த நிகழ்ச்சிகள் காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி, இராணி மேரி மகளிர் கல்லூரி, லயோலா கல்லூரி, விவேகானந்தா கல்லூரி, எத்திராஜ் மகளிர் கல்லூரி, டாக்டர் எம்.ஜி.ஆர். - ஜானகி கலை அறிவியல் மகளிர் கல்லூரி, பாரதி மகளிர் கல்லூரி, ஜேபி.ஏ.எஸ். (எஸ்.ஐ.இ.டி) மகளிர் கல்லூரி, எஸ்.டி.என்.பி கல்லூரி ஆகிய கல்லூரி வளாகங்களில் நடத்தப்படும். நிறைவு விழா நிகழ்ச்சி, ஜனவரி 11-ம் தேதி அன்று எத்திராஜ் மகளிர் கல்லூரி கலையரங்கில் நடைபெறும்.

இந்த விழாவில் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன், இந்த ஆண்டு சாகித்திய அகாடமி விருது பெற்ற ஜோ டி குரூஸ், கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் போன்றோர் உரையாற்ற இருக்கிறார்கள்.

இதில் இன்னும் பல்வேறுபட்ட இலக்கிய எழுத்து ஆளுமைகளை அழைத்து வந்து ஒரு விரிவான கருத்துத் தளத்தில் ஒருங்கிணைத் திருக்கலாம்.

“எதிர்வரும் ஆண்டு களில் இன்னும் விரிவாகவும் பெரியளவிலும் விழாவை நடத்த இருக்கிறோம்” என்று விழாவின் அமைப்பாளர் ஒளிவண்ணன் தெரிவித்தார். ●

-மைத்ரேயி, படங்கள்: கஸ்தூரி



tamilmagazines.blogspot.com



ASK மோடி?

Moviezworld.com
tamilmagazines.blogspot.com



# மோடி பதில்கள்!

## எல்லோருக்கும் சமமான நியாயம் கிடைக்க வேண்டும்!

**? இன்று மதச்சார்பின்மைக்கு பலர் விளக்கம் அளிக்கிறார்கள். இன்றைய அரசியல் சூழ்நிலையில் தாங்கள் மதச்சார்பின்மைக்கு என்ன அர்த்தம் கூற விரும்புகிறீர்கள்?**

எம். சம்பத், கரூர்.

**மோடி:** மதச்சார் பின்மையைப் பற்றி நமது அகராதியிலும், மற்றும் இந்தியாவின் பல்வேறு பாகங்களில் எவ்வாறு உபயோகிக்கிறார்கள் என்று பார்த்தால் பல வித்தியாசங்கள் புலப்படும். அரசியல்வாதிகள் பலருக்கு மதச்சார்பற்ற அரசியல் என்றால் வாக்கு வங்கி அரசியல்தான் கண்ணுக்குப் புலப்படும். ஒரு குறிப்பிட்ட சாதி, மத வர்க்கத்தினரை மட்டும் திருப்திப்படுத்துவது

Moviezzworld.com
tamilmagazinesblogspot.com



என்பது பல அரசியல் கட்சிகளுக்கு பிரதானமாக இருக்கிறது. ஒருதலைப் பட்ச அரசியலில் ஈடுபடும் பழக்கத்தை நமது அரசியல் கட்சிகள் பாரம்பரியமாகக் கொண்டிருக்கின்றன.

என்னைப் பொறுத்தவரையில் மதச்சார்பின்மைக்கு விளக்கம் கூறவேண்டுமானால் நமது தேசம் இந்தியா என்றுதான் கூறுவேன்.

மதச்சார்பின்மை எல்லா மதங்களுக்கும் மதநல்லிணக்கத்துக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டுமே தவிர, அதைப் பிரித்து ஆளும் சூழ்ச்சியை கையாளக் கூடாது. நமது முன்னேற்றமும், நிர்வாகமும் ஊன்றுகோலாக இருக்கும் பட்சத்தில், நாம் எதற்காக நமது மக்களை, பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் எனப் பிரிக்க வேண்டும்? எல்லா மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு நாம் ஏன் பிரச்னைகளை அணுகக் கூடாது? இதைத்தான் நாங்கள் குஜராத்தில் செய்தோம். அங்கு நாங்கள், ஒரு குறிப்பிட்ட பகுதியினரை மட்டும் மனதில் கொள்ளாமல், மொத்தமுள்ள ஆறு கோடி குஜராத்தி மக்களின் நலனுக்காகப் பேசி முடிவெடுக்கிறோம்.

எங்கள் அரசாங்கம் எந்நேரமும் தங்கு தடையின்றி மின்சார வசதி செய்து தருகிறது. எடுத்தோம், கவிழ்த்தோம் என்று எதையும் செய்வதில்லை. எங்கள் அணைக்கட்டு தண்ணீர் கிராமப்புறங்களில் அனைத்து இடங்களுக்கும் சென்று அடைய வசதி படைத்திருக்கிறோம். குழந்தைகளை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு நாங்கள் அவர்களின் ஜாதி மதங்களை கருவியாகப் பயன்படுத்துவதில்லை.

எங்கள் 'க்ரிஷிரத' சலுகைத் திட்டம் எல்லா விவசாயிகளுக்கும் நல்ல பலனை அளிக்கிறது. நான் முன்பே கூறியபடி, நாட்டின் முன்னேற்றத்துக்கான ஒரே வழி, வாக்கு வங்கி அரசியலை ஓரங்கட்டி, மற்றும் ஒரு சில ஜாதி, மத அமைப்புகளை மட்டுமே குஷிப்படுத்துவதை விடுத்து, எல்லா மக்களின் பொது நன்மைக்காகவும்

tamilnaigazhimes.blogspot.com



**நான் அரசியலை ஒரு துறையாக நினைத்து தேர்ந்தெடுக்கவில்லை!**

பாடுபடுவதுதான் சாலச்சிறந்தது. நாங்கள் எப்பொழுதும், எல்லோர் கரமும் கோத்து, அவர்களுடன் உறுதுணையாக இருந்து, தேசத்தின் தலையாய வளர்ச்சிக்காகப் பாடுபடுவோம்.

நான் திரும்பவும் கூறுகிறேன். என்னைப் பொறுத்தவரை உண்மையான ஜனநாயகம் மற்றும் மதச்சார்பின்மை என்பதற்கு அடையாளம் 'சர்வபந்த்சம்பவ். இதற்கு அர்த்தம் "எல்லோருக்கும் சமமான நியாயம் கிடைக்க வேண்டும். பாரபட்சம் மற்றும் தனிப்பட்ட முறையில் சலுகை என்ற பேச்சுக்கே இடமில்லை."

**? தாங்கள் அரசியலுக்கு வந்திருக்காவிட்டால் வேறு எந்தத் துறையை தேர்ந்தெடுத்திருப்பீர்கள்?**

எம். தனகோபாலன்,
திருவாரூர்.

**மோடி:** முதலில் நான் கூற விரும்புவது , அரசியலை ஒரு துறையாக நினைத்து தேர்ந்தெடுக்கவில்லை. சிறு வயதிலிருந்தே எனக்கு மக்களின் நலனுக்காகவும், நாட்டின் முன்னேற்றத்துக்காகவும் உழைக்க வேண்டும் என மிகுந்த ஆவலாக இருந்தது.

நான் அப்பொழுது எந்த அரசியல் லாபமும் கருதாமல் பிரச்சாரகராக வேலை பார்த்தேன். தவிர்க்கப்பட முடியாத சில தனிப்பட்ட காரணங்களினால், நான் அரசியலில் வெகு தாமதமாகத்தான் நுழைந்தேன். மக்கள் சமுதாயத்துக்கு பாடுபடுவதற்காக நான் ஏதாவது ஒரு வழியை அமைத்துக் கொண்டிருப்பேன். ஆனால் நிச்சயமாக வியாபாரரீதியில் பணம் பண்ணும் வழியை தேர்ந்தெடுத்திருக்கமாட்டேன்.

( பதில்கள் தொடரும்...)

படங்கள்: ஆர். சண்முகம்

tamilmagazinesblogspot.com
Moviezworld.com




Moviezzworld.com
tamilmagazinee.blogspot.com

# குமுதம் பு(து)த்தக வெளியீடுகள்




## புத்தகங்கள் வேண்டுவோர்

### தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

குமுதம்

குமுதம் பப்ளிகேஷன்ஸ் பி.லிட்

306, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600 010.

044-26426124; 044-45919161; 9840909525

Email: circulation@kumudam.com

tamilmagazinesblogspot.com

Moviezzworld.com

குமுதம்
மதி : 68
மலர் : 17
15.1.2014



# பொங்கி எழுங்கள்!

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் இருந்து ஒரு நம்பிக்கை ஒளி தெரிகிறது. மது அரக்கனுக்கு எதிரான போராட்டத்தில் 10 வயதேயான சிறுமி கலந்து கொண்டுள்ளார். அதுவும் தன்னந்தனியாக.

மதுரை இஸ்மாயில்புரத்தைச் சேர்ந்த ஜோதிமணிக்கு பொம்மைகள் வைத்து விளையாட வேண்டிய வயது. நான்காம் வகுப்பு படிக்கும் இவரின் தந்தை மோகன்ராஜ், மெகா குடிகாரர். குடியால் கணவன், மனைவிக்கும் தினமும் பிரச்னை. ஜோதிமணியோ தினமும் அப்பாவிடம் 'ப்ளீஸ், குடிக்காதீங்கப்பா' என்று கெஞ்சியும், அழுதும் அவர் கேட்கவில்லை. பள்ளிக்கு கட்ட வைத்திருந்த பணத்தைக் கூட விட்டு வைக்காமல், குடித்து அழித்துள்ளார்.

உடல் நலமில்லாமல் மருத்துவமனையில் இருந்த ஜோதிமணியைப் பார்க்க வந்த மோகன்ராஜிடம், 'ப்ளீஸ், குடிக்காதீங்கப்பா' என்று மழலை மொழியில் சொல்ல, அன்று மனம் மாறி குடியை விட்டார். இப்போது தந்தையும் மகளும் மதுரையில் உள்ள மதுக்கடைகளின் முன்னால் நின்று, மதுவுக்கு எதிராக பிரசாரம் செய்கிறார்கள்.

உச்சகட்டமாக மதுரை கலெக்டர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் இருக்க முயன்றுள்ளார். கலெக்டர் அழைத்துப்பேசி, 'பதினெட்டு வயசுக்கு மேல உள்ளவங்கதான் உண்ணாவிரதம் இருக்கணும்' என்று அட்வைஸ் செய்து அனுப்பியிருக்கார்.

மதுவுக்கு எதிரான போராட்டத்தில், மதுரையில் இருந்து முதலில் மாணவி நந்தினியும், இப்போது சிறுமி ஜோதிமணியும் புறப்பட்டிருக்கிறார்கள். சின்னஞ்சிறு சிறுமி போராடும் போது, பாதிக்கப்படும் பெண்கள் ஏன் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும்? பொங்கி எழ வேண்டாமா? ●

tamilmagazinesblogspot.com


THE ULTIMATE WINNER!
www.dixcyscott.com
DESIGNER VEST
DIXCY
SCOTT
INNERWEAR
பனியன்கள
மற்றும்
ஜட்டிகள்
www.scottshoppe.co.in
FOLLOW US ON :
An Innovative Product of
DIXCY
Customer care: 0421-3061234 | enquiry@dixcyscott.com


SuperGood films (P) Ltd
R.B.CHOUDARY PRESENTS
ஜனவரி 10 முதல்
ஜில்லா
R.B.சௌத்திரி
R.T.நேசன்
THAMEENS RELEASE

KUMUDAM Regd. No. TN/CCN/366/2012-2014 & WPP No. TN/CCN/43/2012-2014. Registered with the Registrar of Newspapers for India under No. 12061/57 (Registered as a Newspaper in Srilanka Regd. No. QJ/105/82) Day of Publishing : Every Wednesday.
Kum: 15-01-2014

